உ

பராதேவி துணை.

ஸ்ரீ பார்வதி அம்மன் சோபனம்.

இஃது

சென்னை

R. S. சுப்பலக்ஷுமி அம்மாளால்

பிரசுரிக்கப் பட்டது.

மூன்றாம் பதிப்பு.

(*Copy Right Registered.*)

காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

MADRAS.

THE COMMERCIAL PRESS.

1917.

Price Annas, 4.] [விலை அணா, 4.

உ

பராதேவி துணை.

ஸ்ரீ பார்வதி அம்மன் சோபனம்.

" இணைவிழைச்சுக் கடமதனை யுயிர்க ளெய்த
விருந்ததிருக் கோலமென வெழுங்கொள் கைதப்
பணையுரைக்கு மபிராம விமலன் தன்னைப்
பாரமெல்லாங் கொண்டாடும் பான்மையனிற்றுச்
துணையிரட்டை கொழுந்தோளிற் றுலங்கா நின்ற
தும்பைநறு மலருடனே தோன்றி நின்ற
கணையிரட்டை யணைபூண்டி யுமையோ டுற்ற
கலியாண சுந்தரனைக் கருதி வாழ்வாம்"

பரதேவி துணை.

முகவுரை.

ஸ்காந்தபுராணக் கதையை நமது தமிழ்நாட்டு ஸ்திரீகள் சுலபமாய் தெரிந்துகொள்ளும்படி பாட்டு ரூபமாய் அமைக்கப் பட்டுள்ள இந்தப் "பார்வதி சோபனம்" என்பது வெகுகாலமாய் கர்ண பரம்பரையாய் வழங்கி அனேகசொற்கள் உருவில்லாமல் மறைந்துபோயும் இன்னும் சுபகலியாணகாலங்களில் சிற்சிலரால் மட்டும் சிலபாகங்கள் பாடப்பட்டு வந்துகொண்டிருக்கிறது.

விட்ட விடம் தொட்ட விடம் தெரியாமல் சொற்பிழைகள் மலிந்து சீர் கெட்டுப்போயிருந்த வாக்கியங்களை அனேகவிடங் களில் வெகு கஷ்டப்பட்டுச் சேகரித்து பலதடவை திருத்தி எழுதி உருவாக்கித் தன் சிரமம் வீண்போகாமல் இதை அச்சிற் பதிக்க வேணுமென்னும் பேரவாக்கொண்டிருந்த என் தாயாருடைய முக்கியமுயற்சியினால் இது இப்பொழுது வெளியாகநேர்ந்தது.

இதிற் சேர்க்கப்பட்டிருக்கும் "தக்ஷிணாமூர்த்தி உபதேசம்" என்னும் பாகமானது எளிதிற் புலப்படும்படியான அதனுடைய வேதாந்த ஸாரத்திற்காக அனேகரால் மிகவும் மதிக்கப்பட்டுள் ளது. சிவன், விஷ்ணு, பிரும்மா, தேவேந்திரன் முதலானவர்களை ஏசிப்பாடியிருக்கும் பாகங்களால் இதர புராணங்களின் சில முக்கியமான விசேஷங்களையும் தெரிந்துகொள்ள இடமுண் டாகும். கலியாணகாலங்களில் பெண்குழந்தைகளால் பாடப் பொருத்தமான சில தனிப்பாடல்களையும் தகுந்தவிடங்களில் சேர்த்திருக்கிறேன்.

எழுதிப்படிக்கத்தெரியாமல் முற்காலத்து ஸ்திரீகள் ம்மா திரியான பாடல்களை மனப்பாடம்செய்து புராணக்கதைகளை

கன்றாய்த் தெரிந்துகொண்டு வெகுபக்தி சிரத்தையோடு இருந்திருக்கிறார்கள். தற்காலத்திற் பெண்டுகள் படிக்க அனேக சௌகரியங்களும் இலகுவான அச்சும் ஏற்பட்டு, மனப்பாடம் செய்ய வேண்டிய ஆவசியகம் மிகவும் குறைந்துபோய் விட்டபடியால், மறைந்துபோய்க் கொண்டிருக்கும் இப்படிப்பட்ட சிலாக்கியமான பாடல்களை உயிர்ப்பித்தல் மிகவும் உபயோகமுள்ளதாகுமென்று இதை அச்சிடலானேன்.

அனேக புராணங்களின் ஸாரங்களும் அடங்கிய இந்தச் சோபனத்தை சகலரும் படித்து ஸ்ரீ பார்வதிதேவியின் கிருபைக்குப் பாத்திரராவார்களாக.

Triplicane
April, 1917.

R. S. சுப்பலக்ஷ்மி.

இந்தச் சோபனத்தை
தன் பேத்திகள் கொள்ளுப் பேத்திகளுக்கு
மனப்பாடஞ் செய்யச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு
தானும் மகாபக்தியுடன் பாடிக்கொண்டிருந்த
என் மிகவும் அருமையான
கொள்ளுப்பாட்டி (பிரபிதாமஹி)
சுப்பம்மாள் என்பவருக்கு
ஸமர்ப்பிக்கிறேன்.

R. S. S.

உ

பரதேவி துணை.

ஸ்ரீ பார்வதி அம்மன் சோபனம்.

விநாயகர் துதி.

சிரஸில் தும்பி விநாயகனே, ஸ்ரீஹரியார்தன் மருமகனே
ஹரிசகோதரி யாள்மகனே, ஆதிமூர்த்தி விநாயகனே
அமர்ந்த சுந்தர நடையனே, சிவந்த பங்கஜ நயனனே
தளர்ந்த தொந்தி விநாயகனே, பணிந்து பாடுவோம் சோபனமே.

அம்பிகை துதி.

பார்வதியாள் சோபனத்தை, பக்தியுடனே நான்பாட
ஈஸ்வரியே என்னுடைய ஹிருதயந்தன்னில் வாருமம்மா
ஏர்வையான பெண்மணிகாள் இன்பமுடன் கூடிக்கொண்டு
கோர்வையாகவே நின்றுகொண்டு, குனிந்து பாடுங்கள் சோபனத்தை

தாக்ஷாயணி அவதாரம்.

பிரமனிடத்தில் உதித்தவராம் பிரம்மாண்ட சிருஷ்டிவகித்தவராம்
அக்ஷரநாயகி பாலகராம் தக்ஷப்பிரஜாபதி என்பவராம்
அகிலபுவன சிருஷ்டியிலே அதிகசிரத்தை யுடன்கூடி
அமரர்மண்டல மத்தியிலே ஆதித்தன் ஒளிபோலிருந்தார்
சகலபுவன காரணியை சச்சிதானந்த ரூபிணியை
அச்சுதருக்குச் சகோதரியை தக்ஷரும் நோக்கித் தவமிருந்தார்
பச்சைவர்ணமேனி யம்மனவள் பிரத்தியக்ஷமாகி எதிரில்வந்து
இச்சையுடனம்மன் தக்ஷரைநோக்கி என்னவரம் வேணுங்கேளுமென்றாள்
5. போற்றிசெய்து தக்ஷரும் அம்மனை (தன்) பெண்ணாகவரக்கேட்டுக் கொண்டார்

பார்த்துஅம்மனும் கிருபையுடனே பாலையாகவே தோன்றி நின்றாள்
அன்புடனே குழந்தையைக்கொண்டு அரண்மனைக்கே வந்துவிட்டார்.
இரந்துகிடந்த விதிகுலத்திலே பிறந்ததைக்கண்டு தக்ஷரப்போ
பந்துஜனங்களுடன்கூடி சந்தோஷங்கள் கொண்டாடினார்.

தக்ஷப்பிரஜாபதி கன்னிகைக்கு தாக்ஷாயணியென்று பேருமிட்டார்
நித்ய கல்யாணியின் பாலலீலைகளை நித்தியம்பார்த்துமகிழ்ந்திருந்தார்.
நீர்க்கரையின் அருகுநிறம்போலே நித்தியகல்யாணி வளர்ந்துவந்தாள்
இந்தப் பெண்மணிக்கு ஏற்றகணவன் ஈசுவரனென்றே நினைத்திருந்தார்
பரமசிவனும் எழுந்தருளிப்பரா சக்தியைக் கலியாணம் பண்ணிக்கொண்டு
10. அமைந்தகைலை மத்தியிலே சிவன் அம்மனுடனே வசித்திருந்தார்.

தக்ஷப்பிரஜாபதியக்யம்.

தக்ஷப்பிரஜாபதி யக்யம் செய்யும்போது அக்ஷயமானந்த ஈஸ்வரியை
கக்ஷிகூடி அழையாமலம்மனை பக்ஷபாதமாய் தக்ஷனிருந்தான்
அந்தமுமாதியு மற்றசிவன் எந்தவிதமாய்த் தடுத்தாலும்
பெற்றபிதாவென்ற பாசத்தினால் குற்றம் பரிகாரஞ் செய்யவென்றே
தேவியும் மெத்த ஆசையுடன் தோழிமாரை அழைத்துக்கொண்டு
வாழைமரம்போல் தொடையுடையாள் அரைநாழிகையிலே வந்துவிட்டாள்
யக்யசாலையில் வந்த அம்மனை யக்யரூபியென்றெண்ணாமல்
அக்யானத்தாலே தக்ஷரும் அம்மனை ஆதரிக்காமலே தானிருந்தார்.
15. அம்மனும் மிகுந்த கோபத்துடனே அந்தக்ஷணமே மனந்தளர்ந்து
அப்போதே சொன்ன ஆண்டவன் வார்த்தையை ஆதரித்தாலிதுநேராதே
துக்கத்துடனே தயங்கி யம்மனும் விக்கி விக்கி யழுதுகொண்டு
பத்தினிமாருடன் வீற்றிருக்கும் பெற்றதாயண்டையில் வந்துநின்றாள்.
புத்தியில்லாத தாயாரும் பரி பூரணியென்று எண்ணாமல்
சற்றும் மதிக்காமலே யிருக்க அதைச்சங்கரி ஆற்ற முடியாமல்
இதுகிரகசார வேளையென்றுஎண்ணி இருள்மூடன் யக்ய சாலைவந்து
இந்த அவமானந்தன்னை சங்கரர் கேட்டால் அபசாரம் நமக்கென்றுஎண்ணி
சிவனருகில் போனாலும் நம்மை தகிப்பரே நம்மைச் சேரார்களே
ஈசரின்வார்த்தையைத் தட்டின நமக்கு என்னபிராயச்சித்தம்செய்வோமென்று
20. துணிந்துவிட்டாளக்கினியில் விழ சிவ அபராதம்தீரவென்றே
யக்ய அக்கினித்தீயிலே விழ சித்தமாகவே ஓடிவந்தாள்
ஒத்ததோழிமார் ஓடிவந்து எத்தனைவிதம் மறுத்தாலும்
சற்றும்மனது திரும்பாமல் அம்மன் தீயில் குதித்து மறைந்துவிட்டாள்.

வீரபத்திரமூர்த்தி தக்ஷன்யாகத்தை அழித்தல்.

அம்மன் தீயில் குதிக்கவுமே அந்த சபையோர் நடுங்கிவிட்டார்கள்
அதையறிந்து மஹாதேவர் அக்கினிக்கண்ணைத் திறந்துவிட்டார்

சற்றேகோப மடையுலுமே அப்போது குதித்தார் வீரபத்திரர்
யக்யசாலையில் ஓடிவந்து இந்திராதிதேவர்களையடித்து
தக்ஷப்பிரஜாபதியின் தலையை அக்கினி தன்னிலே போட்டுவிட்டார்.
அப்போதந்த அமராளெல்லாம் ஆதிசிவனண்டை ஓடிவந்து
25. ரக்ஷியுமையா சரணமென்னவே முக்கண்ணர் கோபந் தெளிந்துவந்து

ஒட்டிப்பிர ஜாபதிக் காட்டுத்தலையை யக்யத்தை நிறைவேற்றிவைத்து
தக்ஷிணாமூர்த்தி வடிவத்துடன் தெற்குமுகமாய்த் தவமிருந்தார்
சித்தர்வடிவமாய்த் தானிருக்கச் சனகாதி முனிவர்கள் தானும்வந்து
தக்ஷிணாமூர்த்தியைத் தான்பணிந்து தத்துவ உபதேசங் கேட்கலுற்றார்

தக்ஷிணாமூர்த்தியான பரமசிவத்தை சனகாதிகள் துதித்தல்.

அகவல் மெட்டு.

ஆதிமுதலே அகண்ட ஒளி யானவரே
(சிவந்த) மேகநிறத்தவரே விவேகமுரைப்பவரே
ஞான முரைக்கவென்றே ரூபமெடுத்தவரே
அஞ்ஞானம் போக்கவென்றே அவதாரமானவரே
சுத்தஸ்வரூப சுருதிமறைப்பொருளே
சுத்தஸ்வரூப சுருதி சொல்லுக்கெட்டாதவரே
ஆத்மஸ்வரூப அகண்டரஸமானவரே
ஆரோக்யஸ்தானத்தில் அமர்ந்திருக்குமாண்டவரே
ஜனனவியாதிக்கு அவிழ்தமிட்டதேசிகரே
சஞ்சிதகர்மத்தை சுட்ட தக்ஷிணாமூர்த்தி
தீருமைய்யா எங்களது ஜன்மவினையையென்று
சனகாதியோகியரும் சீர்பாதத்தில்பணிந்தார்.

தக்ஷிணாமூர்த்தி உபதேசம்.

(வேறு மெட்டு

1. சின்மயஸ்வரூபரான தக்ஷிணாமூர்த்திதானும்
   தேசிகராய் யோகிகளுக்கு
2. (சற்றும்) சந்தேகமன்றியிலே அகண்டமெல்லாம் ஏகமென்று
   சொல்லிநின்றவாக்கியஞ்சொல்ல

3. வெள்ளைநிறமாயிருக்கும் வேதாவின்நாயகியும்
விநாயகரும் நாவில்வசிப்பீர்

4. (சற்றும்) கங்குகரைகாணாமல் சம்சாரசாகரத்தில்
என்னசெய்வோம் என்றலையும்பேர்

5. (சுவாமி) செந்தாமரைப்பாதத்தை தியானம்பண்ணி தினந்தோறும்
சிந்தைதனில் கண்டுபணிந்தால்

6. (அவர்) அஞ்சாதேயென்றுசொல்லி ஆத்ம திருஷ்டியால்பார்த்து
(அவாள்) தன்தாபம் மூன்றையும்போக்கி

7. பொங்கித்ததும்பும்மனம் சிரவணப் பொழுதால் ஒழிவடைய
போதித்தார் வாக்கியந்தன்னை

8. சந்ததமும் தைலதாரைபோல பக்திபண்ணிவரும்
சனகாதியோகி நால்வரும்

9. (சுவாமி) தாளடியிலேபணிந்து தத்துவங்கள் கேட்கலுமே
தக்ஷிணாமூர்த்தியும்சொல்வர்

10. பூதமைந்தைப் பிரியென்பர் போதந்தன்னையறியென்பர் (மனப்)
போக்குவர வற்றிரு என்பர்

11. ஆசைதன்னை ஒழி என்பர் ஆத்மவிசாரணை பண்ணென்பர்
(பிரும்) மானந்தமாய் நீ யிரு என்பர்

12. விஷயத்தைவிடுவென்பர் வேதாந்தங்கேளென்பர்
மோகாந்த காரந் தள் ளென்பர்

13. ஏகாந்தமாயிருந்து ஆராய்ந்து பார்த்தாயானால்
வாராது வாசனையென்பர்

14. சாகாஸமாய்த்துணிந்து சர்வத்திலும் பற்றுதலற்று
ஆகாசம் போலிருவென்பர்

15. பக்திவிரக்திதன்னை பிரதிதினம்பண்ணி வந்தால்
பழுதுனக்கு வாராதென்பர்

16. ஸப்தஸ்பரிசரூப ரசகந்தவாசனையை
தைரியத்தினாலே தள்ளென்பர்

17. கட்டுப்படாதமனதை வணக்கித் திருப்பி நல்ல
சத்வாசனைக்கு விடென்பர்

18. மனம் புத்தி அகங்காரம் சித்தம் சிவத்துடனே
ஒத்து லயமாய் விடுமென்பர்

19. மலடிமைந்தன் போல இந்தமனதினால் வந்ததெல்லாம்
பதினாலு உலகமுமென்பர்

20 (சற்றும்) பிரமையாதேபாரென்பர் பார்த்தால் இரண்டில்லையென்ட
அசையாமல் தியானம் பண்ணென்பர்

21. (ஜீவ) ஆத்மபக்தி தேகபக்தி அது இரண்டும்பித்தையென்பர்
அறிந்து அதை விட்டுத்தள்ளென்பர்

22. தீர்க்ககாலபிரமைதன்னை திடங்தாரும் சிரவணத்தால்
போக்கிவிடு என்று சொல்லுவர்

23. மனனத்தைப் பண்ணியே வஸ்துவாக நீ யிருந்தால்
ஹிருதயக்கிரந்தி அற்றுப்போமென்பர்

24. நிதித்யாஸனந்தன்னிலே நிர்விகாரியாருந்தால்
இரண்டுமொன்றாய் காணலாமென்பர்

25. பொறுமையுடனேகூடி பூததயவுபண்ணிவந்தால்
(பரி) பூர்ணவடிவாகலாமென்பர்

26. காலமென்றும் தேசமென்றும் கலங்காதே யிரு என்பர்
கற்றுணர்ந்து உற்றுப்பாரென்பர்

27. அருமையான ஆத்மக்யானம் அதுவுமெளிதாகிவிடும்
அறிந்துவிட்ட பின்பாகவென்பர்

28. தர்ப்பணத்துப் பிரதிபிம்பம்போல ஜகம்தள்ளென்பர்
தத்தபடம் போலபாரென்பர்

29. சொப்பனந்தானிப்பிரபஞ்சம் சுத்தப்பொய்யிதென்று தள்ளி
செப்பிடுவித்தை போல எண்ணென்பர்

30. சுழுத்திபோல சாக்கிரத்தின் சுக துக்க மிரண்டையும்
சமபுத்தியாகப் பாரென்பர்

31. மூலாதாரத்தின் வழியை மூச்சடக்கியேவிட்டு
(மூல) மூர்த்திதன்னை தியானம் பண்ணென்பர்

32. தொம்பதத்தை தற்பதத்தை சோதித்துப்பாரென்பர்
தோன்றுமப்போ தன்வடிவென்பர்

33. ஆறாதாரந்தனிலே அதிஷ்டான தேவதைகள்
ஆறிருக்கின்றார் பாரென்பர்

34. சகஸ்திர தளத்தின்மேலே சக்தியுடன் சங்கரனார்
தாமிருக்கின்றார் பாரென்பர்

35. உற்சாகத்தோடிருக்கும் உவமையற்ற ஞானியர்க்கு
(இந்த) உண்மை வழி தோன்றிடுமென்பர்

36. அறிவுகெட்ட அக்யானி அறிவுவந்து ஈடேற
ஆலயத்தில் ஈசனுண்டென்பர் [தீர்த்தம்

37. (பெரியவாள்) இருக்கின்றதே சிவஸ்தலம் தண்ணீரெல்லாம் புண்ய
பார்த்ததெல்லாம் மூர்த்திதானென்பர்

38. எத்தனை தான் சொன்னாலும் எல்லாம் ஒன்றுதானென்பர்
இன்னதென்று சொல்லாதென்பர்

பெட்டகத்திலுள்ள பூஷணமும்பூட்டி தொட்டிலுக்குள்ளே வளர [விட்டாள்;
மாயாதாரிக்கு ஏற்றவளை தானே ஜெகத்தில் நிறைந்தவளை ,
ஆராரோ வென்று பாட்டுப்பாடி தாலாட்ட அம்மன்கண் வளர்ந்தாள்

அம்பிகையின் தாலாட்டு.

சிந்தைமகிழ்ந்து (சிவ) சங்கரியைத் தாலாட்ட
கந்தனுக்கு முன்பிறந்த கற்பகமே முன்னடவீர்
பாருலகம் வாழ (ஹிம) பர்வதத்தின் மேலாக
தேவரிஷிகள் துதித்து மலர்சொரிய
ஏழுலகம்போற்ற ஹிமவான் மனங்குளிர
50. தாரணியில் வந்துதித்த (சிவ) சங்கரியைச் சொன்னார்
சித்தாதி யோகியரும் தேவர்களும் கண்டுகக்க
கொற்றவனார் பர்வதரின் குறைதீர்த்த குஞ்சலமோ
சங்கரியோ தாயோ சகலலோக சுந்தரியோ
வன்குறைகள் தீர்க்கும் மலையரசன் சீர்மகளோ
மேனையுட கண்மணியோ வேதாந்தத்தற்பொருளோ
ஆதி சிவனார் அரும்பாகம் பெற்றவளோ
ஜோதிச் சுடரொளியோ சுந்தரப் பூநாயகியோ
பஞ்சாக்ஷரப்பொருளோ பரிபூரணநாயகியோ
கங்கைதரித்து புலியுரித்து மேல்போர்த்து
55. சந்திரனைக்கூட சடைதரித்தார் தேவியரோ
எட்டெழுத்து மெய்ப்பொருளோ ஈஸ்வரனார் நாயகியோ
பக்தர் மனதில் உறையும் பரஞ்சுடரோ
சித்தாந்த யோகியர்கள் சிந்தைகுடிகொண்டவளோ
திரிபுரம் எரித்த சிவகாம சுந்தரியோ
காளி யெதிர்வந்து கனகசபை மண்டபத்தே
ஹாரஞ் சிலம்புகளும் அசைந்தாடுங் கிண்கிணியும்
கோல வளையும் கொத்தருகும் கொன்னை தும்பை
மாலைகளும் சூலகபாலம் ஒளிதிகழ
நீலகண்டமூர்த்தி நிறைந்த கொலுமண்டபத்தே
60. ஆலமுண்டார் பக்கல் அமர்ந்த சிவசுந்தரியோ
ஹிமவான் திருமகளோ ஏழுலக மீன்றவளோ
திருமுலைப்பாலாலே ஜகமெல்லாங் காத்தவளோ.

இருநாழி நெல்கொண்டு எல்லாஉலகுதனை
பதினாலு லோகமும் படியளக்கும் பார்வதியோ
வெள்ளெருது மேலேறி வெள்ளொளியாய் நீறணிந்து
துள்ளுமான் கைபிடித்த சங்கரனார் தேவியரோ
ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ
பாராளும் மேனையுட பாக்கியமே கண்வளராய்

ஸ்ரீ பார்வதியம்மன்பால லீலை.

பக்ஷமுடனே தாராட்டி சீராட்டிச் பார்வதிதேவி வளர்ந்துவந்தாள்
பூர்வபக்ஷத்துச்சந்திரன் போலம்மன் பூரணமாக வளர்ந்துவந்தாள்
வளர்பிறையின் சந்திரன் போலம்மன் வடிவமைந்து வளர்ந்துவந்தாள்
மூன்றுமாஸத்திலம்மனவள் முகம்பார்த்துச் சிரிக்கலுற்றாள்
நாலாமாஸத்திலம்மனவள் நவரத்தினமயமான தொட்டிலிலே
கொஞ்சுங்கிளிபோல புன்சிரிப்புடனே கோமளரூபி அரிதுயின்றாள்
ஐந்தாமாஸத்திலம்மனவள் கொஞ்சிக்குலாவி முகம்பார்த்தாள்
ஆறுமாஸத்திலம்மனவள் ஆயிரக்கால்மணி மண்டபத்தில்
மாணிக்கபதக்கம் பளபளென்ன மாரால் நகர்ந்து விளையாடினாள்
ஏழாமாசத்திலம்மனவள் எங்குந்தவிழ்ந்து விளையாடினாள்
எட்டாமாஸத்திலம்மனவள் எட்டியடிவைத்துச் சித்தடியால்
தந்தைமகிழ தாயார்மகிழ தத்தடியிட்டு விளையாடினாள்
ஒன்பதாமாஸத்திலம்மனவள் ஓடிநடந்து விளையாடினாள்
பத்தாமாஸத்திலம்மனவள் பாங்காய்க்கைகளை யாட்டிக்கொண்டு
தாராராமா காட்டிக்கொண்டு சந்திரன் காட்டி விளையாடினாள்
இரண்டாம்வயது தன்னில் நேரிழையாள் பார்வதிதேவி
தண்டைசிலம்பு சலஞ்சலென்க தத்தடியிட்டு விளையாடினாள்
மூன்றும்வயதி லம்மனவள் மூச்சிலெடுத்துக் கையிற்பிடித்து
சொர்ணமும் முத்தும் கொழித்தெடுத்துத் தோழியுடனே விளையாடினாள்
நாலாம்வயதி லம்மனவள் நாலைந்து தோழியுடன்கூடி [கொண்டு
பொன்னுங்கழக்கோடி யாடிக்கொண்டு பூப்போட்ட சித்தாடை கட்டிக்
பட்டுரவிக்கையும் போட்டுக்கொண்டு முத்தாபரணங்கள் பூட்டிக்
பர்வதர் மேனையும் கண்டுமகிழ பாங்கியருடன் விளையாடினாள் [கொண்டு
ஐந்தாம்வயதில் அம்மனவள் ஐந்தாறு தோழிமார்களுடனே
கஞ்சதள நேத்திரமுடையாள் மஞ்சள புஷ்பம் பூட்டிக்கொண்டு
குழல்கத்தைகளும் தொங்கத்தொங்க கழுத்தி லாபரணங்கள் மின்ன
பந்துவிளையாடித் தோழிமார்களுடன் பால லீலைகளும் செய்துவந்தாள்

ஆரம்பவயதில் அம்மனவள் மாயாதாரியைத்தான் நினைத்து
ஈஸ்வரர் மாதவம் பண்ணும்வனத்திலே ஈஸ்வரி தோழிமார்களுடனே
கூறார் வேல்விழி அம்மனவள் கொண்டுவந்து கோடிபுஷ்பங்களை
ஸ்வாமி பாதாரவிந்தத்திலே அம்மன் சொரிந்து பக்தியுடனாக
80. தேவிதலையை வணங்கிக் கொண்டு சிவனை அடிக்கடி பார்த்துக்கொண்டு
பாராரோ நம்மைச் சேராரோ போகாரோ இவர்கோபமெல்லாம்
வேறே ஒன்றையும் எண்ணாமல் முக்கண்ணர்மேல் மனதாகியம்மன்
தேவி யொடுக்க வணக்கத்துடன் சிவனை பூஜித்துக்கொண்டிருந்தாள்
ஆதியந்தமற்ற சங்கரரும் அறிந்து மறியாதுபோலிருந்தார்
பார்வதிதேவியைப் பாராமல் பராமுகமாகச் சிவனிருந்தார்.

பரமசிவன் மன்மதனை தகித்தல்.

தாருகாஸுரன் சூரபத்மன் சிங்கமுகன் இம்சையினால்
தேவலோகம் பறிகொடுத்து தேவர்களும் மெத்தத்தான் தவித்து
காடுமலைகள் எல்லாமலைந்து சோகத்துடன் விசாரப்பட்டார்
சூலபாணி உமையுடனே கூடிக் கோபமெல்லாந் தான்தணிந்து
சூரசம்ஹார சுப்பிரமணியமூர்த்தி பூர்ணமாய் வந்தவதரித்தால்
85. தீரும் நம்முடைய கஷ்டவினையென்று தேவர்களெல்லாம் எண்ணமிட்டு
அதிரூபமுள்ள மன்மதனைத்தேவாள் ஆதிமூர்த்தியிட்டமனுப்ப
தீரனுமந்த மன்மதனும் (இனிப்) போறகாலமென்றெண்ணாமல்
சூலபாணியின் முன்பாகவந்து பாதம்போற்றி நமஸ்கரித்து
தேகமெல்லாம் நடுநடுங்கக் காமன் மோகமானகணை தொடுத்தான்
தேவியப்போ சமயமென்றெண்ணி சொர்ணமாலையைக் கொண்டுவந்து
பிராணநாயகர் கையிற்கொடுக்க ஸ்வாமி வாங்கித் தரித்துக்கொண்டார்.
ஆசீர்வாதங்கள் பண்ணி சாம்பவர் அந்தரங்கமான பிரியத்துடன்
நாசமில்லாத வஸ்துவைக் கூடியே நேசமாயிருவென்றுரைத்தார்.
காமன்மேலே கோபத்துடன் சிவன கடுகடுத்த பார்வையுடன்
90. நெற்றியின் கண்ணைத்தான் திறந்து நீறுசெய்தாரந்த மன்மதனை
வேறே ஒரு வனந்தனிலே லோகநாதரும் போய் மறைந்தார்
நான்முக இந்திராதி தேவரெல்லாம் சாம்பலாய்ப்போன மன்மதனை
பிராணனான ரதிதேவிக்கும் பூமியிலுள்ள பிரஜைகளுக்கும்
அரூபத்துடனே சுகிப்பாயென்று ஆசீர்வாதங்கள் பண்ணினார்
தேவி சுந்தரி நாயகியம்மனும் மோசம்வந்ததே என்று சொல்லி
சோகமோக விசாரத்துடன் சில தோழிமார்களைக் கூட்டிக்கொண்டு
பூர்ணமான பலங்கள் தரும்நல்ல புண்ணிய தீர்த்தங்கள் ஆடிவிட்டு

வாராரிந்தத் தபங்களுக்கு இது போராதென்றம்மன் எண்ணிக்கொண்டு
நீராகாரமும் நித்திரையும் விட்டு சீத உஷ்ணமெல்லாம் தான்சகித்து
95. நீலகண்டரைச் சிந்தையில் ஸ்மரித்து நித்திய கல்யாணி தபசிருந்தாள்.

பரமசிவம் கிழக்கோலத்துடன் தோன்றி அம்பிகையின் மனதைச் சோதித்தல்.

மன்மத ஹாரியும் அம்மனுடைய மனதைச் சோதிக்கவேணுமென்று
நன்மையை வேண்டிய அம்மனிடம் நடுக்கல் கிழவன்போல வந்தார்
கொம்பில் பழுத்த பழம்போல கோவைப்பழத்தின் நிறம்போல
அன்புள்ளபேர்க்கு தனம்போல ஆதித்தனுட ஒளிபோல
தும்பைப்பூபோல நரைத்ததலையும் தோளிலேதூக்கின சஞ்சிகையும்
தம்பலச்சாறு வடியவடிய தளர்ந்து தொங்கிய புருவமும்
சுழித்துவாங்கும் மேல்மூச்சும் சோர்ந்த நடையும் இருமலும்
தனித்துத்துணையும் இல்லாமல் தம்பட்டம் கேளாத காதுடனே
கங்கணங்கையில் தரித்துக்கொண்டுநல்ல மங்களவாக்கியம் சொல்லிக் கொண்டு
100. எங்கே போறாய் பெண்ணே எங்கேபோறாய் புங்கமரத்தின் நிழலோடே
எந்தனுக்கிப்போது பெண்சாதி இல்லை கன்னியைக் கல்யாணம்

வந்தவழியிலே உன்னைக் கண்டேன் தள்ளாடத்தள்ளாட ஓடிவந்தேன்
உத்தனழகைக் கண்டபின் எனக்குப் பின்னே போகவும் கால்வருமோ
எங்கே நீ ஓடி ஒளித்தாலும் அங்கெல்லா முன்னுடன் கூட இருப்பேன்
உன்னை இனிவிடப் போறதில்லை இப்போ எந்தனுக்கு மாலைசூட்டிவிடு
என்னைத் தவிறவும் இந்த உலகத்தில் உனக்கேற்ற நாயகரைக் காணேன்
நில்லு பெண்ணே யங்கே நில்லு பெண்ணே என்று அள்ளுகிழவனுஞ் சொல்லவுமே
கண்டு கல்யாணியும் கண்சிவந்து காலகெதியோ இதுவுமென்று
எட்டாதவனைக் காட்டிலே இப்போ ஏதடிதோழி இது பழியோ
105. துஷ்டனான கிழவனிப்போ சொன்னவார்த்தையைக் கேளுங்கோடி
ஏதடிஏதடி ஆச்சரியம் எங்கேகிடந்த கிழவனடி
தோதகமே இங்கு ஆடுகிறானிவன் சுத்தப்பயித்தியக்காரனடி
வாயினில் வாராதவார்த்தைகளைச்சொல்லி வந்தொருஜாமமாய்ப்புலம்புகிறான்
ஆரடி உத்தாரம் சொல்வாரிவனுக்கு அந்தரமான காட்டினில்
காரணமோ கதையோ புராணமோ பாரதமோ படாப்பழியோ
காலஞ்சென்ற கிழவனுக்குக்கல்யாணமும் வேணுமோடி

வயதுசென்ற கிழவனுக்கு வாழ்க்கைப்படவும் வேணுமோடி [கொண்டு
மல்லிகைமாலையைப் போட்டுக்கொண்டு மாப்பிள்ளைக் கோலமுஞ் செய்து
மன்னவனம்மான் தோளில்மேலேறி நீ மாலையிடவுந்தான் மாட்டுவையோ
110. காலினிற்பாலைத் தெளித்துக்கொண்டு கன்னியூஞ்சலு மாடிவிட்டு
பச்சைப்பொடியுஞ் சொரியட்டும்போது பந்தலிலுன்னைக் கண்டவர்கள்
உற்றுறுறவார்க ளத்தனைபேர்களும் உதட்டைமடித்துன்னை நாப்பாரோ
போடா போடா கிழவா நீ போக்கிடங்கெட்ட கிழவா நீ
வீடுபோ வென்கிற வேளையிலே உன்னை காடுவரச்சொல்லுங் காலத்திலே
நாடியே இப்போ தென்னைக்குறித்து நடுக்கல் கிழவாதொடராதே
அஞ்சுவயதுக் குழந்தையுடன் நஞ்சுண்டவன்போல் மயங்காதே
இங்கே வந்தென்னைத் தொடருவதை எங்கள் பர்வதராஜர்கண்டால்
உன் தலைக்காக் கினைவந்து விடும் உனக்குப் பின்பலமாக ஒருவரில்லை
என்னுடை வார்த்தையைக் கேட்டுக்கொண்டு உன் தலையைத் தப்பவைத்துக் ' கொண்டு
115. பின்னே மலங்கமுழியாமல் பேய்க்கிழவா ஓடுமென்று சொன்னாள்.
ஓடுமென்றம்மன் சொல்லலுமே அந்த நீலகண்டர் சிரித்துக்கொண்டு
எத்தனை சொல்லித் தடுத்தாலும் ஈசர் குறுக்கே மறைத்துக்கொண்டு
(உன்) சித்தத்தில் வைத்த கணவனை எனக்குச் சற்றே உரைத்தாலாகாதோ
அத்தைக் கேட்டந்த பார்வதியும் ஆச்சரியமோ இதுவுமென்று
உத்தார மிவர்க்குச் சொல்லாதிருந்தால் உற்றார் உறவார்க்கு ஏச்சாகும்
உத்தாரம் கல்லெறிந்தாப்போலே உத்தண்டமாக உரைக்கலுற்றாள்
கேளடா நீ நரைத்தலையா இப்போ கேடுபுத்தி நினைத்தவனே
வேரடா இதுபாவமரத்துக்கு வெட்டிவார்த்தைகள் சொல்லாதே
கோடி சூரியன் உதித்தாப்போல எம் கோமளரூப சங்கரரை
120. நாடிமனதில் வரித்திருக்கும் என்னை ஓடிவந்து நீ மறிக்காதே.
தொண்டு கிழவனிதைக் கேட்டு தொந்திகுலுங்கச் சிரித்துக்கொண்டு
குண்டலங்காதில் குலுங்கவே கூனிக்கொண்டு தடி ஊணிக்கொண்டு
ஈழல் இருமலும் நெஞ்சையடைக்க இருமி எங்கிலுந் துப்பிக் கொண்டு
தேவிமனதைச் சோதிக்கவென்றே சிவனுமப்போ எடுத்துரைப்பார்
ஏளிதப்பட்டவளே அசடே எங்கேகிடந்தவன் நோக்குவந்தான்
காலைக்குப்புல் அறுக்கவேணும் அந்தக் காமரூபிக்கு வாழ்க்கைப்பட்டால்
சோளி கையில்பிடித்துக்கொண்டு தொண்டுவேலைகள் செய்துகொண்டு
காஷாயவஸ்திரம் தரித்துக்கொண்டு கப்பரைகைதனில் ஏந்திக்கொண்டு
சேமகலத்தை யடித்துக்கொண்டு தெருத்தெருவாயிரந்து கோண்டு
125. நாளைக்குஎன்செய்யப்போறோமென்று அறுபது நாழியுமிரந்துகொண்டு

வீட்டுக்குவீடு இரக்கவென்றிருந்தால் (உன்) விதியைத்தானுந்தொலைக்கப் [போமோ
நாட்டிலே வேறிடத்திலே (உனக்கு) நல்ல கணவன்கிடையாதோ
தாயில்லை பெற்றதகப்பனில்லை தம்பித்தமயனொருவரில்லை
பாயில்லை நல்லபடுக்கையில்லை பால்கறக்கப்பசுவுமில்லை
வெங்கலமில்லைவிளக்குமில்லை மங்கில்யத்துக்குவகையுயில்லை
குடிக்கப்பாத்திரமொன்றுமில்லை ஒருபடிவடிக்கவும் ஏனமில்லை
அங்கம்மூடத்துணியுமில்லை சற்சங்கதியில்லை ச்ரவணமில்லை
இங்கிதமில்லை தரித்திரக்கடலுக்குக் கங்குமில்லைகரையுமில்லை
பங்குமில்லையொரு இடத்திலும் பொங்கித்தின்க நிழலுமில்லை

130. பணமுமில்லை ஒத்தைவிருஷபத்தில் புனைக்கவேறுஎருதுமில்லை
பாம்பைஉடம்பில்பூணுவன் பாடிக்கொண்டேகூத்தாடுவன்
சாம்பலைமேனியில்பூசுவன் ஜாதிஎனக்கு ஏதுஎன்பன்
புலித்தோலை உடுத்திக்கொண்டு பூதஞ்சிக் காரியஞ்செய்துகொண்டு
ஆனைத்தோலையும்போர்த்துக்கொண்டு ஆகாதவேலைகள்செய்துகொண்டு
பூனைபோல இருந்துகொண்டு பூமிகளெல்லாம் நிறைந்திருப்பன்
அஸ்திமாலைதரித்துக்கொண்டு அன்புடனேபூஜைபண்ணிக்கொண்டு
நெற்றியிலேகுறுக்கிட்டுக்கொண்டு நேமத்துடன் இருந்துகொண்டு
பாதக்குறட்டின்மேலேறிக்கொண்டு பாடிக்கொண்டுஎங்குமாடிக்கொண்டு
காதிலே செம்புக்கடுக்கனிட்டுகையிலேமாலைப்பிடித்துக்கொண்டு [கொண்டு

131. தோளிலேபையைப்போட்டுக் கொண்டு தந்தினப்பாட்டைப்பாடிக்
குருபாதம் நினைத்துக்கொண்டு குங்குமப்பொட்டையுமிட்டுக்கொண்டு
அரகரசிவ வென்றுசொல்லித் தர்மபிட்சை எடுத்துக்கொண்டு
இப்படி எல்லாம் திரிந்து அலைந்து இரந்துபிட்சை புஜித்துக்கொண்டு
உப்புக்கும் உதவாதவன் அசடன் ஒப்பாவனோ உனக்கிணையோ
ஒப்பில்லாதவன் உன்கணவன் பம்பரம்போலே அலைகிறவன்
காலைத்தலையை வலித்தாக்கால் கண்கரித்தமனுஷ்யருண்டோ
கூலிகொடுத்திடக்காசு முண்டோ கொண்டைப்பூவைத்துமுடிப்பாருண்டோ
காலைவேளையில் தயிரும் பழையதும் தாலம்வைத்து இடுவாருண்டோ
நீலவிழிக்கு மையிடுவாருண்டோ நீலவேணி முடிப்பாருண்டோ [மென்றுய்

135. இப்படிப்பட்ட தரித்திரக்கடலுக்கு எப்படி வாழ்கைப் படுவோ
டகுமுண்டுபணமுமுண்டு (எனக்கு) தங்கக்கட்டிகள் வேணதுண்டு
பாக்யமுண்டுபலமுமுண்டு போகபாக்கியங்களும் வேணதுண்டு
பட்டாடைகளும்வேணதுண்டு பணிப்பெண்கள் வெகுபேருமுண்டு
உடமை வேணதுபூணலாம் உடுபுடவைகள் பட்டாயுடுக்கலாம்

பிடிபிடியாய் பணத்தை எடுத்து உடற்பிறப்புக்குக் கொடுக்கலாம்
வேதம்வரும் சாஸ்திரங்கள்வரும் விதவிதமாய் வித்தைவரும்
இந்திரஜாலம்முதலான இஷ்டசித்திகளெனக்குவரும்
மாயையெனக்குவசமாவள் மாயைக்குநான்வசமாவதில்லை
பத்துத்தரமாய் உனக்குச் சொன்னேன் பரமேசர் ஆசையைவிட்டுவிடு
இஷ்டமான ஆசையுடனே எனக்கு மாலையைப்போட்டுவிடு

பரமசிவத்தின் மகிமைகளை பார்வதி தேவி எடுத்துரைத்தல்.

தத்துப்பித்தென்றுகிழவனுரைத்திட சங்கரிநாராயணிகேட்டு
(தன்) சித்தத்தையும் திடப்படுத்தி சிவசங்கரரைமனதிலெண்ணி
எத்தையடாவந்துபேத்துகிறாய் எங்கள் சிவன்மேலே நிந்தனையாய்
மற்றொருவர்வந்து சொல்லிஇருந்தால் வாங்கி வைப்பேன் அவர் தலையை
விட்டேன்வைதீகரானதினால் வயதுசென்றகிழவரென்றே
எட்டப்படாதமகிமையுள்ள (எங்கள்) ஈசர்மகிமையைச்சொல்லவென்றால்
சப்தரிஷிகளுந்தாமறியார் சேஷசாயியும் சொல்லமாட்டார்
சற்றேஎனக்குத்தெரிந்தமட்டும் சொல்லுவேன்கேளடாபேய்க்கிழவா
பட்டிலேயுள்ள சிவப்புமன்று(சுவாமி) பாலிலேயுள்ளவெளுப்புமன்று
துஷ்டர்மனதுக்கறுப்புமன்று சூர்யஉதயத்தின் காந்தியன்று
கட்டையோநெட்டையோமட்டமோவென்று கண்டபேர்கள் ஒருவரில்லை
வெட்டவெளியாய் நிறைந்தபிரமம் விசுவமெல்லாந்தானே ஆனவர்க்கு
ஸ்தூலமோ அல்லது சூட்சுமமோவென்றுசொல்ல ஒருவரால் ஆகாது
பெற்றோர் ஒருவர்க்குப்பிள்ளைஎன்றால் வஸ்துவிலேஇரண்டுண்டோடா
ஒக்கப்பிறந்த பிறப்புஎன்றால் ஒன்றுதானே இரண்டாகுமோடா
தாயுந்தகப்பனு மற்றாலென்ன தானேஜகத்தில் நிறைந்தவர்க்கு
வாயும்வயிறு மிருந்தாலென்ன வாக்குக்கு அப்புறப்பட்டவர்க்கு
கச்சையரையில்தரித்தாலென்ன நிச்சலனாகி இருந்தாலென்ன
கந்தையரையில் தரித்தாலென்ன கனகவஸ்திரம் உடுத்தாலென்ன
புலித் தோலைஉடுத்தாலென்ன பூஷணம் நாகத்தைப்பூண்டாலென்ன
மச்சிலிருந்துபுஜித்தாலென்ன பிட்சையிரந்துகுடித்தாலென்ன
சாம்பலைத்தான் பூசிக்கொண்டாலென்ன சந்தனம்பூசிமணத்தாலென்ன
உன்மத்தனாகித்திரிந்தாலென்ன மன்மதன்போலேஇருந்தாலென்ன
கட்டிலின்மேலே படுத்தாலென்ன கட்டையுறுத்தக் கிடந்தாலென்ன
எப்போதும் பரிபூரணராய் எங்குமாகி நிறைந்தவர்க்கு •

கப்பரையைக்கையிலேந்திக் கொண்டு கண்டெடமெங்குந் திரிந்தாலென்ன
அண்டங்களெல்லாம் வயிற்றுக்குள்ளே அனேகங்கோடி தரித்தவர்க்கு
தலைமுண்டங்களைக்கட்டிக் கண்டந்தன்னில் மாலை யாகத்தரித்தவர்க்கு
கந்தர்ப்பன்போல அழகருக்கு கல்பவர்க னரைப்பெற்றவர்க்கு
அந்தமும் ஆதியுமற்றவர்க்கு மூந்திபிருக்கும் வியர்பகர்க்கு
முத்துஇசைத்தமாலைக்கும் அஸ்திமாலைக்கும் பேதமென்ன
இந்திராதி தேவரால்போற்றுந்தேவருக்கு சுந்தரமூர்ந்திக்குச் சிந்தைஎன்ன
சீத உஷ்ணமான துக்கசுகங்களும் சற்றும் பற்றில்லாத வஸ்துவுக்கு
வாசனை ஏதொன்றுமற்றவர்க்குவாங்கிப்புஜித்தால் குற்றமென்ன
நித்தியானந்தசொரூபருக்கு நிர்மலமாகிய வஸ்துவுக்கு
பத்தரைமாற்றுத் தங்கத்திற்கு எங்கும்பரந்தவருக்கெது செய்தாலென்ன
ஏகராகிஇருந்துகொண்டு ஈஷணை மூன்றுமறுத்தவர்க்கு
ஆதாரமாகி ஜெகத்திற்கெல்லாம் ஆனைமுகவரைப் பெற்றவர்க்கு
இலாபாலாபமில்லாதவர்க்கு பாபமில்லாத திகம்பரர்க்கு
ஆனந்தத்தாண்டவம் அற்புதமாகவே ஆடினதாலே குறைச்சலென்ன
இப்படியாகக் கிழவரண்டை ஈஸ்பரியாளுந் துதிக்கலுமே

சாம்பமூர்த்தி நிஜரூபத்துடன் தோன்றிதேவிக்குத்தன் முத்திரை மோதிரமளித்தல்.

கர்ப்பூரமேனியர் கேட்டுமகிழ்ந்து காத்துரக்ஷித்திடவேணுமென்று
இங்கிதமாகிய சங்கரிதேவியும் ஏக்கமடைந்து வருந்துவதை
அந்தரங்கமான சாம்பமூர்த்தியும் ஆபத்துவேளையில் காக்கவென்றே
கோடிசூரியன் உதித்திட்டாப்போல கோமளரூபமெடுத் தவரும்
வீபூதி ருத்திராட்சமாலைகளும் மேனியில் மாணிக்கப்பூஷணமும்
செந்தாமரைப்பூ முகத்திலே சந்தனப்பொட்டையு மிட்டுக்கொண்டு
கழுத்தில்ரொம்பப் பதக்கம்சரப்பளி கண்டசரமும் பூட்டிக்கொண்டு
வாடாதபுஷ்பமும் சூட்டிக்கொண்டு மானும்மழுவும் தரித்துக்கொண்டு
முப்பத்துமுக்கோடி தேவர்களும் புஷ்பவருஷங்கள் தான்சொரிய
நாற்பத்தெண்ணாயிரத்தெட்டு ரிஷிகளும் நால்வேதஞ்சொல்லிஸ் தோத்தரி
காளர் முதலான பூதகணங்களும் காவலாகவே சூழ்ந்துவர [க்க
ஸ்வப்பிரகாச ரிஷபத்தின்மேலே சுவாமி பிரத்தியக்ஷமாகவந்தார்
பாலவயசுப் பிள்ளையைப்போலவே பார்வதியண்டையில் தோன்றி நின்றார்
விருத்தரைப்போல வந்ததிவர்தாமோ விசுவபதியென்றறியாமல்
அபசாரம் பண்ணிவிட்டோமே என்று அம்மன்தலையை வணங்கிக்கொண்டு
சிவனைக்கண்டதும் சுந்தரிநாயகி தேகமெல்லாம் மயிர்கூச்செறிய

மலர்ந்தசொர்ணதளத்திலே கோடி மஹாதேவர்பாதத்திலே சொரிந்தாள்
சொரிந்து பக்தியுடனாக அந்த தேவிவணங்கி நமஸ்கரித்தாள்
ஒப்பில்லாத வடிவழகி அவள் ஒடுக்கத்துடன் வணங்கிநின்றாள்
அக்குமில்லை யொருநெருக்குமில்லை பக்கத்தில்நிற்க மனுஷ்யரில்லை
வெட்டவெளியான ஈசரிடத்திலே வெட்கத்துடனே விலகிநின்றாள்
ஹிமவான்மகளாரே எனக்கேற்றதொரு வடிவழகி
எனக்கு இப்போது மாலையிடவும் உனக்குச் சம்மந்தானுமுண்டோ
உம்மைத்தவிர பர்த்தாவெனக்கு ஈரேழுலகத்தொருவரில்லை
இஷ்டப்படிக்கு மாலையிடுமென்று பட்சமாய் பார்வதி தானுரைத்தாள்
இருவரும் சம்மதம்பண்ணிக்கொண்டு ஏகமனதாயிருந்துகொண்டு
சக்கரபாணி முதலான அந்த சகலதேவ சபைநடுவே
முக்குருணிப் பிள்ளையாரை வேண்டிச்சிவன் முத்திரைமோதிரம் கைக்
கொடுத்தா
இன்றெட்டாநாளில் வருவோமென்றுசொல்லி ஈஸ்பரனும்போய்
கொத்தார் குழலியம்மனப்போ தன் ஒத்ததோழிமாருடன் கூட [மறைந்தா
முத்தாபரணங்கள் சோதிவிட முத்திரைமோதிரமும் விளங்க
சங்கரனார் நான்குறித்து செய்ததவம் பலித்ததிப்போ
மனதிலெண்ணம் நிறைவேறிவந்தாளம்மன் அரண்மனைக்கு
துலக்கமுள்ள முத்தாரத்துடன் ஆபரணஞ்சோதிவிட
பார்த்தவுடன் மேனை பர்வதர் பரிபூரணமாய் மகிழ
அர்த்தகலையுமணிந்தபரமர் உத்தாரஞ்சொன்ன விஷயங்களை
உற்றார் உறவுடன் அம்மன்சொல்லப் பெற்றோர்கேட்டு மனமகிழ்ந்தாள்.

பார்வதிதேவியின் கல்யாணவைபவம்.

அப்பாலந்த ஹிமவானும் ஆனந்தசாகரத்திலமிழ்ந்து
அந்தப்புறம்விட்டு அரமனைவாசலில் ஆதரவாகவேவந்திருந்து
பட்டணமெங்கும் அலங்கரிக்கச்சொல்லி அட்டாளதேசமறியவைத்தார்
சீக்கிரமாகவே கல்யாண ஓலையைத் தீவிரமாக எழுதிவிட்டார்
அங்கவங்ககலிங்கர் முதலான ஐம்பத்தாறு தேசராஜர்களும்
சுந்தரிகல்யாணம் காணவேணுமென்றே எல்லோரும்வந்து இறங்கினார்கள்
அந்தந்தத்தேசஇராஜர்களுக்கு ஆதரவாகவிடுதிவிட்டார்
எந்தெந்தவேளையில் ஏதெதுவேணுமோ அந்தப்படி எல்லாம்தான்கொடுத்
விச்வகர்மாவும்விதவிதமாய் விஸ்தாரமாக ஜனங்களுக்கு [தார
கல்யாணமண்டபம் அற்புதமாகவே கல்பித்தாரந்த க்ஷணத்துக்குள்ளே
நாலுகால் மண்டபமத்தியிலேயே நாலுமூலைப்பட வேதிபோட்டு

நாலுபுறமுங்கொடுங்கையிறக்கியே நன்றாகச்சுற்றிலும் பந்தலிட்டு
மல்லிகைமுல்லைமுதலான மாலையைச்சுற்றிலுந் தொங்கவிட்டாள்
மங்கிலியப்பெண்கள் கூடிக்கொண்டு அம்பிகையுடனருகில்வந்து
சுந்தரி அம்புஜ பாதகரங்களில் செவக்கவேமருதாணியிட்டு
சந்தனாதித்தைலத்தினால் தேவிக்கபிஷேகம்பண்ணிவைத்தாள் [தாள்
செண்பகமொட்டுடன்சிகைக்காய்நெல்லிசேர்த்தரைத்து அபிஷேகஞ்செய்
கெங்காதீர்த்தத்தைத்தங்கக்குடத்திலே கொண்டுவந்து அபிஷேகம்பண்ணி
மங்களம்பாடியே அம்மனுக்கு மங்களஸ்நானமும் பண்ணிவைத்தாள்
தங்கத்துளிரானபீதாம்பரத்தினால் சங்கரிமேனியெங்கும் துடைத்தாள்
ஈரேழுலோகமெங்கும்விளங்கும் இந்திரவாளிப் பட்டுடுத்திவிட்டாள்
குந்தளநாயகிபூங்குழலை கோதிவாரித்துவலாற்றியவாள்
சொர்னத்தாலே அலங்காரம்பண்ணிச் சாயக்கொண்டைமுடித்துவிட்டாள்
மல்லிகைசெண்பகம்மந்தாரை மருக்கொழுந்துடன் பாதிரியும்
பாரிஜாதப்புஷ்பங்கள்சாத்தி பாங்காய்கஸ்தூரிப்பொட்டுமிட்டாள்
காதளவாய் நீண்டபுண்டரீ காக்ஷத்தில் கறுத்த அஞ்சனமெழுதினாள்
பார்வதிதேவிக்குப்பஞ்சமியின் அர்த்தசந்திரன் போன்றநெற்றி தன்னில்
குங்குமத்தாலேகுறுக்குமிட்டு அதற்குமேலே விபூதியிட்டாள்
மங்களகஸ்தூரி வாஸனைகள் கந்தமும் தங்கத்தூளுங் கலந்து
அம்புஜநாயகி தேவிக்குச்சந்தனக் காப்புச்சாத்தி அலங்கரித்தாள்
இந்திராணியும் அருந்ததியும் லெட்சுமிதேவிசரஸ்வதியும் [தாள்
சந்திரன்பக்கத்தில் நக்ஷத்திரம்போலே சுந்தரிதேவியைச் சூழ்ந்திருந்
மண்டலம்போலேவளைந்துகொண்டு மந்தஹாஸத்துடன் கூடிக்கொண்டு
சொர்னமாணிக்க சர்வாபரணத்தை சூரியகாந்திபோலேயெடுத்து
இந்துமுகத்தாள் ஈஸ்வரிதேவிக்கு இடைவெளிதேகத்திலன்றியிலே
அம்புஜபாதசிரஸுமட்டும் ஆபரணத்தால் அலங்கரித்தாள்
பாடகந்தண்டை சதங்கைகொலுஸு காலாழிபீலியுந்தானுமிட்டாள்
பட்டுக்குமேலே பதக்கம்சரப்பளி பட்டைஒட்டியாணமும் கட்டிவிட்டாள்
பட்டமும்சுட்டியும்கட்டி அதன்மேலே பாங்காய் சூரியப்பிரபையமைத்து
தாடகங்காதிலே தானமைத்து தங்கத்தினாலான கொப்புமிட்டாள் [டாள்
மூன்றரைக்கோடி வராகன்மதிப்புள்ள மூக்குத்தியை அம்மன்மூக்கிலிட்
நாலரைக்கோடி வராகன் மதிப்புள்ள ராவராக்கை யம்மன் காதிலிட்
[டாள்
அஞ்சரைக்கோடி வராகன் விலையுள்ள அஸ்தகடகத்தைக் கையிலிட்டாள்
பத்தரைக்கோடி வராகன் விலையுள்ள பதக்கத்தையம்மன் மார்பிலிட்டாள்
வயிரஅட்டிகைதன்னுடனே வயிரப்பொட்டு மணி பூட்டிவிட்டாள்
முத்துமாலையும் கண்டிமாலையும் முழுக்காசு மாலைகளும்

அஸ்தகடகமும் முன்கைமுதாரியும் அடுக்குத்தோள்வளைவங்கியும்
பச்சைநாயகி அம்மனுக்கு (பெரும்) பவழமாலையும்பூட்டிவிட்டாள்
புஷ்பமாலைகள் பரிமளம்வீசப் பூட்டினளம்மன் கழுத்திலே
மட்டில்லாதவடிவழகியாள வாசுதேவர்சகோதரிக்கு
இஷ்டமாக அலங்கரித்து ஈசருக்கேத்தவளா என்றுஎண்ணி [தாள்
205. உற்றுற்றுப் பார்த்துஉகந்துகொண்டு அத்தனைபேர்களும்கூடியிருந்
எட்டாநாளின் உதயத்திலே ஏழைபங்காளி தயாநிதியும்
கட்டுக்கட்டாகஎல்லவருடனும் கல்யாணக்கோலத்துடன் கூட
மட்டில்லாத ரிஷிகளையும் முக்கோடி தேவர்களையும் அழைத்துக்கொண்டு
வெள்ளிரிஷபத்தில்ஏறிக்கொண்டு வெங்கலபேரிமுழங்கிவர
வெள்ளிபோல வெளுத்த ரிஷபத்தின் கயிற்றைக்கையிலிழுத்துக்கொண்டு
வெள்ளிக்கிழமை உதயத்திலே வேதங்கள் ஓதிடும் வேளையிலே
வெள்ளிமலையில் இருந்துபுறப்பட்டு வேகத்துடனேவரும்போது
அண்டத்திலுள்ள ஜனங்களெல்லாம் ஆதிசிவனுடன் தான்வரவே
கனகமேரு உத்தரதேசம் கனம்அதிகமாய்த் தாழவே [தால்
210. சுந்தரமூர்த்தி அகஸ்தியரைப்பார்த்து தெக்ஷிணதேசநீர் சென்றிரு
மங்கையுடனே மணவாளக்கோலத்தை வந்துஉமக்கு நான் காட்டுகிறேன்
என்றுசொல்லி அகஸ்தியமுனியை ஈசருமங்கே அனுப்பிவிட்டு
அகஸ்தியரை அனுப்பியேஈசரும் ஆனந்தமாகவருகையிலே
அடிக்கும்மத்தளபேரிகைவாத்யமும் அண்டமெல்லாம் அதிரவே
எடுத்ததாரைநாகஸ்வரநாதம் ஈசர்வாரார் என்றோதவே

பரமேசரை பர்வதராஜா எதிர்கொண்டு அழைத்தல்

உரத்தவாத்தியங்கேட்டு ஹிமவான் ஹிருதயமும் பரிபூர்ணமாய்
சரக்கறைதன்னை திறந்து சொர்னம் சங்கையில்லாமலேதான் எடுத்து
ஜெகத்பதிக்கு எதிராகவந்து திருவடியிலேசொரிந்தவர்
நானெடுத்தஜென்மம் சபலமய்யா என்குலம் ஈடேறிப் போச்சுதையா
215. தவத்திற்குப்பலன்கண்டேன்ஐயா சங்கரா நான் முக்தனானேன்ஐயா
ஸ்துதிக்க எனக்குவாராதய்யா என்சொல்லையேஸ்தோத்ரமாய் எண்ணு [மய்யா
அழைத்துக்கொண்டவர் கரத்தைப்பிடித்து அரண்மனைதனில்கூட்டிவந்தார்
நித்தியருக்கு அந்தப்புறத்திலே நிச்சயதாம்பூலந்தான் கொடுத்தார்
பத்மாஸனத்தில்பரமகல்யாணியை வைத்துக்கொண்டு மகாராஜர்
ஏற்றமுடன் ராஜாநாந்திசாந்திகள் ஈஸ்பரிதேவிக்குப்பண்ணிவைத்தார்
ஹஸ்தந்தன்னிலே காப்பிசைத்துஜஞ் பாலிகையும்பரத்தி

உச்சிதமாகமுளைக்கவென்று விரையும் பாலுடனேகலந்து
பத்தியாகவேஐந்துபெண்கள் வாரிப்பாலிகையுந்தெளிக்க
பத்தினிமாருக்குஉத்தமதானம் பர்வதராஜரும்தான்கொடுத்தார்
ஈஸ்வரரும்விருதம்பண்ணவென்றே ஏற்றமாகமணைக்கிருந்தார்
நெற்றியில்முக்கண்ணர்குட்டிக்கொண்டு நமஸ் கரித்துமணைக்கிருந்தார்
வசிஷ்டருடன்மகா ரிஷிகள்எல்லாம் வாத்தியாராய் அமைந்திருக்க
சரக்கறையின்சொர்னமெடுத்து ஸம்பாவனைகள் பண்ணினார்
அதிமிருதுவானபட்டெடுத்து ஆதிசிவனாரின் கண்ணைக்கட்டி
விருதம்பண்ணும்சமயமென்று மேனையம்மன் அறிந்துக்கொண்டு
மூவாயிரத்தொரு அப்பமெடுத்தாள் முன்னூறுசீப்புப்பழமெடுத்தாள்
பாலொருபாத்திரத்திலெடுத்தாள் பாங்குடனே நெய்யுந்தானெடுத்தாள்
தாம்பூலம் எலையடைக்காய் தட்டினில் ரொம்பஎடுத்துக்கொண்டாள் (டு
நான்குபெண்டுகளைச் சேர்த்துக்கொண்டு நன்றாகபூஷணம் பூட்டிக்கொண்
ஐந்து பெண்டுகளுங்கூடிக்கொண்டு ஆதரவாகவே அப்பம்வைத்தாள்
கண்ணுக்குமுன்னாக அப்பக்கூடையும் காணிக்கைகளும் வைக்கலுமே
அப்பக்கூடையில் கண்முழித்தாரந்த ஆதிபரமேசுவரரும்
பரமேசர்விருதம் பண்ணி பாங்குடனே எழுந்திருந்தார்
அப்பக்கூடைக்கு ஆயிரம்பொன்னும் ஆதிசிவனார் தான்கொடுத்தார்
மங்களஸ்நானமும் பண்ணிவந்தார் மஹாதேவமூர்த்தியும்
தங்கநிறம்பெற்ற இந்திரவாளிப்பட்டு சாம்பமூர்த்திதரித்துக்கொண்டார்
சுந்தரமூர்த்திக்குச்சொர்ண பூஷணமும் சந்தனக்காப்பும் அலங்கரித்தாள்
மாணிக்கக்குண்டலமிட்டுக்கொண்டு வாடாதமாலையும் போட்டுக்கொண்டு
மானுமழுவும்தரித்துக்கொண்டு மாரிலேசந்தனம்பூசிக்கொண்டு [கொண்டு
பாதக்குறட்டைதரித்துக்கொண்டு பட்டுக்குடையும்பிடித்துக்
கிலுக்குத்தடியும் கையில்பிடித்து அரிசிமுடிந்துபோட்டுக்கொண்டு
ஆதரவாகவே கிரந்தமெடுத்து ஆதிசிவன்கோலம்புரப்பட்டார்
அடிக்கமத்தள பேரிகைவாத்தியம் அண்டமெல்லாமெட்டி முழங்கவே
பரதேசிக்கோலம் வருவதை பர்வதராஜரும் கண்டுகந்து
மணித்தேங்காய் கையில்கொண்டு மஹாதேவரருகில்வந்து
காசிக்குப்போகவும் வேண்டாம் கன்னிகையைநான் தருவேன்
வாருமைய்யாவென்றழைத்து மணித்தேங்காய் கைக்கொடுத்தார்
சந்தோஷமாய்த் தேங்காய்வாங்கி சாம்ப பரமேசுவரரும்
தர்மவாகனத்தின்மேலேறி கல்யாணமண்டபந்தன்னில்வந்தார்
ஹம்ஸவாகனத்தின்மேலேறி ஆதிபராசக்தி யம்மன்வந்தாள்
பார்வதியும் பரமசிவனுமாய் பந்தலில்நின்றிடும் காட்சிதன்னை
அண்டத்திலுள்ள ஜனங்களெல்லாம் அம்மையப்பரைக்காணவந்தாள

சுந்தரி மாலையிடுவதைக்கண்டால் ஜீவன்முக்தராயப்போவோமென்று
அம்புஜக்கண்ணி அலங்காரமூர்த்தியைக் கண்டு ஆனந்தமாகியம்மன்
செண்பகமாலையும் சொர்ணமாலையும் சிவன்கழுத்தினில் சாத்தினாள்
வில்வமாலையும் தங்கமாலையும் தேவிக்குச்சிவன் சாற்றினார்
இப்படிமாலையை மூன்றுதரமிட்டு ரத்தினஊஞ்சலில் ஆடினார்
சப்தரிஷிகளும் நின்றுகொண்டு சந்தைவைத்தவர் ஊஞ்சல்பாட
நாரதரும் வீணைதனைமீட்டி நன்றாகப்பாடல்கள் பாடிநிற்க
பரமானந்தமாகவேதங்கச் சங்கிலிகளுந்தானசைய
பரிமளங்கள் வீசியேபுஷ்ப சரங்களு மெதுவாயசைய
பக்திஞானமென்னுமந்த பலகையின்மேலிருந்துகொண்டு
சுந்திரமூர்த்தியும் தேவியுமாய்ச் சேர்ந்து ஊஞ்சலில்விளங்கினாள்.

ஊஞ்சல்.

பங்காருமேருகிரி கால்களாக
வங்கமலை அதுக்கேற்ற விட்டமாக
பொங்காரவாஸுகியே கயிறதாக
பூவுலகேசெம்பொன்மணிப் பலகையாக
2. மங்களமாம் விண்ணுலகே பந்தலாக
வரிசையுடன் விஸ்வகர்மா செய்தமைத்த
சிங்காரப்பொன்னூஞ்சல் மீதிலேறி
தேவியுடனீசர் ஆடிலூஞ்சல்
3. பக்தனும் நாரதரும் வடந்தொட்டாட்ட
பார்வதிசகிகள்ஒரு வடந்தொட்டாட்ட
பங்கயனும்வாணியுமோர் வடந்தொட்டாட்ட
பார்வதியும் பதியுடனே ஆடிலூஞ்சல்
பர்வதராஜர்மகிழ ஆடிலூஞ்சல்

லாலி

1. வஜ்ஜிரமணிவைத்திழைத்த ரத்னசபைதன்னிலே
மங்கைசுந்தரிதேவி உகந்தமனோஹரனே லாலி
2. பச்சைஉமையவளுடனே பர்வதேசர்மகிழ
பக்தர்களும்ஸ்தோத்தரிக்க வீற்றிருக்கும் ஹரனே லாலி
3. அச்சுமறை எத்தியசையும் அன்பர்களைக்காக்கும்
ஆதிபரம்பொருளாகி அமர்ந்ததயாபரனே லாலி
4. இச்சையுடன்நான்பாட எந்தனுக்கு அருள்வாய்
ஈச்வரியாளுடனூஞ்சல் இருந்திடும்சங்கரனே லாலி

வஜ்ரமாணிக்க ஊஞ்சலாடி வாழிமங்களம் பாடியே
பார்வதியைபரமசிவன் இடப்பக்கந்தனில் நிறுத்திவைத்து
வாணிஇந்திராணியும் லக்ஷ்மியும் மகிமையுடைய மேனையும்
பாணியினாலே சுழற்றிக்கொட்டி பாலால் பாதந்தனை அலம்பி
மதுவர்க்கமுந்தான் கொடுத்து மங்களஹாரத்திக் காப்பெடுத்தாள்
பிடியன்னம்போட்டு ஹாரத்திசுற்றி பூமையைத் தொட்டொரு பொட்டு மிட்டாள்
கோலமணித்தேங்காய் பழங்கள் கொண்டுவந்தந்த மேனையாளும்
ஆதிசங்கரர் கரகமலத்தில் அன்புபெருகியே தான்கொடுத்தாள்
ஆதிமூர்த்தியும் கோமளரூபியை அண்டையிலே கிட்டவைத்துக்கொண்டு
லோகபாவனையாய் வீற்றிருந்தார் நிர்மல ஆனந்த மூர்த்தியும்
கீர்த்தியான சதாசிவருமந்தக் கல்யாண மங்களவேளையிலே
மூத்தப்பிள்ளைகணபதியை வேண்டிநெற்றியில் குட்டிக்கொண்டு
ஏத்தமாகவே ஆயிரந்தேங்காய் உடைத்துவைத்தார் கணபதிக்கு
பானகம்மோதகம் முப்பழம்வைத்து பூஜித்துநைவேத்தியம் பண்ணி
தீர்க்கமாக மணைக்கிருந்தாரப்போ தேவியுடனே சங்கரரும்
தேவர்நிறைந்த சபைநடுவே மேனையுடன் ஹிமவானும்
ஆதிசங்கரர் பாதகமலத்தை அன்புடன் கையால் பிடித்துக்கொண்டு
பூர்ணகங்காஜலத்தினால் பூஜித்துப்பாதங்களை அலம்பி
செய்த தபோபலத்தினால் தெளித்துக்கொண்டவாள் சிரஸிலே
ஆயிரங்கோடி பசுவுங்கன்றுடன் அனந்தங்கோடி சொர்ணங்களும்
சாதிமாணிக்கமுத்தும் பவழமும் சங்கையில்லாத பூமிகளும்
தேவிசங்கரி அம்மனையுமந்தச் சிவனுடைய கரந்தன்னிலே
தானம்பண்ணியே தாரைவார்த்து சச்சுதானந்தரைக் கண்டுகேந்தார்

பரமேசர் தேவிக்கு மங்கிலியதாரணஞ்செய்தல்.

வாங்கிச்சங்கரர் தேவியை இடப்பாகந்தன்னிலே வைத்துக்கொண்டு
ஓமம்வளர்ந்துஜொலிக்கவே வேதகோஷங்கள் முழங்கவே
நான்முகவரும் உரைத்தமந்திரம் தானுங்கூட உரைத்துகொண்டு
நீலவேணியம்மனுக்கு அப்போ கூறைஓதியே தான்கொடுத்தார்
வாணிஇந்திராணியும் லக்ஷ்மியும் தேவிபார்வதியம்மனுக்கு
தேவிமருங்கில் கூறையுடுத்தி சிவனருகில் கொணர்ந்துவிட்டாள்
பர்வதேசர்பொன்கோட்டையிலிருந்து தேவியைமடி மேல்வைத்துக்கொண்டு
நேர்த்தியானதோர் அம்மன் சிரஸினில் நுகத்தடிவைத்து மந்திரஞ்சொல்லி
பிரியமாகவே மங்கிலியந்தன்னை பெரியவாள்தொட்டு வாழ்த்திக்கொடுக்க
மேளமுடன் வெகுவாத்தியங்களும் வேதகோஷங்களுந்தான் முழங்க

மங்களம்பாடவே பெண்டுகளும் சுந்தரியம்மன் திருக்கழுத்தில்
தங்கப்பிரகாசத்திருமங்கிலியத்தை சாம்பமூர்த்தி திருக்கரத்தால்
சிவஸுந்தரிகண்டத்திலே தரித்து அண்டமெல்லாம் விளங்கினார்
260, பின்னுலிருந்து சரஸ்வதிதேவியும் பூர்ணமாக முடிந்துவிட்டாள்
முடிந்ததேவிக்குக் கோடிபொன் முக்கண்ணர் சன்மானஞ்செய்துவைத்தார்
மங்கைஸுந்தரிநாயகியை வாமபாகத்தில் வைத்திருந்தார்
அக்கினிவளர்த்து ஹோமங்கள்பண்ணி யக்ஞமூர்த்தியை திருப்திபண்ணி
அம்பிகையுடைய பாதாம்புஜத்தை அம்மியின்மேலே மூன்றுதரம்
தூக்கியே வைத்து சாம்பமூர்த்தியும் சுற்றிப்ரதட்சணம் பண்ணிவந்தார்
அம்பிகையுடைய திருக்கரத்தினில் ஆதிவிஷ்ணு பொரியுமிட்டார்
பொரியிட்டகைக்கு ரத்னகணையாழி பொருந்தவேயிட்டார் ஆதிசிவன்
அக்கினிவளர்த்து ஹோமங்கள்பண்ணி ஆசீர்வாதங்கள் ஆனபின்னே
வாணியும்லெக்ஷ்மிதேவியுமாய் மங்களஹாரத்திக் காப்பெடுத்தாள்
265, மலையரசன் ராஜாவுமப்போ மகாஜனங்களெல்லவர்க்கும்
பூரிதக்ஷிணைதான்கொடுத்து போஜனங்களும் பண்ணிவைத்தார்
ஆதிசிவனும்தேவியுடனே அன்பாகப்போஜனம்செய்திருந்தார்
அம்பிகையுடனேதோழிமார்களும் ஆதிசிவன் அருகில்வந்து
பக்தியுடனேவணங்கிநலங்கிடப் பராபரமூர்த்தியைத்தானழைத்தாள்

கௌரி கல்யாணம் வைபோகமே

1. உச்சிதமாம் பந்தலிலே
உயர்ந்த சிம்ஹாஸனத்தில்
உமையுடனே சங்கரனுர்
உல்லாசமாய் இருந்தார் — கௌரி

2. கௌரிசமேதராய்க்
காக்ஷியளித்திடவே
கண்டுகந்து பர்வதரும்
தேவர்களும் தொழுதார் — கௌரி

3. அருந்ததியும் சரஸ்வதியும்
அனைவர்களும் கூடி
அம்பிகையாள் பார்வதிக்கு
மங்களங்கள் பாட — கௌரி

4. திமிதிமென்று பதினெட்டு
வாத்தியங்கள் முழங்க
தேவதாஸிகள் நடிக்க
தேவர்கள்மலர் சொரிய — கௌரி

5. பார்வதியாள் நலங்குமிட்டு
பரமேசர்தமக்கு
பக்தியுடன் வணங்கியம்மன்
பரிபூர்ணமடைந்தாள் கௌரி

நலங்குமேட்டு.

1. ஸ்ரீசம்போஜெயஜெயா ஸ்ரீகௌரீமனோகரா
பரமாநந்தசாகரா பரமேச்வரா ஜெய

2. கோடிமன்மதரூபர் கோமளமாம்தேவியுடன்
கூடிவந்துநலங்கிடவே கூட்டிவந்தார்சகிஜனங்கள்

3. அலங்காரப்பந்தலிட்டு ஆணிப்பொன்னால்மணைபோட்டு
அம்பிகையும்சங்கரரும் அழகாகமணைக்கிருந்தாள்

4. பச்சைமஞ்சள் நலங்குமஞ்சள் பருப்புடனேஉப்பரிசி
சுட்டதொருஅப்பளமும் சொர்ணத்தட்டில் கொணர்ந்துவைத்தாள்

5. ஆதிநாதர்தேவியுடன் அன்புடனேநலங்குமிட்டு
பூரணருங்கௌரியுடன் பூலச்செண்டுஆடலுற்றார்

பூலச்செண்டு.

பந்தாடினார்பரமசிவனும் பர்வதராஜன் பெண்ணுடனே
பாங்கியர் கீதங்கள் பாடித்துதிக்கப் பலவிதவாத்தியமுழங்க [ட்ட
சங்கரமூர்த்தி பூச்செண்டையுமெடுத்துச் செந்தாமரைக்கையாலுரு
மங்கைசுந்தரியும் தன்கையால்எடுத்து மகதேவரிடத்தில் திருப்ப
சுந்தரி செண்டாட சந்தோஷமுங்கொண்டு பந்துஜனங்களும்மகிழ
அன்புடன் மேனையம்மனும் மகிழ்ந்து மங்களஹாரத்தி எடுத்தாள்

ப்ரவேசஹோமம் ஆனவுடன் பரமேசருமையுடனே
அருந்ததியைக்காட்டி நின்றார் ஆதிபரமேசுவரிக்கு
துருவனைக்கண்டீரோ சிவனே என்றாள் தேவி பார்வதியம்மனும்
நான்குநாளும் ஹோமம்பண்ணி நலங்குமிட்டுப் பொன்னூஞ்சலாடி

270. சிவனுமையுடன் பவனிவந்து சேஷஹோமம் முடிந்தபின்பு
ஐந்துநாட்கல்யாணம் ஆனபின்பு ஆதிபரமேச்வரரும்
கட்டுமுட்டாகவிருந்துபுஜித்து காவிச்சோமனுங் கட்டிக்கொண்டு [கொண்டு
கூடைச்சாதமும் பருப்புத்தேங்காயும் குண்டோதரன்தலைமேல் வைத்துக்

வெள்ளிமலைவந்து சிங்காஸனத்திலே உல்லாசமாகவே வீற்றிருந்தார்
கைலாசகிரிதன்னிலே காளகண்டமூர்த்தி போயிருந்தார்
ஹிமோத்கிரிபர்வதத்தில் ஈஸ்பரிதேவி வளர்ந்துவந்தாள்

அம்பிகை பெரியாளுவஷி ஆகுதல்

பர்வதராஜரின் கன்னிகையும் பழையகாலப் பெருநிதிபோல்
பளபளத்தபவழக்கொடிபோலே பார்வதிதேவியும் தான்வளர்ந்தாள்
நீலமாமந்தவேணியிலே நிறையப்புஷ்பத்தைச் சூட்டிக்கொண்டு
விஸ்தாரமாமந்த நெற்றியிலே குச்சிலிட்பொட்டையுமிட்டுக்கொண்டு
கடைக்கண்சிவந்த விழியழகி கண்ணுக்கு அஞ்சனமிட்டுக்கொண்டு
பவழம்போலே நிறத்தழகி பாதத்தில் செம்பஞ்சுபோட்டுக்கொண்டு
அண்டகோடிஜனனியம்மன் ஆபரணம் ரொம்பப் பூட்டிக்கொண்டு
தண்டையாடகஞ்சிலம்புடனே காலாழிபீலியும் இட்டுக்கொண்டு
குந்தளஓலையுடன் இருகாதிலும் குலுங்கஜிமிக்கியும் இட்டுக்கொண்டு
சந்திரமுருகும் ராவராக்கும் தளதளென்னத்தரித்துக்கொண்டு
அஸ்தகடகம் தரித்துக்கொண்டு அட்டிகைபதக்கம் பூட்டிக்கொண்டு
சிறுத்தகொடியிடையுக்குள்ளே (பள) பளத்தபட்டு முடுத்திக்கொண்டு
கவிழ்த்ததங்கக்கலசம்போல பெருத்தகொங்கைகள் நடுவிலே
அழுத்தமானதோர் முத்துமாலையை ஆசையுடனே தரித்துக்கொண்டு
சிற்றடிதன்னில் சிலம்பழகி சுற்றிமருதாணி இட்டுக்கொண்டு
அந்தமுமாதியு மற்றசிவனைச் சிந்தையிற்குள்ளோ நினைத்துக்கொண்டு
வாழைமரம்போல் தொடையுடையாள் மதயானைபோல நடையுடையாள்
மாதளம்பூவைப்போல் மேனியுள்ளாள் மகிழ்ந்திருக்கின்றவேளையிலே
பருவமாகியகாலத்திலே பதினொருதுநாழிகைவேளையிலே
பொருத்தமான தினத்திலே போஜனங்களும் ஆனபின்பு
பெருத்தபெண்டுகள் சம்மதமாகவே புழக்கடையில் விலகின்றாள்
ஈச்வரியுடைய தோழிமார்கள் இச்சையுடன் விளையாடும்போது
பார்வதியம்மன் திரண்டாளென்று பரிகாஸமாகவே தோழிசொன்னாள்
மேனையம்மாளும் ஓடிவந்து மெய்யோ பொய்யோ வென்றாளாம்
அருந்ததியம்மன் ஓடிவந்து ஆமடிதோழி என்றாளாம்
இந்திராணியம்மன் ஓடிவந்து எப்போவென்று கேட்டாளாம்
வெட்கத்துடனே அம்மாளப்போ பெற்றதாயின் அருகிருந்தாள்
வாணிஇந்திராணி லெக்ஷ்மியும் வாசல்மெழுகியே கோலமிட்டாள்

ஸ்ரீபார்வதி சகிகள் சோபனம் பாடுதல்.

கொத்துடனே பழவகையும் குலையுடனே தேங்காயும் வைத்து
கட்டுடனே வெற்றிலையும் காசுக்கட்டிகளிப் பாக்கும்
கற்கண்டும் சர்க்கரையுடனே கனகத்தட்டில் எடுத்து வைத்து
குத்திவிளக்கையுமேற்றிவைத்து கோலஞ்சதுரமாய் தான்போட்டு
நிறைநாழியில் முத்தும் வைத்து நேராக வேலக்ஷம் பொன்னும் வைத்தாள் [ட்டு
290. பத்துக்கலநெல்லுங் கொட்டிப்பரப்பி பட்டுப்பாயை அதின்மேலேபோ
பட்டுபாயின்மேலே பார்வதிதேவி பாங்காகவே மணைக்கிருந்தாள்
அருந்ததியொருதலைவனும் அச்சுதர்நாயகி தலைவனும்
இந்திராணியொருதலைவனும் சந்திரன் நாயகிதலைவனும்
சரஸ்வதியொரு தலைவனும் சம்மந்திப் பெண்ணொரு தலைவனும்
சாவித்திரியொருதலைவனும் சாயாதேவியொருதலைவனும்
எட்டுத்தலைவாணும் கூடிக்கொண்டு ஏகமாகவளைந்துகொண்டு
கொட்டிக்கொண்டுபாதச்சலங்கைகள் குலுங்கநன்றாய் குதித்துக்கொண்டு
பார்வதிதேவிக்குச்சோபனம்சோபனம் பங்கஜவல்லிக்கு சோபனம்சோபனம்
நீலவேணிக்குச்சோபனம்சோபனம் நித்தியகல்யாணிக்குசோபனம்சோபனம்
295. சாம்பவிக்குச்சோபனம்சோபனம் ச்யாமளரூபிக்குசோபனம்சோபனம்
தாக்ஷாயணிக்குச்சோபனம் சோபனம்சங்கரர்தேவிக்குசோபனம்சேபனம்
[ணம்
ருத்ரபாரிக்குச்சோபனம் சோபனம்ஹிமவத்புத்திரிக்குச்சோபனம் சோப
ஜகத்துக்கெல்லாமதிபதியாகிய ஸத்தானதேவிக்குச் சோபனம்சோபனம்
காலத்ரயத்தை வெகுவிதமாய் கற்பித்தமாய்கைக்குச் சோபனம்சோபனம்
தாபத்ரயத்தைத் தன்பக்தாளுக்குத்தள்ளினதேவிக்குச் சோபனம்சோபனம்
அன்னைவயிற்றில்தரியாதே ஓரன்னைகர்ப்பத்தில் பிறவாதே
பூமியில்வந்து பிறவாமல் இந்தப்பூதங்களைப்போல் இறவாமல்
மானுபிமானங்களில்லாத அந்தக்சாமரூபிக்குச் சோபனம் சோபனம்
நாற்பத்துமுக்கோணச்சக்கரத்தில் வந்த நாதரூபிக்கு சோபனம் சோபனம்
300. முப்பத்துமுக்கோடி தேவர்தொழுகின்ற மூலரூபிக்கு சோபனம்
(சோபனம்
நாலுமுகவர் கலக்கந்தவிர்த்திட்ட (ஸ்ரீமன்) நாராயணிக்குச்சோபனம் சோப
கிளியைக்கையில்தரித்திருக்கும் கின்னரரூபிக்குச் சோபனம்சோபனம் [னம்
நீலகண்டரின் பட்டமகிஷிக்கு நீலவேணிக்குச் சோபனம்சோபனம்
ஒப்பற்றதேவியைவைத்துக்கொண்டு (பெண்கள்) ஓங்கிஓங்கிகையைகொட்டி
கொண்டு
இப்படிச்சோபனம் பாடிக்கொண்டுபெண்கள் ஈச்வரியுடனிருக்கும்போது

பர்வதராஜா பரமேசருக்குச் சோபனஓலை அனுப்புத

(கன்யலார சோபனமே காந்தலார சோபனமே
என்ற பல்லவிக்கு சந்தையாசப் பாடலாம்.)

நித்தியகல்யாணி யம்மன் ருதுவான சோபனத்தை
பக்தியில் பெரிதான பர்வதராஜரும் தானறிந்து
நித்தியானந்தம் அடைந்து முக்திமக்கு உண்டென்று
அச்சுதரைத் தானனுப்பி ஆதிசிவ சங்கரர்க்கு

செப்பிவைக்க வேணுமிந்த சோபனத்தை என்றுஎண்ணி
இரத்னமணி மண்டபத்தில் நிறைந்தசபையின் நடுவில்
பொன்னுமணி ஆசனத்தில் பூரிப்புடன் இருந்துக்கொண்டு
சுப்பிரகாச மானதொரு தங்கப்பொன் ஓலைதன்னில்
வஜ்ஜிர மணிக் குண்டுபதித்தமணி எழுத்தாணிகைப்பிடித்து
சத்குருவே சங்கரரே சரணம் நமஸ்காரமையா
இரத்னமணிநீலகண்டா நித்திய கல்யாணமையா
பொற்கொடியாள் பார்வதிதேவி பூமலர்ந்தாள் சோபனம்
பக்தியுள்ள சுந்தரியை பொட்டெனவே சேருமையா
சுப்பிரமணியர் உங்களுக்கு புத்திரராய் வந்திடுவர்

(என்று) லக்கணையாய் வாசகத்தை மங்களஓலைதன்னில் எழுதி
கஸ்தூரிமஞ்சளிட்டு கல்லியாண ஓலைதன்னில்
விஷ்ணுவின் சஞ்சிகையில் வைத்தார்மனோகரமாய்
முத்துக்கோபால கிருஷ்ணன் வேதமுனிவர் தங்களுடன்
பொட்டெனவே வந்துவிட்டார் பர்வத கைலாஸத்தில்
இலக்கமற்ற ரிஷிகளுடன் முக்கோடிதேவர்களும்
சுற்றிநிறைய வீற்றிருக்கும் சோமசுந்தர மூர்த்தியை
பச்சைவர்ணர் கிட்டவந்து பரமேச்வரர் பாதத்திலே
பொற்றளத்தால் பூஜித்து போற்றி நமஸ்கரித்தார்
அச்சுதமூர்த்தியைச் சங்கரர் ஆசீர்வாதங்கள் பண்ணி

முத்தாசனத்திலே மைத்துனரை வைத்திருந்தார்
சுப்பிர காசமானதொரு தங்கச்சுருள் ஓலையை
அன்புடனே சங்கரரின் ஹஸ்தந்தனிலே கொடுத்தார்
வாங்கிச் சங்கரர் ஓலையின் வாசகத்தைப் பார்த்தவுடன்
அகப்பட்டார் மதன்பாணத்தில் அழுந்திஞரம்மன் மோகத்தில்
போட்டார் பார்வதிமேல்மனதை பின்னையொன்றுந் தோன்றாமல்

பார்த்தவுடன் ஆனந்தம் பரிபூர்ணமா யடைந்தார்
ஓட்டமாகவே தானோடி ஈச்வரியை இடத்துடைமேல்
தூக்கிஎடுத்து வைத்துக்கொண்டு திருக்கனிவாயை முத்தமிட்டு
பார்த்து சுந்தரிவாழ்முகத்தை பவழம்போலும் அதரத்தை
கோர்த்த முத்துப்போல் பல்லொளியை குளிர்முழியுட மயக்கத்தை
கூட்டி நம்முகத்துடனே வைத்து மங்கையரை நம்ம மார்போடு
சேர்த்துக் கட்டியே ஈஸ்வரியுடன் வீற்றிருக்கவுங் காண்போமா
ஆச்சரியமான மோகத்தில் அழுத்தியேநம்மை மன்மதனும்
போட்டுபாணத்தால் பிளக்கிறான் தன் பிராணனுக்கானியையெண்ணாதே
(இதைக்) கேட்டால்அச்சுதர் சிரிப்பரே கண்டபேர்நம்மை அசங்கதிப்பரே
(என்று) பேத்திக்கொண்டுமனதிற்குள்ளே பித்துக்கொண்டாப்போலே சிவ
நாளுமொரு யுகமுமாய் நாழிகை ஐந்நூறு வருஷமாய் [னும்
போதுமெப்போ கழியுமென்று பித்துக்கொண்டசிவன் காத்திருந்தார்
ஆதிமாலுக்கும்வேதமுனிவாக்கும் அப்பியங்கஸ்நானமும் பண்ணிவைத்து
மணியிழைத்த மண்டபத்தில் வரிசையாகவே பந்திவைத்து
புத்துருக்கு நெய்யும் அன்னம்பருப்புடன் பொரிக்கரிகளும் ரஸத்துடன்
ஆயிரம் பணியாரவகையும் அமிர்தமான பாயஸமும்
கோடி பல பழவகைகளும் வாரிச்சொரிந்து மதுவுடன்
போஜனங்கள் பலவகையும் புஜித்துத் திருப்திகள் ஆனபின்பு
ஆஸனத்திலே வீற்றிருந்து ஆயாஸங்களும் தீர்ந்தபின்பு
சாந்துசந்தனம் புனுகுகஸ்தூரி குங்குமப்பூ கோரோசனையும்
கூட்டிக்கலந்து மணங்கள்வீசக் குளிரச்சந்தனம் பூசினாள்
சோபனஞ் சொல்லவந்தவாளுக்கு சொர்ணஞ் சங்கையில்லாமலே
வாரிச்சொரிந்து வெகுமானம்பண்ணி சாம்பமூர்த்தி அனுப்பிவைத்தார்
ஏறியேசிவன் வெள்ளிரிஷபத்தில் அண்டாதசேனையைக்கூட்டிக்கொ
ஏத்தமாகத் தானும வந்தாரந்த ஹிமத்பர்வத மனைதன்னில் (ண்டு
ஆதிசிவனை வீராஸனத்தில் அமர்த்தியே அந்தராஜாவும்
பூஜைகள்பண்ணி பக்தியுடன் பூரணருடனே வீற்றிருந்தார்
பார்வதிதேவி யிடமிருந்த பைங்கிளிமார்கள் எல்லவரும்
பூர்ணவடிவைக் கண்டவுடன் ஓடிவந்து வளைந்துகொண்டாள்
கொட்டிக்கொண்டு கையை பாதச்சலங்கை குலுங்கக் குதித்துப்பாடினாள்

வாதவூரடிகள் பக்திகண்டு வன்சிறை நீக்கவே எண்ணங்கொண்டு
ஊழல்நரிகளைத்தேய்த்துக் குதிரையாய் உச்சிதமாகக்கொடுத்தவரே
அம்மையார் பிட்டுக்கு ஆசைப்பட்டு அரைக்காசு கொடுக்க அவசமற்று
வஞ்சித் தவள் பிட்டை வாங்கித்தின்றுவிட்டு மண்ணைச்சுமந்து கழப்பி [விட்டு
பொன்னும் பிரம்பினால் பாண்டியராஜாவின் கையினாலேஅடிப்பட்டவரே
கீர்த்தனம்பாடின பக்தனுடைய மகத்தான ஆபத்தை நீக்கவென்று
பார்த்தொரு கட்டு வெறகைச்சுமந்து பாடி ஜயத்தைக்கொடுத்தவரே
வலைச்செட்டி வேஷமெடுத்துக்கொண்டு வயிறுவளர்த்திடவேணுமென்று
வலையைத்தூக்கித் தோளிலேபோட்டு மதுரைபட்டணவீதியிலே
அடுக்கிக்கோமுட்டிப் பெண்களுக்குவளை ஆனந்தமாகி மறைந்தவரே
இலைச்ச வாய்க்குப் புசிக்கபக்ஷணம் மதுரமாயொன்று மில்லாமல்
நிஷித்தமாகிய வேடனெச்சிலை நித்தியமும்வாங்கிப் புஜித்தவரே
காளியுடன்கூட வாதுக்குத்தாண்டவம் ஆடமாட்டாமல் நீர் தோற்று
வாதுக்குத்தூக்கின பாதக்காலின் கூத்துக்குப்பணந்தருவரோ
பாக்கியம் ரொம்ப இருந்தசிவனும் பாகவதாள் கையிலேதோற்று
கூத்தையாடிக்கொண்டு கோலாஹலமாகப் பேத்திக்கொண்டவர் இருப்பரே
கூத்துக்குப்பணம் சம்பாதிப்பவர் (நம்ம) பாட்டுக்குப்பணந்தருவரோ
ஏத்தமாக இருந்திட்ட சங்கரர் கூத்தாடிவேஷந்தரித்துக்கொண்டு
கீர்த்தியான கனகசபையிலே கோவிந்த இந்திர நான்முகனும்
தீர்க்க தரிசியாம் சேஷமுனிவரும் தில்லையம்பலத்தி லிருக்க
பார்க்கவந்த பதஞ்சலி வியாக்ரர் பக்தியுடன் கூடி நிர்க்கின்றதை
கூட்டத்தையெல்லாங்கண்டுசதாசிவர் பார்த்துச்சிந்தையில் எண்ணிக் [கொண்டு
ஆட்டத்தைக்கண்டு இத்தனைபேர்களும் ஆளுக்கொருபணந்தந்துவிட்டால்
பாக்கியம் மலையாகக் குவிந்திடும் என்றுபரமார்த்தமானசிவன்
போற்றும் பாதமும் சிவந்துவலிக்க புனுகுசந்தனம் கரையவே
சாற்றி சிரஸில் இருந்த சந்திரன் வாடக் கங்கையும் தளம்பவே
வேர்த்துச்சொரிந்து முத்து முத்தாகவே விபூதிகளும்நனையவே
ஆட்டவேகத்தைப் பொருக்கமாட்டாமல் அஷ்டநாகமும் நெளியவே
கூத்துக்குக் கோலமாகத் தரித்திட்ட சிலம்பு கிண்கிணிமணிகளில்
தோட்டிலே ஒருசிலம்புதெறித்து விழுந்தது கூடத்தெரியாமல்
பார்த்தவர் முக்தி யடைய கீர்த்தனம் பண்ணினீர் அம்பலத்திலே
ஈஸ்வரருக்குப் பணங்களுண்டானால் அஸ்திமாலையை தரிப்பரோ
பூசு சந்தனம் புனுகு கஸ்தூரி வாஸனை யவர் அறிந்தாக்கே
சாம்பலைத் திருமேனி எங்கிலும் பூசிக்கொண்டவர் இருப்பரோ

புத்திரன் என்னுடன்கூட உண்ணுவிட்டால் அன்னம்புஜியேன் என்றவரே
பெற்றதெல்லாம் ஒருபிள்ளை ஸ்வாமி அறுத்துக்கறி சமைந்தாக்கிவிட்டேன்
350. அத்தனே நானென்ன செய்வேனென்று அப்போசிறுத்தொண்டர்
பக்தன் புலம்பும் பரிதாபங்கேட்டுசித்தமிரங்கியே நீருமப்போ [சொல்லலுமே
புத்திரன் பள்ளிக்கூடத்திலிருக்கிறான் போயழைத்துவா வென்றவரே
பக்தியுடனே பள்ளிக்கூடத்தி லிருந்த சீராளனைக்கூப்பிடவே
உச்சிதமாகவே பிள்ளைபிழைத்திட இஷ்டம்நிறைவேற்றி வைத்தவரே
பத்மாஸுரன் தபசைக்கண்டு பதறிவரத்தைக் கொடுத்துவிட்டு
தொட்டுப்பார்ப்பேன் சிவன்தலையை(என்று)தொடர்ந்து பிடித்தவன் ஓடிவர
பட்டுப்போகுமஸுரனைக்கண்டு பயந்துநடுங்கி விழித்துக்கொண்டு [கொண்டு
செத்துப்போகப் படாதென்று என்னமி ஜெகத்தின் வனமெல்லாமோடிக்
ஒட்டிக்கொண்டு அந்த ஐவேலிக்காயிலே ஒளிந்துகொண்டு இருந்தவரே
355. (நீரும்) மறைந்தவுடன் வைகுண்டவாஸியும் மோகினிவேஷமெடுத்துக் கொண்டு
அஸுரனண்டைக்கு வரவச்சுதானந்தர் அதிரூபமான மோகினியாய்
மதிகெட்டஸுரன் மோகினியைப்பார்த்து வாரும்பெண்ணே சதியாகவென் [றான்
வாரும்பெண்ணே சதியாகவென்றவுடன் வைகுண்ட வாஸியுந்தான் கேட்டு
நித்திய கர்மத்தைப் பண்ணிமுடித்து நிர்மலமாக வாவென்றுசொன்னார்
கவிட்டுக்கோவிந்தன் சொன்னதறியாமல் காமாட்டியாகிய மூட அஸுரன்
முழுகி வெண்ணீறு முந்திவினைமுற்ற முடியின்மேல் கையைவைத்துக் [கொண்டான்
முடியின்மேல் கையை வைத்தவுடன் பிடிசாம்பலாக எரிந்துவிட்டான்
வரங்கொடுத்த மகாதேவர் சொற்படி வெடித்தவன் தலை நீறுச்சு
பத்மாஸுரனும் பட்டுவிழுந்திட அச்சுதரு அருகில்வந்தீர்
360. அதையறிந்த ஹரியுமப்போ அற்புத மோஹினியாகி நிற்க
அச்சுதமோகினி வேஷத்தைக்கண்டு ஹரியுடன் போகமடைந்தவரே
போகமடைந்த மதத்தினால்சங்கரர் வீரியமுதிக்கக் காந்தியாய்
பிரகாசத்துடனே விளங்கிய ரேதஸை ஸ்ரீஹரிகைதனில் ஏந்திக்கொண்டார்
ஸ்ரீஹரிக்கும் அரனுக்குமாகிய செல்வக்குமாரனைத் தாலாட்டி
ஆதிசிவனும் ஹரியுமாகக்கூடி ஐயப்பருச்சியை முகர்ந்துகொண்டு
ஸ்ரீமானரி ஹரபுத்திரனென்று நாலுலோகமும் அறியவைத்தீர்
பூமிக்கெல்லாம் இவர்காவற்காரரென்று வாங்கினியும் அவர்கைக்கொடுத்தீர
நாடகமாடியே லோகத்தைமயக்கும் ஆதிசிவனையறியோமோ [கொண்டு
வாஸுகி தக்ஷகன் கார்க்கோடகனை மகரகுண்டலமாய்ப் போட்டுக்
365. காளியன் முதல் சகலநாகத்தையும் கண்டாபரணமாய்ப் பூண்டவரே

வாதவூரடிகள் பக்திகண்டு வன்சிறை நீக்கவே எண்ணங்கொண்டு
ஊழல்நரிகளைதேய்த்துக் குதிரையாய் உச்சிதமாகக்கொடுத்தவரே
அம்மையார் பிட்டுக்கு ஆசைப்பட்டு அரைக்காசு கொடுக்க அவசமற்று
வஞ்சித் தவள் பிட்டை வாங்கித்தின்றுவிட்டு மண்ணைச்சுமந்து கழப்பி [விட்டு
பொன்னும் பிறம்பினால் பாண்டியராஜாவின் கையினாலேஅடிப்பட்டவரே
கீர்த்தனம்பாடின பக்தனுடைய மகத்தான ஆபத்தை நீக்கவென்று
பார்த்தொரு கட்டு வெறகைச்சுமந்து பாடி ஜயத்தைக்கொடுத்தவரே
வலைச்செட்டி வேஷமெடுத்துக்கொண்டு வயிறுவளர்த்திடவேணுமென்று
வலையைத்தூக்கித் தோளிலேபோட்டு மதுரைபட்டணவீதியிலே
அடுக்கிக்கோமுட்டிப் பெண்களுக்குவளை ஆனந்தமாகி மறைந்தவரே
இலைச்ச வாய்க்குப் புசிக்கபக்ஷணம் மதுரமாயொன்று மில்லாமல்
நிஷித்தமாகிய வேடனெச்சிலை நித்தியமும்வாங்கிப் புஜித்தவரே
காளியுடன்கூட வாதுக்குத்தாண்டவம் ஆடமாட்டாமல் நீர் தோற்று
வாதுக்குத்தூக்கின பாதக்காலின் கூத்துக்குப்பணந்தருவரோ
பாக்கியம் ரொம்ப இருந்தசிவனும் பாகவதாள் கையிலேதோற்று
கூத்தையாடிக்கொண்டு கோலாஹலமாகப் பேத்திக்கொண்டவர் இருப்பரே
கூத்துக்குப்பணம் சம்பாதிப்பவர் (நம்ம) பாட்டுக்குப்பணந்தருவரோ
ஏத்தமாக இருந்திட்ட சங்கரர் கூத்தாடிவேஷந்தரித்துக்கொண்டு
கீர்த்தியான கனகசபையிலே கோவிந்த இந்திர நான் முகனும்
தீர்க்க தரிசியாம் சேஷமுனிவரும் தில்லையம்பலத்தி லிருக்க
பார்க்கவந்த பதஞ்சலி வியாக்ரர் பக்தியுடன்கூடி நிர்க்கின்றதை
கூட்டத்தையெல்லாங்கண்டுசதாசிவர் பார்த்துச்சிந்தையில் எண்ணிக் [கொண்டு
ஆட்டத்தைக்கண்டு இத்தனைபேர்களும் ஆளுக்கொருபணந்தந்துவிட்டால்
பாக்கியம் மலையாகக் குவிந்திடும் என்றுபரமார்த்தமானசிவன்
போற்றும் பாதமும் சிவந்துவலிக்க புனுகுசந்தனம் கரையவே
சாற்றி சிரஸில் இருந்த சந்திரன் வாடக் கங்கையும் தளம்பவே
வேர்த்துச்சொரிந்து முத்து முத்தாகவே விபூதிகளும்நனையவே
ஆட்டவேகத்தைப் பொருக்கமாட்டாமல் அஷ்டநாகமும் நெளியவே
கூத்துக்குக் கோலமாகத் தரித்திட்ட சிலம்பு கிண்கிணிமணிகளில்
தோட்டிலே ஒருசிலம்புதெறித்து விழுந்தது கூடத்தெரியாமல்
பார்த்தவர் முக்தி யடைய கீர்த்தனம் பண்ணினீர் அம்பலத்திலே
ஈஸ்வரருக்குப் பணங்களுண்டானால் அஸ்திமாலையை தரிப்பரோ
பூசு சந்தனம் புனுகு கஸ்தூரி வாஸனை யவர் அறிந்தாக்கே
சாம்பலைத் திருமேனி எங்கிலும் பூசிக்கொண்டவர் இருப்பரோ

சொம்பு தவலை ஜலபானம்பண்ணச் சிவன்கரந்தன்னில் இருந்தாக்கே
தங்கநிறம்பெற்ற கங்காதேவியை தலைதனில்வைத்துச்சுமப்பரோ
வேருங்கொழுந்தும் மல்லிகைப்பூவும் சூடப்பாக்கியமிருந்தாக்கே
மாடு தின்கின்ற அருகம்புல்லைச் சூடிக்கொண்டவர் இருப்பாரோ
செண்பகப்பூவும் செவ்வந்திப்பூவும் செவந்ததாமரைப்பூக்களும்
385. கொள்ளக்கைதன்னில் காசுமுண்டானால் தும்பை வில்வத்தைதரிப்பபரோ
சிவக்கவே ஒரு பாக்கு வெற்றிலை தின்னப் பாக்கியமிருந்தாக்கே
விஷத்தைவாய்தனில் போட்டுக்கொண்டு கறுத்த கண்டத்தோடிருப்பரோ
உறக்கச்சொல்லப்படாதடி சிவனுக்கு அக்கினியே நெற்றிக்கண்ணடி
ஜொலிக்கும் அக்கினிபோல நெற்றிக்கண் சிவனுக்கிருக்கும் எப்போதும்
விழித்துப்பார்த்தால் மோசம்வரும் மன்மதன்பட்டதறியோமோ
சிரித்துச்சங்காரர் க்ஷணத்திலேதிரு புரத்தை எல்லா மெரித்தவர்
பணத்தைத்தாராதிருந்தாலு மிருக்கட்டும் பாடினால் முக்தியுண்டடி
பாடிவிட்டோமா மித்தனைபோதாகப் பணங்காசில்லாமற் போவோமோ
ஆபரணத்தைக் கயட்டுவோமென்றால் அஸ்திமாலைதரித்திருக்கார்
390. பூஷணத்திலொன்றை வாங்குவோமென்றால் பாம்பையன்றோடிபூண்டிருக்கார்
ஹஸ்தகடகத்தைக் கயட்டுவோமென்றால் அத்தனையும் பன்னகாளடி
குண்டலத்தைக் கயட்டுவோமென்றால் குட்டிப்பாம்பின் சுருளடி
கையின் கணையாழி கயட்டுவோமென்றால் காளியன் சீறிக்கடிப்பண்டி
பதக்கத்தில் ஒன்றைக் கயட்டுவோமென்றால் பாம்பினுடைய படமடி
கண்டாபரணத்தைக் கயட்டுவோமென்றால் காலகோடிவிஷமடி
உத்தரீயத்தை வாங்குவோமென்றால் வேங்கைப்புலியின்தோலடி
வஸ்திரத்தைப் பறிக்கிறோமென்றால் ஆனையினுடையதொக்கடி
பத்மாஸனத்தை வாங்குவோமென்றால் கிருஷ்ணஜலப்பட்டையடி
இப்படிப்பட்ட பணக்காரன் நமக்கென்ன பணந்தரப்போறான்டி
395. என்று முத்தாபரணங்குலுங்கக்குலுங்க மின்கிளிமார்கள் எல்லவரும்
அட்டஹாஸமாய்க் கைகளைக்கொட்டி அசங்கதிச்சவாள்சிரித்தவுடன்
இலக்ஷ்மிதேவி அம்புஜபாணி கடைக்கண்ணைக்காட்டி ஏதுசொல்வள்
விட்டுவிடாதீர்கள் எங்கசிவனை வளையுங்கள்நான்குபுறமுமாய்
இலக்கமற்ற திரவியங்கள் நீலகண்டருக்கு உண்டடி
முக்கண்ணருக்குப் பணமில்லையென்றால் மெய்கொள்கிறவர் ஆரடி
அத்தனையும் மறைத்துவைத்தவர் ஆண்டியைப்போலிருக்கிறார்
சற்றுமறிவில்லாப்பேர்களுக்கவர்பிச்சைக்காரன்போல இருக்கிறார்
பக்தியில்லாத பேர்களுக்கெல்லாம் பஞ்சகோலத்தைக்காட்டுகிறார்

ஜெகத்திலுண்டான பேர்களுக்கெல்லாம் சிவன்கொடுத்தாலுண்டடி
மதித்திருக்கின்ற பேர்களின்வாழ்வு மஹாதேவரின் கிருபையடி
மண்டலம் பதினாலு லோகமும் மலைகள் பர்வதம் நதிகளும்
அண்டத்திலுள்ள அகிலாண்ட கோடிகோடிபிருமாண்டமும்
சந்திரசூரியர் அஷ்டதிக்குப்பாலாள் சகலரிஷிகள் அமரரும்
நான்முகரும் கீர்த்தியுடைய நாராயணரும் சிவமடி
எங்கும் நிறைந்திருப்பாரடி சிவன் ஹிருதயவாஸியுந்தானடி
மந்தஹாஸ முகத்தாரடி சிவன் வேணதெல்லாந்தருவாரடி
நிந்தனைகள் செய்யாதேயுங்கோடி எங்கள் நாத்திறாம்பிடையானடி
(என்று) மங்களமான மதுரஸ்துதிகள் மைத்துனர் தேவியும் [சொன்னவுடன்
இங்கிதமாகவே சாம்பமூர்த்தியும் உல்லாஸமாகச் சிரித்துக்கொண்டு
சங்கையில்லாத ஆபரணங்களும் வெண்பட்டுப்பீதாம்பரங்களும்
ஒன்பதுகோடி திரவியங்களும் எடுத்துச்சொரிந்து கொடுத்தவர்
கொம்பனைமாரைக் குளிரப்பார்த்து நன்மையுண்டாகட்டு மென்றுசொல்லி
அன்புடன்பாடின பெண்களுக்கு அவர் ஆனந்தத்தாம்பூல முங்கொடுத்தார்
இந்தப்படி யவரண்டையில் ஏசி எண்ணிக்கையற்றபணம் பறித்தாள்

விஷ்ணு ஏச்சு.

அத்தனைபேரும் சபைநடுவே அச்சுதரண்டையில் ஓடிவந்தாள்
கொட்டிக்கொண்டு தங்கள் கைகளிரண்டும் சதங்கைகுலுங்கக்குதித்துக் [கொண்டு
இருகுலத்திலே பிறந்து வளர்ந்த இடையனேவந்து பாருங்கோடி
மீனவதார மெடுத்துக்கொண்டு வேதத்தைத்தேடிப்பிடித்தவனே
பன்றிரூப மெடுத்துக்கொண்டு பல்லாலே பூமிபிளந்தவனே
ஆமைரூப மெடுத்துக்கொண்டு அமிர்தங்கடையும் பர்வதத்தை
தாங்கிக்கொண்டு இருந்தவனே உந்தன் சேதிகளெல்லாம் அறியோமோ
சிம்மரூப மெடுத்துக்கொண்டு துஷ்டனான ஹிரணியனை
இரண்டுகையாலும் பிடித்துக்கிழித்து ரத்தத்தைவாரிக் குடித்தவனே
மணிக்குடலைப் பிடுங்கிஎடுத்து மாலையாய்த் தோளிலேபோட்டவனே
தணித்துக்கோபத்தைத்தான் தொழுததாஸன் பிரஹ்லாதரைப்பார்த்து
ஹிரணியனை ஒழித்துவிட்டோம் இனி இருந்தரசாளுமென்றவனே
வாமனரூப மெடுத்துக்கொண்டு வணங்கிப்பூமி இரந்தவனே
தாருமென்றுசொல்லி மூணடிமண் சத்தியமாகவே கேட்டுக்கொண்டு
மகாராஜ ராஜரான அந்த மகாபலியை வஞ்சனையாய்

பாதாள உலகத்தில் பாய்ந்துவிழ உதைத்தவனே
பரசுராமனாய் வந்துதித்து பூமிகள் எல்லாந்தான் ஜெயித்து
மதத்தினாலே அரசரை வதைத்து மலையாளம் ஓடிப்போனவனே
ராமாவதாரமெடுத்துக்கொண்டு ராவணன் சீதையைக்கொண்டொளிக்க
தேடித்தேடிக் குரங்குகளோடு கூடிக்கொண்டு குலாவிக்கொண்டு
தனித்துக்காட்டில் வரும்போது சபரிகண்டு பூஜைபண்ண
நிஷித்தமான வேடச்சிஎச்சிலை நித்தியானந்தமாய் உண்டவனே
வாளரக்கனை சம்ஹாரித்து மைதிலியின் சிறை மீட்டவனே
பூர்ணகர்ப்பமாய் இருந்தசீதையை பின்னையுங்காட்டிலே விட்டவனே
ஆதிசிவனுக்குப்பெண்டாயிருந்து அரிஹரபுத்திரனைப் பெற்றவனே
கிருஷ்ணாவதாரமெடுத்துக்கொண்டுகோபாலவேஷந்தரித்துக்கொண்டு
இச்சையுடன்கூட பாலுக்கும் வெண்ணெய்க்கும் புத்திரனாகப்பிறந்தவனே
உறியின் வெண்ணெய்திருடியுண்டு உரலுடனே கட்டுப்பட்டவனே
பெண்டுகள் கூறையை வாரிக்கொண்டு புன்னைமரத்தில் ஏறிக்கொண்டு
இரண்டுகையுந்தூக்கிக் கும்பிடச்சொல்லி பங்கம்பதினாறுங்கண்டவனே
கம்ஸனைக் கொல்லவே வஞ்சனையாய் கள்ளனைப்போல வளர்ந்தவனே
மாடுமேய்த்துத் திரிந்தவனே மத்தினால் அடிகள்பட்டவனே
கட்டழகுஇடைப் பெண்கள்மார்களைக் கண்ணைக்காட்டி அழைத்தவனே
நாமத்தை நெற்றியிலிட்டுக்கொண்டு நன்றாகத்தோளிலே சுட்டுக்கொண்டு
காமன்கணையிலே சிக்கிக்கொண்டு காமுகனாகித் திரிந்தவனே
மோகினிவேஷந்தரித்துக்கொண்டு தேகங்கள்எல்லாம் மயக்கிக் [கொண்டு
கெங்காதரன்மேலே ஆசைகொண்டு சிவசங்கரன் பெண்டாயிருந்தவனே
பாற்கடலின் நடுவினிலே பாம்பின்மேலே பள்ளிகொண்டவனே (என்று)
இத்தனைபோதாய் நாங்கள்பாடுவதைச் சற்றும்மதிக்காமல் நீயிருக்காய்
உருமாலை கட்டவிழ்ப்பாள் பெண்கள் உத்தரீயத்தைப் பிடித்திழுப்பாள்
தலைப்பாகை பிடித்திழுப்பாள் தந்துவிடடா பணத்தைஎன்பாள்
தந்துவிடடாபணத்தை என்றவுடன் சச்சுதானந்தரும் தான்சிரித்து
பணமுங்களுக்கு வேணுமானால் என்படுக்கை யுள்ளுக்குவாருங்கோடி
ஆபரணம் வேணுமானால் (என்)அண்டையிலே சற்றே வாருங்கோடி
கேட்டதெல்லாம் நான் தருவேன் கிட்டக்க வாருங்கள் என்று சொன்னார்
கிட்டக்க வாருங்கள் என்கவுமே கிளிமொழிமார் கோபத்துடன்
ஏண்டா இடையா நீ இடும்புகள் ரொம்பப்பேசுகிறாய்
ஏண்டா திருட்டுகிருஷ்ணா இடும்பு உனக்கு போகல்லையோ
இடைப்பெண்களுடன் கூடிக்கொண்டு ஜலக்கிரீடை பண்ணினவன்
கோபிமாருடன் கூடிக்கொண்டு குறண்டிபாடின கூத்தாடி

அபிமானமற்றகிருஷ்ணு நீ ஆரையடா இந்தவார்த்தை சொன்னாய்
கோபித்துக்கொண்டவாள் சொல்லலுமே கோகுலவாஷியுந்தான் சிரித்து
தாம்பூலம் பழத்துடனே தட்டிலே ரொம்பஎடுத்துக்கொண்டு
430. இங்கிதமாகப் பணத்தைச்சொரிந்து ஏத்தமாகவே தான்கொடுத்தார்
இந்தப்படியவரண்டையில் எசி எண்ணிக்கையற்றபணம் பறித்தாள்

பிரும்மா ஏச்சு.

435. நான்முகரண்டையில் ஓடிவந்து (பெண்கள்)நாலுபுறமும் வளைத்துக் [கொண்டாள்
தாலக்கத்திம்பலம் ஆட்டிவைப்பாள் தந்துவிடடா பணத்தை என்பாள்
ஸ்ரீமன்) நாராயணருக்குப் புத்திரனாகவே நான்குமுகத்துடன் வந்துதித்து
தாயின்வயிற்றில் பிறவாதே தந்தைவயிற்றில் ஜனித்தவனே
மாதாவயிற்றில் பிறவாதே நாபிகமலத்தில் வந்தவனே
உதித்தவேளையில் ஒருவரில்லாதே எங்கும்ஜலமயமாகக்கண்டு
விழித்துக்கொண்டு இருக்கின்றபோது மதுகைடவரைக்கண்டு அஞ்சி
இதற்கு நாமென்னசெய்யப்போறோமென்று ஏக்கம்பிடித்து இருந்தவனே
மறித்தும் தாமரைத்தண்டின் வழியாய்மகாவிஷ்ணுவிடத்தில்வந்தவனே
சட்டிபானைபண்ணும் மண்ணுடையான்போல சிருஷ்டிக்கச்சேவகம் வாங்

440. மனமொத்தபடிக்கு ஜனங்களையெல்லாம் சிருஷ்டித்து பூமியில்விட் [டவனே
ஊனல்ஒடிசலும் கூனும் சப்பையும் குருடும் ஊமையுஞ் செவிடுமாய்
சொத்தைவிரலும் குட்டை நெட்டையும் சப்பாணி முடம் சிலதுமாய்
அதிக அழகாய்ப் பாதிப்பேர்களை அமைத்துப் பூமியில் விட்டவனே
உவமையில்லாமல் சிலரையமைத்து ஓர வஞ்சகஞ் செய்தவனே
அண்டத்திலுள்ள ஜனங்களில்பாதிக்கு அதிகசம்பத்தை வைத்தவனே
தண்டமுஞ்சோறும் இல்லாதேபறக்கச் சிலதுபேர்களை விட்டவனே
கர்மியாகவே பாபங்களைச்செய்யக் கற்பித்து பூமியில்விட்டவனே
புண்ணியசாலியாகப் பாதிப்பேரை சிருஷ்டித்து பூமியில்விட்டவனே
விருத்தியாகும்படிக்குச்சிலது பேரைப்பூமியில் வைத்தவனே
445. அற்பஆயுஸாய்ச்சாகும்படிக்கு அனேகஞ்சீவரை வைத்தவனே
இந்தப்படிக்கு எழுதி லலாடத்தில் ஓரவஞ்சகஞ் செய்தவனே
தந்தையைப்பார்க்கச் சமர்த்தன் நானென்று சபதங்கூறிச்சபையிலே
ஸுந்தரமூர்த்திசிரஸைக்கண்டு நான் க்ஷணத்திலோடிவருவேனென்று
ஹம்ஸமாகவே ஆகாசத்திலே அநேகந்தூரம் பறந்தவனே

சந்திரசேகரர் சிரசைக்காணமல் தவித்துப்பூமியில் வந்தவனே
பிரும்மரிஷிகள்நிறைந்தசபையினில்பொய்யைத் திடுக்கென்றுசொன்னவனே
சாம்பமூர்த்தியைக்கண்டு வந்தேனிப்போ சாட்சி தாழம்பூ என்றவனே
வேலவர்க்கு விடைசொல்லத்தெரியாமல் வெட்கமடைந்து இருந்தவனே
கோபத்துடனே மணியர் பிடித்து காவற்கிடங்கில் அடைக்கவே
450. வாய் திறக்கவழக்குமன்றியிலே வைத்த சிறையில் இருந்தவனே
சாம்பமூர்த்தியும் வந்துவிடுவிக்க பின்னையும்சிருஷ்டிக் கவந்தவனே
(அதி) ரூபமாகவே திலோத்தமையை எடுத்துக்கூட்டிப்பிடித்தவுடன்
மோகமடைந்த பிரும்மாநீயென்று மூன்றுலோகமுஞ்சொல்லாதோ
அகமுடையாளை நாவில்தரித்த அதிமோகனென்று அறியோமோ [என்றாள்
போரும் பிரும்மாவே பிரதிஷ்டைரொம்பத்தான் போடுமிங்கே பணத்தை
நான் முகவருங்கேட்டுச்சிரித்து நன்றாக இருக்கிந்தபாட்டென்று
கோடிதிரவியம் வாரிக்கொடுத்து நான்முகவரும் போனபின்பு

தேவேந்திரன்ஏச்சு.

(கொண்டாள்
தேவராஜாவைக் கண்டுகொண்டு பெண்கள் சுற்றிலும்வந்து வளைந்து
ஓடநல்ல சமர்த்தனடா உன்னுடசேதிகளை அறிவோம்
455. சூரனென்றுன்னைச் சொன்னது அபத்தம் சற்றுமுனக்கது இல்லையடா
தாருகாஸுரனுக்குப்பயந்து தலையைவணங்கியே நின்றவனே
சூரபத்மனண்டையிலே தொண்டுப்பணிசெய்து நின்றவனே
வலையனைப்போல் மீன்பிடித்து சுமைசுமையாய் கட்டிக்கொண்டு
காணிக்கையாக அஸுரன்முன் வைத்து ஸேவித்துக்கொண்டு இருந்தவனே
தம்பல வட்டிலை ஏந்திக்கொண்டு சூரபத்மன் அண்டையிலே
இரண்டுகாலுங் கடுத்துவலிக்க லஜ்ஜையுடன் கூடநின்றவனே
தாருகாஸுரன் சூரபத்மன் சிங்கமுகாஸுரன் தன்பயத்தால்
கண்டஇடமெங்கும் காடுமலைகளும் கலங்கிமயங்கித் திரிந்தவனே
சலந்திராஸுரனுக்குப்பயப்பட்டு சொர்க்கம்விட்டோடி ஒளிந்தவனே
460. இராவணராக்ஷதனுக்குப்பயப்பட்டு ஓடிக்குகையில் ஒளித்தவனே
வஞ்சனையாய்விருத்திராஸுரனைக்கொன்றுபிரும்மஹத்திவதைப்பட்ட
[வ
தங்கநிறம்பெற்ற இந்திராணியம்மன் அண்டையில் எப்பொழுதுமிருக்க
ரம்பை ஊர்வசி மேனகையோருடன்நித்தியமும் போகித் திருந்தவனே
அகலிகைதேவிக்கு ஆசைப்பட்டு அந்தணர்வேஷமெடுத்துக்கொண்டு
கௌதமருடைய தேவியைத்தொட்டு கேடுகெட்ட காரியஞ்செய்தவனே

கௌதமருடைய சாபத்தினாலே கிடுகிடென்று நடுங்கிக்கொண்டு
அங்கமெல்லாம் பங்கமாகி ஆயிரங்கண்ணை யடைந்தவனே
சரீரமெல்லாம் பங்கமாகி சபைதனில்வர வெட்கப்பட்டு
தாமரைத்தண்டில் ஒளித்திருந்த சமர்த்தனென்று அறியோமோ
465. எல்லாருஞ்சரி என்றுஎண்ணாது உன்னுடஜீவனதிகமென்று
சாகச்சோம்பி அமிர்தங்கடைந்து சதித்துவிட்டு அஸுரானை
வஞ்சித்துவிட்டு அமிர்தங்கடைந்து மட்டில்லாச்சம்பத்தடைந்தவனே
மற்றுமுள்ள அஸுரானைக்கொன்று சொர்க்கத்தில் வாழ்ந்து இருந்தவனே
சக்கரபாணியைச்சரணமென்று சந்ததம்வந்து அடைந்தவனே
கேசவருடைய கிருபையாலன்றோ தேவராஜனாய் நீயிருக்காய்
ஆதிகேசவர் கிருபையில்லாவிட்டால் அறைநாழிகை சொர்க்கம் ஆளவறியாய்
சமுத்திரத்தினில் கொள்ளையிட்டபணம் சங்கையில்லாமற் கிடக்கிறதே
எடுத்தொருபொதிமாணிக்கத்தை கொடுத்துவிட்டு நீ ராஜாவே
பொடுக்கெனவே நீ போடா போருமுந்தன் பிரதிஷ்டைஎன்றாள்
470. தேவராஜாவுங் கேட்டுச்சிரித்து சம்பிரம மிந்தப்பாட்டென்று
எடுத்துப்பிடித்துமவாள்நம்ம ஏழுஜன்மத்தின் உள்ளதெல்லாம்
விடுத்துவிடுத்துஏசிவிட்டாள் வெட்கமன்றோ நமக்குமிது
இருக்கப்படாதிங்கே இனிமேல் இன்னமும் இவாள்ஏசுவாள்
கலக்கிவிட்டாள் நம்மை இவாள்கிட்ட இருந்துகண்டார்போல்
எடுத்தொரு பொதிமாணிக்கத்தை கொடுத்துவிட்டந்தராஜாவும்
க்ஷணத்திலே குதித்தோடிவிட்டான் தேவலோகத்து இந்திரனும்

திக்குப்பாலகர்கள் முதலானவர்கள் ஏச்சு.

சூரியருடைய புத்திராராம் எமதர்மராஜாவைக் கண்டுகொண்டாள்
ஏண்டா இந்தமணியத்தைவாங்கி எல்லோரையுங்கொன்று கொண்டிருக்காய்
தாயிருந்துதவித்துப்புலம்ப சந்ததியைக்கொண்டுபோறவனே
475. மாதாவிருந்து தவித்துப்புலம்ப மக்களைக்கொண்டோடிப்போறவனே
காலுந்தலையுமாய்ச் செய்கின்ற காலனென்றுன்னை அறியோமோ
நீதியறியாமற்செய்யுகின்றநிஷ்டூரனென்று அறியோமோ
உனக்குப்பாடப்பயப்படுவோமென்று ஓடிநடந்தார்பெண்களெல்லாம்
சந்திரன்சூரியன் அஷ்டதிக்குப்பாலாள் சப்தமருத்துக்கள் அக்னிவாயு
அஷ்டநாகரும் பிரசித்தகுபேரனும் ஆதிசேஷர்முதலாக
பெற்றஹிமவானும் அநேகராஜரும் முப்பத்துமுக்கோடிதேவருடன்
அத்தனைபேர்க்குமுள்ள பிரதிஷ்டையை ஏசிஏசியேபாடிக்கொண்டு

பத்துக்கோடிபணந்தான் பறித்து பாடிச்சலித்துவிடாய் மிருந்து
ஒருத்தி மனையில் பணத்தைகொண்டுவைத்து ஏழுமலைபோலேதான் குவித்து
பத்திரமாக பதனம் பண்ணிவைத்தால் பத்துக்கோடிபொன் உனக்குத் (தருவோம்
சற்றுமிதினில்குறைந்துவிட்டுதானால்வைத்தபொன்னுக்கு இரண்டாகவாங்கு (வோம்
கட்டுமுட்டாய்ச்சொல்லிவைத்துவிட்டு காரியக்காரிகளெல்லோரும்
ஒப்பாகவெல்லாருங் கூடிக்கொண்டு ஒருபுறமாக நின்றுகொண்டு
படிக்கீழ்ச் சறுகித்தே பாதிமுற்றமும் நிழலாச்சே
வயிற்றைப் பசிக்கிறதே வடிவழகியைப் பெற்றவளே
உண்ணப்பசிக்கிறதே உன்னோடுசொல்லப் பயப்படுறோம்
கத்தரிக்காய்க்குப் புளியைக்குத்தி காறாமல் நன்றாய்ப்பொடியைத்தூவி
புத்துருக்குநெய்யை ரொம்பவிட்டு புதுக்கடுகைப் பொரித்துக்கொட்டி
வற்றல்வறுத்து வடாம்பொரித்து முத்தினதேங்காயைக் கீறிவைத்து
சருவந்தனிலே நீர்த்தமெடுத்து சம்பாஅரிசியை அரிச்செடுத்து
வறுத்தபருப்பும் அரிசியுங்களைந்து வங்காளமஞ்சள் அறைத்துவிட்டு
தங்கநிறம்போல பொங்கலைப்பொங்கி எங்கள்கலத்தினில் இட்டுவிடு
ஆயிரம்பொன்னை முடிப்புக்கட்டி (எங்கள்) அண்டையில்வைத்தால்பிடிஎடுப் (போம்
ஆயிரந்தரமாய்க்கெஞ்சினாலும் அத்தை ஒருபோதும் கூட்டாக்கோம்
தண்ணீரிருக்கின்ற சாலுடைப்போம் தலைக்கடைக்கதவைப் பேர்த்துவைப் (போம்
எண்ணிப்பணத்தைக் கொடுக்காவிட்டால் அன்னத்தை எங்கு மிறைத்திடு (வோம்
இந்தப்படி பெண்கள் சொன்னவுடன் உகந்துகொண்டந்த மேனையும்
அந்தப்படிக்கு சமைத்துமிட்டு ஆயிரம்பொன்னும் முடிந்துவைத்தாள்
பந்திஇருந்து புசித்துவிட்டுப்பெண்கள் பாக்குவெற்றிலை போட்டுக்கொண்டு
புட்டுக்குமண்ணைச்சுமந்த சிவனாரின் பட்டமகிஷியாம் பார்வதியை
வட்டமனைமேலே வைத்துக்கொண்டு இஷ்டத்துடன் பாடிக்கொண்டிருந் (தாள்

மேனையம்மாள் பிட்டுச்சமைத்தல்.

மூன்றாம்நாளின் உதயத்திலே விடியரெண்டரை நாழிகைக்கே
சட்டமாக மேனையம்மாளும் தியாஜ்யராகுகால மெப்போவென்றாள்
சதுரானவாத்தியார் பார்த்து தியாஜ்யராகுகால மில்லையென்றார்
முத்துச்சம்பா அரிசியிலே முப்பதுகலமுந் தான் நனைத்தாள்
பவழச்சம்பா அரிசியிலே பத்துக்கலமும் நனைத்தாளாம்

காரியக்காரிகள் சேர்ந்துகொண்டு களைந்துவாரி எடுத்தாளாம்
பர்வதராஜாவின் கூடத்திலே பவிழக்குந்தாணி வைத்தாளாம்
முப்பதுபெண்டுகள் மாவிடிக்க மூன்நூறுபெண்டுகள் தெள்ளிப்போட
495. பொன்னும் முறத்திலேலே புடைத்துவாரி எடுத்தாளாம்
புட்டுச்சுடும் அடுப்புக்கு முத்துமுத்தாகவே கோலமிட்டு
சந்தனக்கட்டையை வெட்டிப்போட்டு தள்ளியடுப்பை எரியவிட்டு
பத்துஉருளி அடுப்பில்வைத்து பதமாக வறுத்துக்கொட்டி
முப்பதுசருவம் வாயைக்கட்டி முக்கூர்த்தம்பார்த்து அடுப்பில்வைத்தாள்
புஷ்பம்போலவே புட்டைச்சமைத்து புன்னிவாரி எடுத்தாளாம்
கொப்பரைநிறையப் பாகைக்காய்ச்சி கோத்துக்கிளரி எடுத்தாளம் [ட்டு
துவரம்பருப்பைச் சமைத்துக்கொட்டி கொப்பரைத்தேங்காய் துருவிப்போ
குடத்துநெய்யைச் சரித்துவிட்டு கோத்துக்கிளரிக் கலந்தாளாம்
ஏலக்காயை இடித்துக்கொட்டி நேர்த்தியாகக் கலந்தாளாம்
500. பொற்பிரப்பங்கூடைகளிலே புட்டைவாரி எடுத்தாளம்
தங்கத்தம்பாளத்தில்புட்டைஎடுத்து சாம்பமூர்த்திக்கு முன்னேவைத்தாள்
பெற்றஹிமவானும் சாம்பமூர்த்தியும் மற்றுமுள்ளவரும்தான் புஜித்தாள்
அருந்ததியும் லக்ஷ்மியும் அழகாய்க்கோலங்கள் செய்துகொண்டு
தலையைவாரிச் சொருகிக் கொண்டு சரிகையாடையுடுத்திக்கொண்டு
ஆவாரை பூத்துச்சொரிந்தாப்போல் ஆபரணங்களும் பூட்டிக்கொண்டு
மேளமுடனே வாத்தியமும் நாகஸ்வரமும் முழங்கிவர
ஹிமோத்கிரி வீதியிலேயுள்ள எல்லாருடைய கிரகங்களுக்கும்
அருந்ததியும் லக்ஷ்மியும்கூடி ஆங்கள்தோறும் புட்டை இட்டுவந்தாள்

ஸ்ரீ பார்வதிதேவிக்கு மங்கள ஸ்நானம் பண்ணி வைத்தல்

நான்காம்நாளின் உதயத்திலே நாலாஞ்சாமக் கடைசியிலே
505. கேசவர்பூமி அளந்தமிருத்திகையால் கரங்கள் அம்புஜபாதத்திலும்
தேவியும்எட்டுத் தலைவாலும் தீர்த்தத்திலும் சுத்தமானபின்பு
கூடியிருந்த குமாரிகளும் கூடப்பரிசுத்த மானபின்பு
ஈரத்துகில்விழுத்துமவாள் இந்திரவாளிப்பட்டுடுத்தி
அச்சாப்பெண்காச் சோபனம்பாடி அரண்மனைக்கு வந்துவிட்டாள்
அம்மனைமணைமேல்வைத்துக்கொண்டு அன்புடன் பெண்களும் பாட்டுப்பாடி
போராதுநீங்கள் பணங்காசுதந்தது பாட்டைரொம்பவும்பாடிவிட்டோம்
மூன்றுநாளும் உடுத்திவிழுத்த புடவைக்கு ஆயிரம்பொன்னும்முண்டு
சப்பைவைக்க ஆயிரம்பொன் தங்கமாலைக்கு ஆயிரம்பொன்

பட்டுப்பாய்க்கு ஆயிரம்பொன் பொன்னுஞ்சீப்புக்கு ஆயிரம்பொன்
510. உண்டுஎங்களுக்கென்றுசொல்லிப்பெண்கள்உறக்கக்குதித்துப்பாடினு
கேட்டுமேனையும்கொத்துச்சரப்பளி குலுங்கமெள்ளச் சிரித்துக்கொண்டு
ஏத்தமாகவே ஐயாயிரம்பொன்னை எடுத்துமெள்ளக் கொடுத்துவிட்டு
காட்சியாகியகாரியந்தன்னிலே கடுகெனவே போய்ப்புகுந்தாள்.
பார்த்துப்பார்த்து பணத்துடனேபணம் சேர்த்துகொண்டுபோய்வைத்து விட்டு
ஓட்டமாகவேஓடிவந்தார்பெண்கள் என்னசொல்லியும் கேளாமல்
நாலுகால்மண்டப மத்தியிலே நன்மைகளான தோர் கூடத்திலே ள்
கோமயத்தாலே குறுக்கும்நெடுக்குமாய் கோணக்கமாணக்கக் கோலமிட்டா
அம்மனைரத்ன மணைதன்னிலே அன்புடன் தாயார் கொணர்ந்துவைத்தாள்
அத்தையரும்வந்து எண்ணெய்தேய்க்க ஆயிரம்பெண்டுகள்பாட்டுப்பாட
515. நன்மைகள்ரொம்ப வருகின்றதேவிக்கு எண்ணெயினாலே உபசரித்தாள்
ஆயிரம்பெரிய பெண்டுகளும் பதினாயிரம்குஞ்சு குழந்தைகளும்
தோயவேஎண்ணெய்யைத்தேய்த்துக்கொண்டு தேவியுடனேநடந்துவந்தாள்
செண்பகப்பூவும்ஜெவ்வந்திப்பூவும் சேர்த்துவாரி இறைத்துக்கொண்டு
அடிக்கடிபெண்கள் ஓடிவந்து அம்மனையுஞ்சப்பைவைக்கலுமே
ஏதடியோ அடிபெண்களா நீங்களும் இப்படியுஞ்சப்பை வைப்பயளோ
போருமடியோ பெண்களா எங்களின் புத்திரிக் குடம்புக்காகாது
கடுகடுத்து மேனையுஞ்சொல்லி கையைப்பிடித்து விலக்கிவிட்டாள்
அழகானகங்கைப் படித்துறையிலே அத்தனைபெண்களும் வந்திறங்கி
சிகைக்காய்நெல்லி அரப்புடனே சிறுபயறு கஸ்தூரிமஞ்சள்
வாஸனைப்பொடியுந்தேய்த்துக்கொண்டு மங்களஸ்நானமும் பண்ணிவிட்டு

ஸ்ரீபார்வதிதேவி ஊர்கோலம் வருதல்.

520. அத்தனைபேர்களும் பட்டுப்புடவையை அழகாக உடுத்திக்கொண்டு
பத்தினிமார்களுடன்கூட அம்மன் பாலும் பழமும் புஜித்துவிட்டு
ஏழு உலகமும் விலைமதிக்கும் இந்திரவாளிப் பட்டுத்தானுடுத்தி
பச்சைமுத்தணிரவிக்கையை அம்மன் பாங்காகத்தரித்துக்கொண்டு
மஞ்சள்ஒளிவிடும் நெற்றிதனில் அம்மன் மண்டலம்போலவேபொட்டுமிட்டு
கண்ணுக்கு அஞ்சனமிட்டுக்கொண்டு கந்தங்கலந்து தரித்துக்கொண்டு
குமுகுமென்று மணக்கமணக்க குளிரச்சந்தனம் பூசிக்கொண்டு
தங்கக்கலசங்கவிழ்த்தாற்போன்ற கொங்கையிரண்டு நடுவினிலே
தங்கமணியும் சரப்பளியும் திருமங்கிலியத்துடனேவிளங்க
உண்டைக்காரை உத்தண்டாவும் வண்டயம்முத்துப்பதக்கமும்.

525. முன்கைமுல்லாரி ஹஸ்தகடகம் மோதிரம் நெளி பூடமும்
முத்துக்கட்டினபாவலியுடன் முருகுடன் முத்துவாளியும்
நெற்றியின்சுட்டியும்சூரியப்பிரபையும் சேர்த்தியான சந்திரப்பிரபையும்
பக்கத்திலுதித்த சூரியனொளிபோல் பார்வதிதலையில் ஆழ்வானும்
ராக்கோடியுந்தாங்கலுடனே ஜடைநாகம்ஜடை கொத்ஸம்
பாடாந் தண்டையும்பாதஸரத்துடன் காலாழியுடன் பீலியும்
காலோடுதலை யம்மனுக்கு காந்தியுடன் அலங்கரித்தாள்
சுந்தரியாளுட மார்தனிலே சொர்னபுஷ்ப மாலைகளும்
வில்வபத்திர மாலைகளும் மகிழம்பூவின் மாலைகளும்
பாதிரிப்பூமாலைகளும் நல்ல பாரிஜாதப்பூமாலைகளும்
வெட்டிவேருடன் முல்லை மல்லிகை மருக்கொழுந்து மாலைகளும்
530. ருக்வேத மாலைகளும் யஜுர்வேத மாலைகளும்
சாமவேத மாலைகளும் சாஸ்திரங்களின் மாலைகளும்
எத்தனையோ புஷ்பமாலைவகைகளை ஏற்றமாகத்தரித்துக்கொண்டு
தங்கமயமாய் விளங்கிமின்னும் (சொர்ன) தண்டிகைதன்னில் ஏறிக்கொண்டு
சப்தரிஷிகள் விநோதமுடன் கூடத்தண்டிகை தன்னைச்சுமந்துவர
இந்திரையுடன் சகலதோழிகளும் இருபுறங்களும் பாடிவர
அம்மன் தண்டிகை பின்னுடனே ஆயிரம் பெண்டுகள் சூழ்ந்துவர
சுந்தரியம்மன் இருபுறமுநின்று தோழிகள்வெண்சாமரைவீச
அஷ்டவசுக்களும் தேவர்களுஞ்சூழ அஷ்டதச வாத்தியம் முழங்க
535. அடிக்கடி அந்தவீதியிலே ஆனந்தமாய்தேவாள்பூச்சொரிய
அப்ஸரஸ்திரீகள் அணியணியாய் அபிநயத்துடன் பாடிவர
துலக்கமாகின்ற வீதியிலேதேவி சூரியஉதயம் போல்வரவே
தனக்குவந்த பெருமைபோல் பெண்டுகள் தங்கள் தங்கள் அரண்மனையை
விளக்குகளால் அலங்கரித்து முத்துமுத்தாகவே கோலமிட்டு
தெளித்து எங்கிலும் பனிநீரிலே தோரணங்களும் கட்டிவைத்தாள்
மங்களமான சுந்தரிக்கு (பஞ்ச) வர்ணப்பொடி போட்டதட்டினிலே
பக்தியுடன்கூட மங்களஹாரத்தி பார்வதிதேவிக்குத்தானெடுத்தாள்
ஆங்கள்தோறும் ஹாரத்திஎடுத்து ஆனந்தசாகரத்திலமிழ்ந்தாள்
நாலுதெருவீதி சுற்றிக்கொண்டுதேவி ராஜஅரண்மனைவாசல்வந்தாள்
540. கோடிஜனங்க ளோடேயம்மன் கோட்டை வாசற்படியில் வந்தாள்
தண்டிகைவிட்டு இறங்கினஉடனே தாயாரும் ஹாரத்திக் காப்பெடுத்தாள்
மங்களஹாரத்திக் காப்பெடுத்தாள் வாஸுதேவர்ஸோதரிக்கு
வாணி இந்திராணியும் லக்ஷ்மியும் வணங்கிதேவிக்குக் கைகொடுத்தாள்
ஆதரவுடனே பார்வதிதேவியை அந்தப்புறத்தில் அழைத்துவந்தாள்

பார்வதிதேவிக்கு ஏற்றி இறக்குதல்.

தங்க ஆசனத்தின் மேலிருந்தாளம்மன் சந்திரோதயமானதுப்போல்
அருந்ததியம்மன் தேவியிடம் வந்து அமர்ந்து சுந்தரி பூங்குழலை
வகுந்து தூவலாற்றி மாணிக்கச் சீப்பினால் வாரிவிட்டு
ஒவ்வோர் மயிருக்கும் பூவிதழும் ஒவ்வோர்மயிருக்கும் பொன்னிதழும்
வைத்துமுடிந்து பின்னிவிட்டாள் மான்சவரி தன்னாலே
நவரத்தினத்தாலிழைத்த அழகுள்ள சூடாமணியை
சிவனுடைய நாயகியாளுக்கு சிரஸின்மேலே தான்தரித்தாள்
மங்களமான சோழிகழக்கோடி அம்மானை எழுத்தாணி சங்கும்
மரப்பாச்சி நடுவில்வைத்துமுடி வைத்தாள் மறைவாகவே
தங்கத்தினாலே அமைத்த தலைவாழைஇலை போட்டாள்
கெங்காஜலந் தெளித்து குளிர்நல்ல முத்துப்போல்
சொர்னக்கெண்டியில் தீர்த்தம்வைத்து சுந்தரனார் நாயகிக்கு
பொற்கொடியாள் மேனையம்மாளும் புத்திரிக்குப் பரிமாறினாள்
மதுரமானபச்சடி ஐம்பதும் வாஸனையுள்ள பொரிகறி நூறும்
பழவகைதனில் ஆயிரமும் பணியாரவகைகளில் கோடியும்
திரட்டுப்பாலும் சர்க்கரையும் தித்திக்கும் பரமான்னமும்
குழம்புப்பாலுந் தேனுடனே சொர்னக்கிண்ணியில் ஆச்சியமும்
முத்துச்சம்பாவின் அன்னமும் பருப்பும் முப்பருப்புச்சேர்ந்த சர்க்கரைப் [பொங்கலும்
ஷட்ரஸமான போஜனத்தைச்சிவ சங்கரிக்குப் பரிமாறினாள்
பொற்றளிகைதனைமூடி பெரியபெண்டுகள் கூடிக்கொண்டு
அற்புதமான சிகாயப்பத்தை அந்தந்தஸ்தானங்களிலே வைத்து
குத்துவிளக்கு ஒருகையிலும் கெங்காஜலம் ஒருகையிலும்
முத்துநாழியும் கையிலேகொண்டு மின்கிளிபோலவே ஐந்துபெண்டுகள்
இஷ்டமாகவே ஈஸ்வரிதேவிக்கு ஏத்தி இறக்கிப்பாடினாள்
பக்தியுடன் சிவசங்கரியும் பரமேசுவரைச் சிந்தையில் எண்ணிக்கொண்டு
பத்தினிமார்கள் சபைநடுவே பார்வதிதேவி நமஸ்கரித்தாள்
முத்துக்குமாரன் பிறக்கவேணுமென்று அச்சுதம் எல்லவரும் தெளித்தார்
புத்திரன் பொட்டெனவேணு மென்று சுற்றுமிருந்திட்ட வஸ்துக்களை
அன்புடன் அம்மன் மறைவாக அடிமடியினில் வைத்துக்கொண்டாள்
முத்தாசனந்தன்னில் வீற்றிருந்தாள் சச்சு தானந்த ரூபிணியும்
சுற்றிலும் ஆயிரங்குஞ்சுகளை தேவிவளையவே வைத்துக்கொண்டு
அம்புஜ கரத்தினாலே கலந்து அன்னமுருட்டி வழங்கிநின்றாள்
அன்னம் புஜித்து சகலபேருடனும் அன்புடன் தேவிமகிழ்ந்திருந்தாள்
சந்தனபுஷ்பமும் தாம்பூலத்துடன் சகலபேருக்கும் வழங்கி நின்றாள்

தலைவான்பெண் கூடிக்கொண்டு தனம் தங்களுக்குப் பாதிவைத்துக் [கொண்டு
தலைக்குநாழிப்பணம்வீதம்போட்டு தப்பாமல் எல்லவர்க்கும்கொடுத் [தாள்

ஸ்ரீபார்வதிதேவியின் சாந்திகலியாண வைபவம்.

கைலாஸநாதரும் நல்லதினத்திலே கனகபூஷணம் பூட்டிக்கொண்டு
கைலாஸத்துள்ள தேவரிஷிகளை சேகரித்து அழைத்துக்கொண்டு
வெள்ளிரிஷபத்தில் ஏறிக்கொண்டு வெண்கலபேரி முழங்கிவர
வெள்ளிமலையில் இருந்து புறப்பட்டு வேணவிருதுகள் சூழ்ந்துவர
வெள்ளிக்கிழமை உதயத்திலே வேதநாதர் ஹிமோத்கிரிக்கு
பார்வதிதேவி மனம்மகிழப் பரமேச்வர மூர்த்தியும் வந்துவிட்டார்
விச்வகர்மாவும் அந்தக்ஷணத்திலே விஸ்தாரமான ஜனங்களுக்கு
அற்புதமாகவே கலியாணமண்டபம் கற்பித்தாரந்த க்ஷணத்துக்குள்ளே
நாலுகால்மண்டப மத்தியிலே நாலுமூலைப்படமேருப்போட்டு
நாலுபுறமுங் கொடுங்கையிறக்கி நன்றாகச் சுற்றிலுங் கோலமிட்டு
மல்லிகைமுல்லைமுதலான மாலைகளை எங்குந்தொங்கவிட்டு
அல்லியரசாணி கலியாணமண்டபம் அற்புதமாக அலங்கரித்தாள்
ஆதிசிவனுக்கும்பார்வதிதேவிக்கும் அப்பியங்கஸ்நானமும்பண்ணிவைத்தாள்
மணமுடையதோர் தைலங்களிட்டு மங்களஸ்நானமும் பண்ணிவைத்தாள்
ஈரத்துகிலும் விழுத்து இழை சேர்ந்த பட்டுமுடுத்து
கால்அலம்பி ஆசமனம் கடுகெனவே பண்ணிவந்தாள்
நீலகண்டர்க்கும் பார்வதிதேவிக்கும் நிறைய புஷ்பங்கள் சாத்தியே
காந்தியுடன் மணையிலிருந்தாள் காமரூபி யருகினிலே
சாந்தி நாந்தி மந்திரங்களை சகலரிஷிகள் ஜபிக்கவே
தங்கக்குடத்தினில் கங்காதீர்த்தத்தை சாம்பமூர்த்தியின் முன்னேவைத்து
மங்களமாகவே மாவிலைக்கொத்தும் மணித்தேங்காயும் மேலேவைத்து
அழகான பொன்னுங்குடத்திலே அண்டையில் வைத்த ஜலஞ்செபிக்க
தங்கக்குடத்தின் கங்காதீர்த்தத்தை சாம்பமூர்த்தி கையிலெடுத்து
பாவனமாகவே ஈசரும் கையினால் பார்வதிக்கு அபிஷேகம்பண்ணி
அம்புஜபாணிக்கு கூறையுடுத்தி அன்புடன் தோழிமார் நின்றுகொண்டு
மங்களநாயகி யம்மனையப்போ மறைச்சுக்கொண்டவாள் பாடினாள்
ஈஸ்வரியை விடமாட்டோமென்று இன்பமுடனே பாடினாள்
சப்தரிஷிகளும் அப்பொழுது சாம்பமூர்த்தியைப் பார்த்துச் சொல்வார்
அர்த்தங்கொடுத்து அழைக்கவேணுமென்று ஆதிசிவனுக்குச் சொல்லலுமே
பரமேச்வரரும் மனதுக்குள்ளே பரிபூர்ணமாக மகிழ்ந்துகொண்டு

ஆதரவாகப்பணத்தைச் சொரிந்து ஆனந்தத்தாம்பூலங் கொடுத்தார்
575. சங்கரிதேவி சகிகளுமப்போ சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு
மங்கையரை மணைதனில்வைத்து மனமகிழ்ந்தவாள் பாடினாள்

ஸ்ரீ பார்வதிதேவிக்கு சீதனவரிசை வைத்தல்.

அம்புஜவல்லி மணையிருக்கும் ஆசீர்வாத சமையத்திலே
மூர்த்திக்கு மாமியார்மேனையம்மாளும் முப்பதுகலப் பயறெடுத்து
உற்றார்பெற்றாருடன்கூடவறுத்து உடைத்துசெரித்து எடுத்துக்கொண்டு
கோடிதுலாம் வெல்லம்போட்டு கொப்பரை நிறையப்பாகுகாச்சி
ஏழுகலஎள்ளை வறுத்துக்கொட்டி ஏழாயிரந் தேங்காய் கீறிப்போட்டு
கூட்டிப்பாகுடனே கலந்தாள் கோபுரம்போலவே பருப்புத்தேங்காய்
சேர்த்துக்கலந்து பிடித்து நிமிர்த்தினாள் சித்திரத்தேர்போல தேங்காயை
ஐங்கலம் பிடிக்கும் சால்பருமன் அப்பதில் ஆயிரங்கோடியாம்

580. மூன்றுசுற்று போட்டமுறுக்கிலே மூவாயிரம் கோடிவைத்தாளாம்
முப்பதுகோடிவெல்லச்சீடை மூன்றுமரக்கால் உப்புச்சீடை
மதுரமான திரட்டுப்பாலும் வைத்தாள் கோடிகிடாரத்திலே
பருப்புத்தேங்காய்க்குச் சுற்றிவளையக்க பத்துக்கோடி பாக்குவெற்றிலையும்
நிறுத்தித்தேங்காய்க்கு அலங்காரம்பண்ணி நீலகண்டரின் முன்னேவைத்
தாள்

ஆயிரக்கலம் அரிசியுடனே அதற்குவேண்டிய சாமான்களும்
ஆயிரங்கூடை காய்கறிவகையும் ஐந்நூறுகூடை பழவகையும்
பட்டுச்சரிகை சோமனும்மடித்து பட்டுப்புடவையும் மேலேவைத்து
வேதப்பிராமணாள் பஞ்சாதிசொல்ல மேளவாத்தியம் முழங்கிவர
உடற்பிறந்தான் அச்சுதரும் ஊர்கோலத்தின் கூடவரவே

585. சிப்பல்அகப்பைவெண்கலப்பானைகள் சேத்தடுக்கியஅடுக்குப்போகணி
அடுக்குத்தவலை சோட்டுத்தவலை அழகான குடந்தோண்டி
'வென்னீர்த்தவலை பெரியதவலை விளாவிவைத்திடக் கெங்காளம்
மொண்டுகொடுக்க வெண்கலச்சொம்பு ஆற்றிக்கொடுக்க அருக்கஞ்சட்டி
எண்ணெய்காய்ச்ச இலுப்பச்சட்டி எடுத்துத்தேச்சுக்க வால்கிண்ணம்
அரப்புக்காய்ச்ச உருளியும் அள்ளித்தேச்சுக்க கிண்ணமும்
தம்பலவட்டிலும் வெள்ளிப்பேலாவும் தாம்பூலத்துடன் தங்கத்தட்டும்
குத்திவிளக்கும் தொடவிளக்கும் கொஞ்சுங்கிளி விளக்குகளும்
ஆனைவிளக்கும் ஹம்ஸவிளக்கும் அழகான சாவிவிளக்கும்

பதினாயிரம் யானைகள்மேல் பாத்திரங்கள் எடுத்துக்கொண்டு
590. பத்துலக்ஷம் யானைமேல் பக்ஷணங்க ளெடுத்துக்கொண்டு
பந்தலிடம் போராதே பரத்தினாளாம் பாத்திரங்கள்
நிற்கவிட மில்லாமல் நிறைத்தாளாம் வெண்கலங்கள்
பால்பசுக்கள் ஆயிரமாம் பாங்கிமார்களில் ஆயிரமாம்
ஆனைகுதிரை ஆயிரமாம் அச்சுத்தேர்களில் ஆயிரமாம்
மெத்தை தலையணை தூங்குமஞ்சம் வெள்ளிக்கரண்டகம் பாக்குப்பையும்
விலையில்லாத வெண்பட்டுஆடையும் முப்பதுபைதன்னில் மோகராவும்
சதுரான வாத்தியார் சபைநடுவே எழுந்திருந்து
அழகாய்ப்பஞ்சாதி சொல்லிக்கொண்டு அண்டமெல்லாம் அதிரவே
பெண்ணுக்குப் பட்டுப்புடவை என்றுசொல்லி பெருமையாகவே ஓதினார்
595. மாப்பிளைக்கு வெண்பட்டு என்று மதிப்பாகவே ஓதினார்
அப்போதந்த ஹிமவானும் ஆயிரம் பொன்னை முடிப்புக்கட்டி
எடுத்துக்கொண்டவர் தாம்பூலத்துடன் ஈச்வரனார்முன்னே நின்றுகொண்டு
ஜகத்பதியே உமக்கெதிரில்நான் கொடுக்கப்போவது ஏதய்யா
பத்திரம் புஷ்பம் தாம்பூலம் அக்ஷயமாயெண்ணிக் கொள்ளுமையா
அக்ஷயமாய்க் கொள்ளுமையாவென்று ஆதிசிவன்கையிலே கொடுத்தார
அற்புதமாகிய அங்கமணிகண்டு அந்தச்சபையோரும் மெச்சிக்கொண்டாள்
அன்றைக்கு ராத்திரிவேளையிலே அற்புதமாகிய லக்னத்திலே
அன்னதானமும் பலதானங்களும் அத்தனைபேருக்கும் பண்ணிவைத்தாள்
அம்மன் ஈாபியைத்தொட்டுச்செபித்து அந்தப்புறத்தில் அழைத்துவந்தாள்
600. பஞ்சைவேஷத்தைத்தான்களைந்து சிவன் பாங்காய்ப்பூஷணம்பூட்டிக் கொண்டு
சரிகைப்பீதாம்பரமணிந்து தங்க அரைஞாணும் போட்டுக்கொண்டு
உத்தரீயம் மேலேபோட்டுக்கொண்டு முத்திரைமோதிர மிட்டுக்கொண்டு
மன்மதனைப்போல சாம்பமூர்த்தியும் மந்தஹாஸமாகத் தானிருந்தார்
தூங்குமஞ்சத்தில் சாய்ந்துகொண்டு தங்கத்தூணிற் காலையுதைத்துக் கொண்டு
சற்றேமெள்ளச் சிரித்துக் கொண்டு சங்கரியையே நினைத்துக்கொண்டு
எப்போவரப்போராள் என்று எட்டிஎட்டிச் சிவன் பார்த்திருந்தார்
உலகத்திலுள்ள மங்கையரைப்போல உமையுமுபசாரம் பண்ணிக் கொண்டாள்
ஜகத்தினிலுள்ள பெண்களைப்போலவேதேவியும் சற்றே அலைக்கழித்தாள்
உலகவாடிக்கை போலவேயம்மன் போகமாட்டேன் என்று சொன்னாள்
605. அம்மன்கையைப் பிடித்தழைத்து ஆதிசிவனிடங் கொண்டுவிட்டு
ஈச்வரியை உள்ளே கொண்டுவிட்டு இப்புறந்தா ளிட்டுக்கொண்டு

பெண்களெல்லாரும் கூடிக்கொண்டு பொன்னுங்கதவின் இடுக்காலே
என்னபேசிக்கிறாள் இவாளென்று ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தாள்
அம்மனுங் கதவுமூலைதன்னில் ஆந்தையைப்போல் விழித்துக்கொண்டு
சித்தமும் ஹஸ்தமும் திருப்பாதங்களும் கிடுகிடென்னவே பறக்கவே
நெஞ்சும்மாரும் திடுக்குத்திடுக்கென்ன நெற்றியில் முத்துப்போல்வேர்த்
[தரும்ப
வலையிலகப்பட்ட மீன்போலம்மன் மலங்கமலங்க விழித்து நின்றாள்
சாம்பமூர்த்தியும் அந்தசமயத்தில் காமன்கணை தன்னில் சிக்குப்பட்டு
அம்மன் கையைப்பிடித்தழைப்பர் அகப்படாமலே ஓடுவள்
610. தேவியின்கையைப் பிடித்தழைப்பர் திமிறிக்கொண்டம்மன் ஓடுவள்
பின்னையுங்கையைப் பிடித்தழைப்பர் பிடிபடாமலே ஓடுவள்
தன்னையறியாத மோகத்தினாலே சங்கரியண்டையில் கெஞ்சுவர்
அண்டையிலே போய்க்கெஞ்சுவர் அப்பாலே முகந்திருப்பிக்கொள்வள்
தோளுடன் அம்மன் தன்னையணைத்து தோழமையுடன் அணையப்போவர்
சாம்பமூர்த்திக்கு முகத்தைக்காட்டாமல் தலையைக்கீழே குனிந்திடுவள்
காலம்போகுது என்றுசிவன் கட்டியணைத்துமே கொண்டுவந்து
துணிந்துகையாலே தானழைத்து தூங்குமஞ்சத்தில் வைத்துக்கொண்டார்
பரிமளமான புனுகு சந்தனம் பார்வதிதேவிக்குப் பூசிவிட்டார்
கொழுந்துவெட்டிவேர் மல்லிகைப்பூ கொம்பனையாளுக்குச் சூட்டிவிட்டார்
615. ஏலம்லவங்கம் சீவல்வெற்றிலை ஈசரும் திருத்தேவியுடன்
கூட்டித்தாம்பூலம் வாயிலடக்கி குமுகுமென்று மணத்திடவே
கழுத்தைக்கட்டியணைத்துக்கொண்டு கட்டிக்கொண்டு முத்தமிட்டுக்
[கொண்டு
சரஸமாகவே வார்த்தைகளைச்சொல்லி சந்தோஷமாகவே தானிருந்தார்
சகிஎல்லாருங் கதவருகில் நின்று சந்தைவைத்து ஏசல்பாடலுற்றாள்

கதவுதிறக்கும் பாட்டு.

1. மலைய ராஜகுமாரி மங்கையே மாது நான
சங்கரர் தானடி மானே
சொர்னக்கதவு திறவடி என் தேனே
2. விந்தையுடன் நடந்து சங்கரி பொற்கதவை
சிக்கெனத்தாள் திறந்தாள் மாது
சொர்னச்சங்கிலி திறந்தாளப்போது
3. அஞ்சன விழியாளே ஆயாஸமாக வந்தேன்
வெண்சாமரம் வீசடி மானே
திவ்ய பரிமளங்கள் பூசடிதேனே

4. அறுகு சிரஸில் வைத்து விபூதி யணிந்தோர்க்கு
பரிமள கந்த மேது சுவாமி
உமக்கு பரிமள கந்தமேதுசுவாமி

5. அர்ச்சுனன் பூஜை செய்தான் அளவற்ற கந்த புஷ்பம்
வாஸனை வீசுதடிமானே
திவ்ய பரிமளம் வீசுதடி தேனே

6. எனையாளும் ஈஸ்பரரே இளைப்பு மிகுந்ததென்ன
எந்தனிடத்தில் சொல்லும் சுவாமி
நிஜம் எந்தனுடனே சொல்லும் சுவாமி

7. அந்தர வனந்தனிலே அடமுடன் பத்மாஸுரன்
அதட்டி வந்த இளைப்பு பெண்ணே
என்னை விரட்டி வந்த இளைப்பு கண்ணே

8. பரஞ்சோதியாய் நிறைந்த பரமசிவமே உம்மிட
பக்கத்தில காய மென்ன சுவாமி
ஒரு பக்கத்தில் காய மேது சுவாமி

9. வெந்த பிட்டுக்காக உந்தன் தகப்பன் கையால்
சந்தில் அடிபட்டேண்டி மானே
சொர்னப்பிரம்பால் அடிப்பட்டெண்டி தேனே

10. பஞ்சமுகங்களெல்லாம் கஞ்சமலர்கள் போலே
கொஞ்சம் சிவந்த தென்ன சுவாமி
கண்கள் கொஞ்சம் சிவந்த தென்ன சுவாமி

11. பக்தியாய்ப் பாணனென்னை சிரத்தையாய்ப் பூஜைசெய்தான்
நித்திரை விழித்தேண்டி பெண்ணே
கொஞ்சம் நித்திரை யற்றிருந்தேன் கண்ணே

12. சங்கரர் தேகமெல்லாம் தாங்காமல் வேர்வை என்ன
சாகாஸம் சொல்லாதேயும் சுவாமி
மெத்த சாகாஸம் பண்ணுதேயும் சுவாமி

13. கவிபாடும் பக்தனுட கவலைகள் தீர்க்கவென்று
வெறகு சுமந் தேனடி பெண்ணே
கட்டு வெறகு சுமந் தேனடி கண்ணே

14. கோமள வடிவான குந்தள நாயகியே
கோபங்கள் செய்யாதேடி மானே
என்மேல் பேதங்கள் எண்ணுதேடிதேனே

15. முத்துமூக்குத்தி நவரத்னமணி சுவலிக்க
கர்த்தன்பாதத்தை வந்து நாடினாள் தேவி
கண்டுவணங்கிக் கொண்டாடினாள்

16. சங்கீதங்கள் கோஷிக்க சங்கரியும் பூஜித்து
மங்களத்தாம்பூலம் மாற்றினாள் தேவி
தங்கக்கதவை மெள்ளச்சாற்றினாள்

17. மந்தஹாஸ சுந்தரி சிந்தை மகிழ்ந்தப்போது
கந்தங்கலந்து மார்பில் பூசினாள்
அதி சந்தோஷமாய் சாமரை வீசினாள்

18. ஆணிமுத்துமாலை ஹாரங்களுங்குலுங்க
மாணிக்கப்பொன் கவரி வீசினாள்
கையில் வீணை எடுத்து கீதம்பாடினாள்

19. ச்யாமள வடிவான சுந்தர நாயகிமேல்
காமதகனர் மெத்த மோகித்தார்
அதி பிரேமையுடன் உருகிப் பாவித்தார்

20. அஷ்ட லெட்சுமி பதியாம் அரி சகோதரியப்போ
இஷ்ட நாதரிடத்தில் சென்று களித்தாள்
அதிமட்டற்ற ஆனந்தம் கொண்டு சுகித்தாள்

21. பச்சைப்பதக்கம் மார்பில் உச்சிதமாய் ஜ்வலிக்க
அச்சுத சகோதரியும் மோகித்தாள்
அதி இச்சையுடன் பாவனை பாவித்தாள்.

ஸ்ரீபார்வதிப்ரமேசருடன்கைலையங்கிரிக்குச்செல்லுதல்

மற்றைநாளின்உதயத்திலே மங்கையைக் கைவசம்பண்ணிக்கொண்டு
பெற்றோருற்றாருடன் சொல்லிக்கொண்டு பார்வதிதேவியைக்கூட்டிக் [கொண்டு
கொஞ்சிக்கொஞ்சி மருவிமருவிக் கோடிவார்த்தைகள் சொல்லிக்கொண்டு
வெள்ளிமலையின் சமீபத்தினில் விடையைவிட்டுக்கீழிறங்கி
620. கைலாஸந்தன்னில்தேவியுடன் காக்ஷியுடனே இருக்கும்போது
சூரபத்மனின் ஹிம்சையினால் தேவர்களும் அவதிப்பட்டு
நீலாயதாக்ஷியுடனிருக்கும் நீலகண்டரிடத்தில்வந்து
ஆலஹாலவிஷத்தைபுஜித்து அன்றைக்கு ரக்ஷித்ததேவரன்றோ
கேடுசெய்திடும் அஸுரனைக்கொன்று காத்துரக்ஷிக்கவேணுமென்று
பாடுகள்சொல்லிமுறையிடவே ப்ரமசிவனுமாதரவாய்
மட்டுமரியாதைவார்த்தையினால் கஷ்டத்தைநீக்குவோமென்றுசொன்னார்
ஹிமயராஜகுமாரியுடன் சிவனுமந்தப்புரந் தனிலே

தேவவருஷத்தில் ஆயிரம்வருஷம் தேவியுடனே இருக்கும்போது
தேவர்கள் எல்லாருங்கூடிக்கொண்டு சிந்தைகலங்கிவிசாரத்துடன்
வேலவரும்பிறக்கவில்லை வெளியிலேசிவன் வரவில்லை
ஏதோஇந்தஅதிசயமென்று உம்பர்கள்எல்லாரும்எண்ணமிட்டு
பகவனையப்போதானனுப்பி பார்த்துவரச்சொல்லிப்போகச்சொன்னார்
தேவர்கள்சொல்லியனுப்பவுமே தடையில்லாமலேஅக்கினியும்
ஓடிவந்தாரவர் அச்சமில்லாதே உம்பர்பிரானண்டையிலே
எக்யமூர்த்தியைக்கண்டவுடன் எழுந்திருந்தம்மன்விரைவுடன்

சுப்பிரமணியர் அவதாரம்.

வெட்கத்துடனே பீதாம்பரத்தை மின்னொளிபோலேதரித்துக்கொண்டு
பொற்கதவின் மூலையிலே பூர்ணரூபி ஒதுங்கினின்றாள்
தேவியும்அப்புறப்பட்டபின்பு சிவனும்தம்முட வீரியத்தை
சூரர் அக்கினிகரத்தினிலே சாம்பமூர்த்தியும் விட்டுவிட்டார்
எக்யமூர்த்தியும் வாங்கியதை எடுக்கமாட்டாமலே தவித்து
பொறுக்கமாட்டாமல் அக்கினியும் பூர்ணகங்கையில் விட்டுவிட்டார்
தரித்தவுடனே கங்காதேவியும் தாங்கமாட்டாமல் தாபத்தை
சகிக்க ஆற்றாமல் கங்காபவானியும் சரவணையில் ஒதுக்கிவிட்டாள்
நாணற்புதரான ஓடையிலே நட்டநடுவில் ஒதுக்கிவிட்டாள்
ஆறுகுழியிலேதங்கி அது அந்த க்ஷணத்தில் ஜீவனுண்டாய்
ஆறுவிதமாகச் சூரத்தனத்துடன் அற்புதரூபங்களாச்சுது
வேதங்களாலும் அறியப்படாத வேணுகோபாலர் மருமக்களை
விஷ்ணுதேவர் மருமக்களும் வீறிட்டழுகின்ற வேளையினில்
கிருஷ்ணதேவர் நினைக்கவுமே கிருத்திகைதேவிகள் ஓடிவந்து
ஆறுகுழந்தையை வாரியெடுத்து ஆதரவுடனே பால்கொடுத்தாள்
தாங்கள்பெற்ற குழந்தைகளைப்போல தாராட்டிக்கொஞ்சிக் கொண்டிருந் (தாள்

பார்வதிதேவி தேவர்களை கோபத்துடன் சபித்தல்.

தேவர்கள்எல்லாருங் கூடிவந்து சாம்பமூர்த்தி குமாரர்தன்னை
காதலாகவே கண்டுகந்து கவலைவிட்டு மனமகிழ்ந்தாள்
பகவனாரும் போனவுடன் பார்வதிதேவி மனந்தளர்ந்து
கொள்ளாமனக் குறையுடனே குறைந்துபெருமூச்சு விட்டுக்கொண்டு
கோடிகாலம் தவமிருந்துநான் கூடினேன் சிவசங்கரரை
பூரணமாய்த்தவஞ் செய்திருந்தால் நான்புத்திரனையுண்டாகேனோ

தேவி அதரந் துடிக்கத்துடிக்கச் சிவந்தநயனஞ் சொலவே
ஆதிநாயகி அமரர்களைப்பார்த்து அதிகோபத்துடன் ஏதுசொல்வள்
பூஷணலோசனர் தன்னுடனே நான் பூரித்திருக்கின்ற வேளையினில்
நீதிதப்பியே எங்களையும் நீக்கிவைத்தீர்கள் அக்கினியால்
போதுமின்றுடன் அமரருக்கெல்லாம் புத்திரனில்லாமற்போகவென்றே
சாபத்தையிட்டம்மன் தேவர்களை சாம்பமூர்த்தியை விட்டுச்சென்றாள்
பார்வதிதேவியும் ஈசர்மேல் கோபமாய் படபடப்பாய் விரைந்துசென்றாள்
கையினால் ஈசர்தடவித் தணிக்க கையைத் திமிறிக்கொண்டு நடந்தாள்
(மன)ஸ்தாபத்தை நீக்கிப் பரமசிவன் ஆதரவாக அணைத்தாலும்
தேவிக்குச்சித்தம் திரும்பாமல் சிவன் முகத்தையும் பாராமல்
ஆஸனந்தன்னில் அமராமல் அந்தப்புரத்தினில் போகலுற்றாள்
கல்யாணிதேவியும் கோபமதாகவே நில்லாதுபோகின்ற வேளையினில்
பாதத்தைத்தூக்கி உதறிக்கொண்டு பார்வதியம்மனும் ஓடும்போது
சித்தடி ரத்னச் சிலம்பிலிருந்து தெறித்ததொன்பது நவரத்தினம்
பத்துக்கொன்று குறைய நவரத்தினம் பளிச்சென்று பின்னால் உதிரவே
உச்சிதமான மணியிலிருந்து ஒன்பதுபெண்டுகள் உண்டானாள்
முக்கண்ணனார் ஒன்பது பெண்டுகளைப்பார்த்து கிட்டக்கவாருங்கள் என்று [சொன்னார்
இஷ்டமாய் ஈசரழைக்கலுமே உமையவளுட வடிவம்போல்
மட்டற்றமாணிக்க பூஷணங்களும் வகைவகையாகத் தரித்துநின்றாள்
அத்தனைபேரும் அடுக்கடுக்காய் ஆதிசிவனண்டை வந்துநின்றாள்
சாம்பமூர்த்தியும் வேலவமூர்த்திக்கு சேனாபதிகள் உண்டாக்கவென்றே
பூரண கிருபை திருஷ்டியினாலே பார்த்தார் ஒன்பது பெண்களையும்
ஆதிமூர்த்தியும் அமிர்த திருஷ்டியால் அன்புடன்பார்த்த க்ஷணந் [தனிலே
பூரண கர்ப்பத்தை தரித்துவிளங்கி பிள்ளைகள் அத்தனை பேருமுண் [டாய்
கனத்து வயிறுபெருத்துக்கொண்டு காந்தியுடன்கூட நிற்கின்றதை
குதித்துப்போறவள் திரும்பிப்பார்த்து குடிகெட்டுப்போச்சுதென்றோ [டிவந்தாள்

தேவி பரமேசர்மேல் ஆயாஸமடைதல்.

சதித்துவிட்டார் நம்மையிவர் சக்களத்திமாரை வைத்துக்கொண்டு
விழித்துப்பார்த்தந்தபெண்களையும் வெடுவெடுத்தம்மன் ஏதுசொல்வள்
ஆரடி பெண்களா நிற்கின்றது எங்கள் ஆதிசிவனார் அண்டையினில்
சூடுசொரணை வெட்கமன்றியிலே துணிச்சலுடன் இருக்கையிலே

அருந்தவசு செய்தயளோ அக்கினிசாக்ஷியாய்க் கொண்டாரோ
வெகுகாலம் பரமசிவனுடன் வாழ்ந்துகொண்டு மிருந்தயளோ
ஆயிரங்காலம் பழகினவர்களும் அஞ்சிநடுங்கி இருப்பாளே
பட்டமகிஷி நானிங்கிருக்க சற்றும் மரியாதையில்லாதே
உத்தரவு மென்னைக் கேளாமல் கருப்பமும்நீங்கள் தரித்தயளே
அப்படித்தானே இருக்கட்டுமுங்கள் கருப்பங்கள்உங்கள்வயிற்றுடனே
சாபத்தையிட்டம்மன் சக்களத்திமாரை சாம்பமூர்த்தியைப்பார்த்துச் [சொல்வள்
ஏகதார விருதரென்றீர் இரண்டுபெண்டு எனக்கில்லையென்றீர்
பார்வதியே உன்னைத்தவிர பாரேன்ஒருத்தியை என்றுசொன்னீர்
ஈச்வரியேஉன்னைத்தவிர ஏருள்ஒருத்தியு மென்றுசொன்னீர்
சத்தியவாக்கியர் என்றும்மைச்சொன்னதைச்சுத்தமாக இப்போகண்டேனே
தத்துவஞ்சொல்லியே யோகீச்வராளுக்கு தாரகா உபதேசஞ்செய்தீர்
நித்தியப்பிரும்மசாரி போலஇருந்ததைநிச்சயமாயிப்போ கண்டேனே
அர்த்தனாரீசுவரர் என்றும்மைச்சொன்னதை வெட்டவெளிச்சமாய்க் [கண்டேனே
எத்தனைபொய்யும் பொரகடம் பூதஞ்சி எத்தனைவஞ்சனை செய்தாலும்
பர்த்தாவே தெய்வ மென்றெண்ணிக்கொண்டுநான் பொறுத்துக்கொண்டு [மிருந்தேனே
சக்கரபாணியைப்பெண்டாகப்பாவித்தீர் தமையனென்று சகித்திருந்தேன்
புத்திரன்ஒன்றையும் பெற்றுக்கொண்டீர் போனால்போகட்டு மென்றிருந் [தேன்
மூக்தி கங்காநதியை யழைத்துநீர் முடியின்மேலே தரித்துக்கொண்டீர்
கங்காதேவி இருந்தாலிருக்கட்டும் (நம்ம) தங்கையென்று சகித்திருந் [தேன்
இத்தனைபேரின்மேல் மோகமிருந்தால் எந்தனைவந்து நீர் வேட்பானேன்
இத்தனைபேரையும் அணையவேணுமென்று உம்பருக்குண்மையைச் [சொல்லிவைத்து
எப்போ இவளோடிப்போகப்போறளென்று இத்தனைபேரை யணைந்தீரோ
வெட்டியாகவே இங்கே இருந்து நான் வீணுக்குத் துக்கப்படுவானேன்
ஒன்பதுபெண்டும் உமக்காச்சே உமக்குக்குமாரனும் உண்டாச்சே
சங்கரிநான்செய்த தவங்கள் எல்லாம் சாம்பலில் ஆகுதியாய்ப் போச்சே
உதவேது உமக்கெனக்குமென்று உதறிக்கொண்டம்மன் ஓடினாள்

நவவீரர்களும் இலட்சம் சேனாதிபதிகளும் உற்பத்தியாகுதல்.

(ஈசர்) அண்டையில் ஒன்பதுபெண்டுகளும் நின்டுமுண்டாடும் வேளை [யினில்
அண்டர்கள் பூஷணரும் பார்த்துத்தேவி அண்டையிற்போய் வேண்டிகொள் [ளச்சொன்னார்
பார்வதிதேவி யருகில்வந்துபெண்கள் பாதபத்மந் தனைப்பணிந்து
கோர்வையாகவே நின்றுகொண்டம்மனை கூடிக்கொண்டு துதிக்கலுற்றாள்
இரக்கத்தோடம்மன் பெண்களைப்பார்த்து பிறக்க உத்தரவுங்கொடுத்

670. உறக்கவீறிட் டழுதுகொண்டுடனே ஒன்பது பிள்ளைகள் பிறந்தது
ஒன்பதுபிள்ளை பிறந்தவுடன் ஒவ்வொருரோமத்துக் கொன்றுவீதம்
ஒன்பதுலட்சங் குழந்தைகளும் ஒருநொடியினில் உண்டாச்சு
அத்தனைகுஞ்சு குழந்தைகளைக்கண்டு அலறிக்கொண்டந்தப் பார்வதியும்
மக்கட்டிமக்கட்டிஎன்றவள் மார்பினில் சிக்கெனச்சிக்கெனப் போட்டுக் [கொண்டாள்
வயிறு கொதிக்கிறதே வஞ்சனைசெய்து கெடுத்திரே
பயறு விதைத்தவர்களுக்கு பதராய் விளைந்தாப்போலாச்சுதே
சம்பா விளைத்தவருக்குச் சாவியாய்ப்போனாற்போ லாச்சுதே
நாலுபக்கம் விளைந்துசொரிய நடுச்சாவிபோனாப்போ லாச்சுதே
ஒருபானையின் சோற்றிலே ஒதுக்கரிசிபோ லாச்சுதே
675 ஒருகுலையின் காயிலே ஒல்லிக்காய் ஆனாற்போலாச்சுதே
மாலையைப்போட்டு தாலியைக்கட்டி வைப்பாட்டியாய் வைத்துக்கொண்டீரே
தொடுத்தமாலையைத்தோளிலேபோட்டுதெண்டப்பெண்டாகவேகொண்டீரே
சலிப்படைந்துநீர் என்மேலே சக்களத்திமாரைக் கொண்டீரே
ஒருகுழந்தை பிறக்கவேணுமென்று உம்மையடைந்ததும் வீணாச்சே
சற்றுப்போதானாலும் விட்டுப்பிரியாதே சிசுருஷைசெய்ததும் வீணாச்சே
போக்கிரி என்று அறிந்தும்எங்கள்பிதா போக்கிடங்கெட்டுக் கொடுத்தாரே
பாக்கியத்தை புஜிப்பனென்று எண்ணி பெற்றவரிங்கே மடுத்தாரே
உற்றார்உறவாரை எண்ணாதேநானும் உம்முடமனமுங் கோணாதே
(அரை) நாழிகையாகிலும் உம்மைப்பிரியாது நாயகரே பக்ஷமென்றிருந்தேன்
680. ஏதுக்கானாலும் என்னை இனிமேல் என்ன வருந்தி அழைத்தாலும்
வாதுக்கானாலும் உம்மமுகத்தை மறிச்சுமுழியேன் பார்த்துக்கொள்ளும்
சாமளரூபமும் வருத்தங்களை சங்கரர்பார்க்கச் சகியாமல்
அம்பிகையைக்கிட்ட வைத்துக்கொண்டு ஆறுதலாகவே சேதிசொல்வர்
மப்புத்தட்டியவர் முதுகினிலே மாருடன்சேர்த்து அணைத்துக்கொண்டு
சிங்காஸனத்தினில் வைத்துக்கொண்டு தேவிக்குச்சேதிகள் சொல்லிடுவர்

(உன்) தந்தைஹிமவான் உகப்பாய்உனக்கிட்ட தண்டைபர்டகம் சிலம்புகளில்
திடுதிடென்றுநீ ஓடியவேளையில் தெறித்ததொன்பது நவரத்தினம்
உன்னுடசாயல் அதனில்விளங்கவே உதித்தாள் ஒன்பது பெண்களப்போ
உன்னுட பிள்ளைகளு பகாரமாகமே கண்ணாலே பார்த்திட்ட தோஷமுண்டு
685.ஐந்துவிரலினால் தொட்டிருந்தேனானால் இந்தஅண்டத்தைஎல்லாம்விழுங்
என்னையுமிங்கே யிருக்கவொட்டாய் உன்னுடசேதியை நானறிவேன் [கிடுவாய்
உம்பருக்காகவே அம்புஜக்கண்ணரும் எடுத்தார் மோகினிவேஷத்தை
கண்டுகொண்டாடிநான் சக்கரபாணியை கட்டியணைத்ததும் ஏச்சாச்சே
அந்தசமயத்தில் ஐயனார்வந்து உதித்ததொனக்கிப்போ ஏச்சாச்சே
வையகமெல்லாம் ஓரடியகவே வாஸுதேவர் அளந்தவுடன்
பிரும்மாண்டமான கடமுடைந்து கங்கைகருவத்துடனே வந்தாள்
அண்டத்திற்கெல்லாம் உபகாரமாகவே அடக்கினேன் கங்கை கருவத்தை
பெண்டாட்டியாய் வைத்துகொண்டா யென்றென்னை போகவர நீ ஏசுகிறாய்
பிள்ளைஉனக்கிப்போ இருந்தால்போதுமே பர்த்தா உனக்கினி வேண்டாமே
690. என்று சொல்லிச்சிவ சங்கரரும் மஞ்சத்தைவிட்டுக் கீழேகுதித்து
துப்புரவான ரிஷபத்தின்மேலே தேவியை அழைத்து வைத்துக்கொண்டு
தண்ணீர்தளம்பிடும் பொய்கையினில் தாமரைப்பூவுள்ள ஓடைதன்னில்
புண்ணியவேளைதனிலே ஜனித்துப் பிறந்துவளர்கிறான் உன்குழந்தை
ஆறுகுழந்தையைப் பார்க்கலாமென்று அம்மனுடனே வரும்போது

பார்வதிதேவி ஆறுவடிவான குழந்தையை அணைத்து ஆறுமுகத்துடன் கூடிய ஒருகுழந்தையாக எடுத்துக்கொள்ளுதல்.

பார்வதிதேவி மனமகிழ்ந்து பாலகரைஎண்ண ஆவலுடன்
மாருக்குள்ளே நிறைந்திருக்கும் மன்மதன்கணை ஜயிக்கவைக்கும்
கொன்றைக்காய்போலவே தான்விளங்கும் கொங்கையிரண்டுஞ் சுரந்துவர
பொன்னுங்கலசத்தைப்போன்றஸ்தனத்திலே பொங்கிவழிந்திடப்பாலமுதம்
இரக்கமாகவே கன்றுக்குவேண்டி இரங்கிச்சுரந்த மடிபோலே
695. அருவிபோல பெருகிடும்பாலை அடிக்கையினால் அரக்கிக்கொண்டாள்
பிள்ளைப்பெறாத மலடிகளுக்குப் பெருகுமோ இப்படிப்பால்தானும்
உள்ளும்புறமும் நிறைந்தவரைப்பார்த்து உள்ளபடிக்குஉரையுமென்றாள்
தேவியும் இப்படிச் சொல்லலுமே சிவனும்மெள்ளச் சிரித்துக்கொண்டு
ஆடாடென்று ஆடினாயே ஐயனார்கோவில் பிடாரிபோலே
கூடாதென்று அலையக்குலைய கோபித்துக்கொண்டு நடந்தாயே
அனேகங்காலமாக அமரர்கள் அஸுரன்கையினால் அவதிப்பட்டு

சுவாமி யுந்தன்சரணங்கெதியென்று சந்ததமெந்தனை வேண்டினாள்
சூரனாய்ஒரு புத்திரனை தேவியே உன்னிடம் உண்டாக்கி
அஸுரசம்ஹாரம் பண்ணவென்று ஆயிரங்காலமிருந்தோமே
தேவவருஷத்தில் ஆயிரம்வருஷம் தேவியே நாமுமிருந்தோமே
வீரியம் வெளியாகுஞ்சமயத்தில் வந்துவிட்டாரே அக்கினியும்
ஓடிப்போனாய்நீ எந்தனைவிட்டு எங்கேவிடுவேன்நான் வீரியத்தை
பகவனார் கையிலேகொடுத்தேன் அவர்போட்டார் பவித்திர கங்கைதனில்
தாங்கமாட்டாமல் கங்காதேவியும் சரவணையில் ஒதுக்கிவிட்டாள்
நாணற்பயிரான திட்டினிற்குழந்தை நாராயணர் பாதுகாத்திருக்கார்
ஆறுகுழந்தைபிறந்து உனக்கிப்போ ஆதரவாகவளர்கின்றது
இஷ்டம்உன்மேல் பரிபூர்ணமாகவே முத்துக்குமாரனைத் தந்துவிட்டேன்
பிள்ளைஇருந்திட்டாற்போது முனக்கிப்போ பார்த்தாவுமினித்தேவையில்லை
வீணுக்குவீணாய் உழைத்தேனென்றுநீ வீணாய் வருந்திக் குதியாதே
ஒன்பதுபேரை யடைந்தேனென்றுநீ தம்பட்டம்போல இரைந்தாயே
உன்னைத்தவிரவே இன்னமொருத்தியும் என்னோடிருந்ததைக்கண்டாயா
அன்னியதேசத்துப் பெண்ணைவிசாரித்து அர்த்தங்கொடுத்துநான்
(கொண்டேனா
உன்னைப்போலாயிரம் பெண்டுகளும்ஒருநொடி நொடிக்கின்றபோதுக்குள்ளே
பன்னகபூஷணருக்கு நினைத்தக்கால் பஞ்சமோவேறு கிடையாதோ (இருய்
என்னத்தைக்கண்டுநீ இத்தனைபோதாக உத்தண்டமாய் வார்த்தைசொல்லு
இன்றுதுவக்கி உனக்கும்நமக்கும் இத்துடன் தீர்ந்ததுஎன்றுசொன்னார்
சொன்னவுடன் சிவசங்கரியும் இங்கிதமாகச் சிரித்துக்கொண்டு
என்னைவிட்டால்கெதி ஏதுஉமக்கு உம்முடசேதியும் நானறிவேன்
நானேஜகத்திற்கு நாயகிஎன்பதை நாலுவேதங்களுந் தானறியும்
மானாபிமானங்கள் ஏதுக்குமக்கு மனதுகுழம்பிமயங்குகிறீர்
போதும்உமக்கிப்போ கோபங்கள்ஏதுக்கு போதங்கெட்டவரைப்போல
பார்வதியை அரைநாழிகையாலும் பாராதிருக்கவும் மாட்டீரே
என்னமகிமை யிருந்தாலும்பெண்டுக்கு மன்னவரன்றிமகிமையில்லை
என்று சொல்லிஈசர் பாதபத்மத்தை ஏற்றித்தொழுதாள் பொறுக்கவென்றே
கையிற்குழந்தையும் வேணுமென்றுசொல்லிக் காலடியில்பணிந்துநின்றாள்
கையினால் தேவியை வாரியெடுத்து (காள) கண்டர் ரிஷபத்தி]ல் வைத்து
ஈகொண்டு
மங்களமான மகாமூர்த்தவேளையில் மைந்தரைக்காணவே வந்துவிட்டார்
பொன்னுங் குமாரனைக் கண்டவுடன்தேவி பேரானந்தமாக வாரியெடுத்து
ஆறுகுழந்தையைக் கண்டவுடனம்மன் ஆவலுடனே யணைத்துக்கொண்டாள்
ஆறுமுகம் பன்னிருகை யொருதேகம் அற்புதக்குழந்தை யாய்விளங்க

தேவி உற்றுப்பார்த்துத் திகைத்துசிவன்தான் இரண்டாய்ப்பிரிந்தாரோ
வேறேசந்தேகம் ஒன்றுமில்லையென்று வெட்டவெளியாயறிந்துக்கொண்டு
முத்துக்குமாரனைப் பக்கத்திலணைத்து பார்த்தாவுடன் கைலாஸம் வந்தாள்
பொன்னுங்குமாரனைக் கொண்டுவந்து (பூரண) சந்திரன்போலவே மெத்தையி
சுந்தரிதேவி வளாவிட்டுச் சகி தங்களுடனே தாராட்டினுள் (னில்

மங்கள வாழ்த்து.

லாலி மெட்டு.

1. லாலிமுத்தையலாலி ஓங்கார லாலிமால் மருகலாலி
லாலிசிவபுத்ரலாலி செந்தில்வளர் லாலிசிருங்காரலாலி
2. அம்பிகாநாத்ரான மஹாதேவர் கண்மணியான புத்திரன்
தும்பிக்கையான்பதத்தை அனுதினமும் சூடினேன் சென்னிமீதில்
3. கச்சுமுலைமாதுவள்ளி தெய்வானை காதலன் சூரகாலன்
பச்சைமயில் ஏறுகலாபன் சிவதிருப் பரங்குன்றன் துணையாகவே
4. சுந்திரக்கைலைநாதன் ஹிமகிரியில் தேவியுடனுல்லாஸமாய்
சிந்தைமகிழ்ந்திருக்கும்போது ஆறுமுக சுதன்வரவேமனதினைந் (தார்
5. கோடிரவி உதயஒளியாய் ஆறுமுடி கொண்டு ஈராறுபுஜமும்
தேடியே அமரர்போற்ற மால்மருகன் சிவந்தவடிவோடுவந்தான்
6. வந்தபாலகனை உமையாள் அன்புடனே வாரியே மடியில்வைத்து
விந்தையாய் உச்சிமுகந்தாள் மஹாதேவர் வேகவதிநீராடினுர்
7. வெண்புலித் தோலணிந்துபளபளென விபூதிக்கீற்றுமிட்டு
பண்புடன் மணிகள்சொர்னம் மறையோர்க்கு பாங்குடன் தானஞ் (செய்தா
8. கன்னிகாதானமீந்தார் சிலபேர்க்கு கன்றுடன் பசுவுமீந்தார்
அன்னதானங்களீந்தார் சிலபேர்க்கு ஆடையாபரணமீந்தார்
9. காசினியோர்கள்வாழி விண்ணுள்ள கடவுளர்முனிவர் வாழி
தேசமெங்கும் நீதிவாழி எங்கள்திருச்சுப்பிரமணியேந்திரன்வாழி

சோமாஸ்கந்தரைக் காணவேணுமென்று ஸுரகன்னிகைகள் கூடிவந்தார்
வாமதேவரின் பாலகரைக்கண்டு மகிழ்ந்து ஹாரத்திக் காப்பெடுத்தாள்
பன்னிரண்டாநாளின் உதயத்திலே பார்வதியாளுட பாலனுக்கு
வாஸனையான தைலமிட்டு மங்களஸ்நானம் பண்ணிவைத்தாள்
720. பரமசிவனும் பாலகனைப் பரிவாகமடியின்மேல் வைத்துக்கொண்டு
பன்னிரண்டுக் கொன்று குறைந்த ருத்ராளுடன்உம்பர் முனிவருங் கூடிக்
கொண்

முன்பாக அக்கினி நின்றுஜொலிக்க இந்திராதிதேவர்மலர்சொரிய
அந்தணர் வேதங்கள் ஓதிப்புகழஆறுசாஸ்திரமும் சொல்லி முழங்க
சுந்திரமூர்த்தியும் அந்தசமயத்தில் சுவாமி நாதர் வலச்செவியில்
கந்தனென்றும் சுப்பிரமணியனென்றும் கார்த்திகேயன் முத்துக்குமார
னென்றும்
ஷண்முகனென்றும் வேலவனென்றும் சொன்னார் செவியில் மூன்றுதரம்
கீர்த்தியாகின்ற நாமகர்மத்தை சாத்தி யானந்தமானபின்பு
மூர்த்தியானந்தர் உச்சியைச்சங்கரர் முகந்துகொண்டு மகிழ்ந்திருந்தார்
சேர்த்துப் பாலனை முத்தமிட்டுக்கொண்டு தேவியிடத்திலே தானுங்கொடுத்
725. கொடுத்தவுடனே குந்தளநாயகி பெருக்கமாய் இருகரத்தினால் தார்
ஜகத்பதியையும் வாங்கிக்கொண்டு அம்மன் திருமடியின்மேல் வைத்துக
டு
வலப்புறத்து ஸ்தனத்தின் பாலை திருக்கனிவாய் தனிற்கொடுத்தாள்
மகத்துவமான ஆதிசங்கரர் விருப்பமாகவே அந்தணர்க்கு
கொடுத்துசொர்ணங்கள் விதவிதமாகக் கோடிபசுவுந் தானஞ்செய்தார்
மதிக்கவே சொர்னம் ஆயிரங்கோடி வாரிவழங்கினார் பூரணமாய்
ஜகத்பதி சுப்பராயர்மண்டல முகத்தைப்பார்த்து மகிழ்ந்திருந்தாள்

பாலசுப்பிரமணியரின் பாலசோபை.

திருக்கலியாணத்தை சுவாமிக்குச்செய்து திருநாமங்களுஞ் சாற்றியபின்
ஜகத்பதிபாலசுப்பிரமண்யரின் திருவிளையாட்டைக் கண்டுகந்தாள்
சிவந்த அம்புஜம்போல சுவாமியின் பாதபங்கஜக்காந்தியும்
730. அமைந்ததண்டையும் சிலம்புவெண்டயம் அரும்புச்சலங்கை நூபுரம்
திசைகள் திக்கெட்டும் விளங்கிச்சோபிக்க சுப்பிரகாசமதாகவே
இடைதனில் அரைவடமும் கிண்கிணி ஒட்டியாணம் பட்டை அரைஞாணும்
அரைதனில் அரைச்சலங்கைத்தொங்கலும் மருங்கினில்கடுசூத்ரமும்
கனகபீதாம்பரமும் சுவாமிக்கு (சூர்யன்) உதயமானாற்போல் விளங்கவே
உதரநாபியில் அனந்தங்கோடி பிரமாண்டங்களும் அடக்கமாய்
அமைந்தவயிறும் தளதளென்னவே கமலஉந்தியுங் காந்தியுடன்
புனுகுதங்கத்துள் கந்தங்கலந்து பூசின திருமார்புதன்னில்
கதிரவன்வந்து உதயமானாற்போல் கண்டசரப்பளி பதக்கமும்
நவரத்தினமாலை பவழமாலையும் நாலுதிக்கிலும் விளங்கவே
735. இழைத்ததங்கத்தில் நவரத்தினங்களால்உருண்டமாணிக்கக்காரையும்
புலிநகத்துடன் சக்கரப்பதக்கமும் பூர்ணசந்திரனுதயம்போல்
பச்சைக்கல்லுடன் வஜ்ஜிரமிழைத்த பதக்கம் வரிசையாய்விளங்கவே
முத்துமாலையும் மோகனமாலையும் வஜ்ஜிரப்பச்சைக்கல்மாலையும்

சுந்தரமான வீரசங்கிலி கந்தர் கரத்தினில்விளங்கவே
பஞ்சாட்சரமாலை ஆயிரம் கந்தசுவாமி திருமார்பினில்
சங்கையில்லாமாலை சுவாமிநாதர் கண்டத்தில் பரிபூர்ணமாய்
உன்னதமாகநீண்டு உருண்ட பெருத்தசுவாமியின் கரத்தினில்
கங்கணத்துடன் குலுங்குந்தோள்வளை தங்கக்குஞ்சியுந் தாழித்தும்
ஜகத்திற்கெல்லாம் அபயங்கொடுக்கும் சுவாமிநாதர்கரத்தினில்
அடுக்குமோதிரம் பவித்திரங்கணையாழி உருட்டும் வைரத்தால்
நிறைத்துசுவாமி பத்துவிரலுக்கும் திசைகள் எட்டும்விளங்கவே
இந்துவினில் கோடானுகோடிகள் உதயமாகிய காந்தியைப்போல்
பவழம்போல சிவந்தஅதரமும் பொன்னும்பணம்போற் கனிவாயும்
நல்லமுத்துப்போல் தந்தஒளியும் நகையும் மின்னலொளிபோல
கொஞ்சிக்கொனகும் கிளிமூக்குப்போல கந்தருடைய நாசிகையும்
பஞ்சவர்ணக்கிளிகள்கோதும் பழத்தைப்போல அதரமும்
தங்கக்கண்ணாடிபோலசுவாமி கன்னக்கமலக்காந்தியும்
சொர்னத்தாழை மடலைப்போன்ற சுவாமிபன்னிருகாதிலும்
சங்குசக்கர முத்துக்கடுக்கனும் தளதளென்னப் பச்சையும்
சுந்தரமான தோள்புஜத்தினில் தொட்டுக்கொண்டசைந்தாடவே
மந்த ஹாஸமும் குளிர்ந்தபார்வையும் வளைந்தபுருவக்குறிகளும்
சந்திரப்பிரபை போன்றநெற்றியில் சாதிமாணிக்கச்சுட்டியும்
கந்தர் ஆறுமுடியில்நீண்ட கறுத்தகுழலினகற்றையும்
வந்துநெற்றியில் வளைந்து சுருண்டு சுந்தரமாகவிளங்கவே
ஷண்முகருடைய ஆறுசிரஸில் தரித்தமாணிக்கக்கிரீடமும்
மந்தஹாசமும் சுவாமியின் ஆறு மண்டலமுக காந்தியும்
மன்மதனில் கோடிகோடிப்பேர் வந்துஉதயமாய் நின்றாலும்
கந்தருடைய வடிவழகிற்கு கால்வாசி ஈடாகமாட்டாது
அந்தவடிவை ஆதிசேஷரே அளவிட்டாலுந் தானுமுண்டு
பின்பு ஒருவரால் கண்டுஅளவிடப் பிரம்மாதிகளாலுங்கூடாது
உற்பாதமானவடிவழகுடன் உதயமாய்வந்த பாலகரை
கற்பூரநாயகி கண்டுகளிப்புடன் ஒக்கலையிலம்மன் வைத்துக்கொண்டாள்
முத்துக்குமாரரை ஆறுமுகவரைமுத்தமிட்டுக் கண்ணிலொத்திக்கொண்
(டாள்

கந்தமூர்த்தியின் பால லீலை.

மூர்த்திமூவரும் முக்கோடி தேவரும் முனிவருங்கண்டு மகிழவே
கீர்த்தியாகிய மணியரும் பால லீலைகளையுங் காண்பித்தார்
மாற்றிலுயர்ந்தசொர்னத்தங்கத்தை சேர்த்து உருக்கிப்பூமியில்

வார்த்துவைத்த வடிவழகுபோல் வாஸுதேவர் மருமகனும்
தீர்க்கமாக ஒருக்களித்துக்கொண்டு திரும்பிக்கீழே குப்புறித்து
சாஸ்திரப்படி சேஷர்தன்னுட சிறுபடமெடுத்தாடுதல்போல்
மகத்துவமான சுப்பிரமணியர் மாரால்நகர்ந்த திருவழகை
அனுக்கிரகஞ்செய்யும் திருக்கரங்களை அழுந்தப்பூமியில் ஊன்றியவர்
சிறுத்த திருமுழங்காலை மடித்துத் தவிழ்ந்து சுவாமியும் வருகவே
எடுக்கவேணுமென்று ஈஸ்வரிசகியும் உகந்து சுவாமி முன்னே வந்தாள்
பெருக்கத்துடனே ஆறுமுகவரும் பின்திரும்பிப்பார்த்துச் சிரித்தவர்
எடுக்கவந்திட்ட தாவிகையினில் அகப்படாமலே மணியரும்
சுருக்காகத் தவிழ்ந்தோடியேவந்து தேவிமடியில் ஏறினார்
ஏறிமடிமேல் இருந்த சுவாமியின் கோடிமன்மத ரூபத்தை
வாரித்தேவி திருக்கரத்தினால் மடியினில்வைத்து முத்தமி(ட்)டு
பெருத்த அமிர்த கலசம்போன்ற எதிர்த்த கொங்கையின் பால்களை
வேலவர்திருவாயில் கொடுத்துமணியரை விடாயாற்றினார்
ஆறுமுகத்துள்ள பன்னிரண்டுகாதிலும் அசையமகர குண்டலங்கள்
கந்தரும்மனங்குளிர அம்மைக்கு காதாட்டி முகங்காண்பித்தார்
செம்பொன்உருட்டுத் திருக்கணையாழி திக்குகளெங்கும் விளங்கவே
சிவசங்கரிகண்டு கண்குளிரவே சப்பாணிகொட்டிக் காண்பித்தார்
கங்கணத்துடன் ஹஸ்தகடகமு முன்கைமுல்லாரியும் தாழித்தும்
சுந்தரமான பொன்னணி மின்ன தோள்வீசி முகங்காண்பித்தார்
தத்திக்குதித்துவிழுந்து பூமியில் தாவிமண்ணெல்லாம் அளைந்தவர்
எட்டிக்காலைவைத்துப் பத்தடி தத்தடியிட்டுக் காண்பித்தார்
கொட்டிக்கைகளை குதித்துக்கூத்தாடி குலுங்கநகைத்துச்சிரித்தவர்
முத்துமுத்தாய் வேர்த்தரும்ப நிர்த்தனம்பண்ணிக்காண்பித்தார்
ஒட்டியாணமும் பட்டை அரைஞாணும் இடையிற் கிண்கிணிமணிகளும்
கட்டினகடுசூத்திரத்துடன் கனகரத்தின அரைவடங்கள்
சலங்கை குலுங்கிச் சலசலென்க மகிழ்ந்து நிர்த்தனங்காண்பித்தார்

முத்துக்குமாரரின் திருவிளையாட்டு.

வனத்தினிலுள்ள மயில்கள் குயில்கள் மாடப்புறுவுடன் கிளிகளை
பிடித்துக்கூட்டினில் அடைத்து சுவாமியும் பஞ்சவர்ணக்கிளிகளை
கொடுத்து மதுரமானபழத்தை கிளிக்குவாசகம் பழக்கினார்
காட்டினிலுள்ள கரடிசிங்கம் வேங்கைப்புலியுடன் கலைகளை
பிடித்துஇழுத்துத் திருக்கரத்தினால் சுற்றியே விளையாடினார்
ஒத்ததோழர் கணநாதருடன் உகந்து வீதியில் ஓடிவந்தார்

மத்தகஜங்கட்டி சகடைநாலுள்ள மாணிக்கப்பொன்தேர்களில்
சித்தடிவைத்துத் தேரின்மேலேறி தோழமாருடன் கூடியே
பொற்பாதத்தினால் குந்துப்பிடித்து பிரிந்துநின்று பந்தடித்தவாள்
ஒருத்தருக்கொருவர் கோத்துக்கைகளை கட்டுந்தோரணம் போல நின்று
கட்டுக்கண்ணும்பூச்சிபொத்தி காணாமலோடி மறைந்தவாள்
உக்கிரமாக இரைந்துவெளிவந்து ஓடியேவிளையாடினாள்
கோடிமன்மதரூபமான கொஞ்சுங்குமாரனும் கோலத்துடன்
ராஜவீதியில் ஓடிவிளையாடி நவவீரர் லக்ஷஞ்சேனையுடன்
வீசிவீசித்தெருவில் நடந்து விழிகளினால் மிரட்டிக்கொண்டு
உலகத்திலுள்ள கன்னிகைமார்களும் மோகிக்க விளையாடினார்
விருத்தவேஷமெடுத்து கொண்டு முக்கிக்கொண்டு தடிஊனிக் [கொண்
பொக்குப்பொக்கென்று இருமிக்கொண்டு பொட்டையைப்போல் கண்ணை [மூடிக்கொண்
எப்படியப்பா வழிசொல்லுங்களென்று அப்படியும் விளையாடினார்
பச்சைக்குதிரையின் மேலேறி பொன்னுங்கடிவாளங் கைப்பிடித்து
இந்திரருலகம் சந்திரருலகம் எல்லாஉலகமும் சுற்றிவந்தார்
பட்டணமெங்கிலும் சுற்றியேமணியர் பரிபூரணமாய் விளையாடினார்
பச்சைக்குதிரையை விட்டிறங்கிவந்து பார்வதிதேவியைத்தான்பணிந்த
வந்துபணிந்த பாலகரை கண்டு மகிழ்ந்து பார்வதிதேவியும்
கைலாஸநாதர் புத்திரனுக்குக் கர்பூரஹாரத்திக் காப்பெடுத்தாள் [தா
திருஷ்டி தோஷங்கள் வாராமல்தேவியும் திருவந்திக்காப்புத் தானெடு
கற்பூரநாயகி கண்டுகளித்து ஒக்கலையில் தூக்கிவைத்துக்கொண்ட
முத்துகுமாரனை ஆறுமுகனை முத்தமிட்டுக் கண்ணிலொற்றிக்கொண்டு
நெற்றியிற்கண்ணைப்படைத்த சிவனிடம் நித்தியகல்யாணியுந்தான் கொ
த
அர்த்தனாரீசரும் வாங்கிக்கொண்டு ஆனந்தமாரோ டணைத்துக்கொண்டு
உச்சியைச் சங்கரர் மோந்துக்கொண்டு உல்லாசமாக அணைத்துக்கொண்டு
உற்றுற்றுப்பார்த்து மகிழ்ந்துகொண்டு ஈசர் உமைக்கும் நடுவினிலே
முத்துக்குமாரனை வைத்துக்கொண்டு நித்தியானந்த மடைந்திருந்தாள்

சக்திவேலாயுதமூர்த்தி சூரபத்மன் முதலியோரை ஸம்ஹரித்தல்.

அப்புறமுஞ்சிலநாட்கள் கழிந்தபின் சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல்
உச்சிதமாக உயர்ந்துவளர்ந்த சுப்பிரமண்யரைக் கண்டுமாதாள்
கட்டிக்கரங்களைக் கூப்பிக்கொண்டு சிவசங்கரரே இருவையாருமென்றாள்

785. அப்படியாகட்டும் என்று சதாசிவர் ஆறுமுகவனைக்கிட்டழைத்து
சக்திவேலாயுதங் கைக்கொடுத்து அஸ்திரமப்பிரோப தேசம்பண்ணி
வெற்றிவேலினால் மடியவடித்துவா ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம்
என் அப்பனே நீ ஜெயித்துவாவென்று ஆதிசிவனும் விடையளித்தார்
அப்படியாகட்டும் என்றுசொல்லிக்கந்தர் ஆனந்தமாகச்சிரித்துக்கொண்டு
பக்தியுடன் சிவசங்கரரை பார்வதியை நமஸ்காரம்பண்ணி
சட்டமாய்த்தம்பிமார் ஒன்பதுபேருடன் சேனாபதி வீரவாகுவுடன்
மட்டுமித மற்றசேனையும்மந்திரியும் வாசப்பிரதானி தளபதியும்
கட்டுமுட்டாகவே வந்திறங்கிக்கந்தர் கிரௌஞ்சபர்வதத்தைப் பிளந்
விஸ்தாரமாகவேபோயிறங்கியந்தவீரமாயேந்திரப் பட்டணத்தில்
790. அற்புதமாகவே யுத்தந்தொடுத்தார் ஆறுமுகவர் அஸுரராளுடன்
துஷ்டசூரனைத்தாருகனை சிங்கமுகனுடன்சேனைகளை
சக்திவேலாயுதம் விட்டுப்பிளந்து சூரபத்மனுட சேனைகளை
பன்மமாகமடியவடித்த சுப்பிரமண்யர்க்குச் சோபனம் சோபனம்
சக்திவேலாயுதம் பட்டுவிழுந்திட்டசூரபத்மனின் ஜீவனப்போ
விஸ்தாரமாக இரண்டாய்ப்பிரிந்துமுத்துக்குமாரர்க்கு வாகனமாய்
அக்கினிஆதித்தன் காந்திபோல்விளங்கிக்கொக்கோழியுடன் மயிலுமாய்
சுப்பிரகாசமாகஓடிவந்து சுவாமியின் பாதத்திலே பணிந்து
சச்சுதானந்த மூர்த்திதன்னுடன் சேர்ந்து போனான் சூரபத்மன்
அத்தைக்கண்டு அமரரெல்லாம் ஆனந்தசாகரத்திலமிழ்ந்தார் [நின்றார்
795. சுப்பராயருக்கு சொர்னபுஷ்பத்தை சொரிந்துபோற்றித் தொழுது

ஷண்முகமூர்த்தியின் திருக்கலியாணம்.

சொர்க்கலோகத்தில் கூட்டிவந்து சிங்காஸனத்தினில்வைத்து ஷண்முகரை
வைத்துஅமரர் அபிஷேகம்பண்ணி மணியரைச் சேனாதிபதிஎன்று
இந்திரன்கன்னிகை தெய்வானையை சுந்தரமூர்த்தி குமாரனுக்கு
மங்களமாகக்கொடுத்து கலியாணத்தை மாட்சிமையுடன் நடத்திவைத்தான்
சங்கையில்லாத மாணிக்கம்சொர்னம் சுவாமிக்கும் உச்சிதமாய்க் கொடுத்
தான்
மஞ்சக்காணியும் தெய்வயானைக்கும் மட்டுமிதமில்லாமற் கொடுத்தான்
சிங்காசனந்தன்னில் தெய்வானையுடன் மங்களமாகவே வீற்றிருந்தார்
வள்ளிநாயகி அம்மனும்வேடரின் கன்னிகையாக வளர்ந்திருந்தாள்
சுந்தரமுகவடிவுடனே வள்ளி தினைக்கொல்லை தன்னில் காத்திருந்தாள்
800. ஷண்முகர் அதை அறிந்துகொண்டு க்ஷணப்போதினில் அங்கு ஓடிவந்து
இன்பமுடனேகச். சுந்தரிவள்ளியை ஏற்றமாய்க் கலியாணஞ் செய்துகொண்டு
ஆறுமுகவரும் நாயகிமாருடன் ஆதிசிவனுமை யண்டை வந்தார்

கண்மூன்றுடைய கைலாஸநாதரை காமாக்ஷிதேவி சுந்தரியை
ஷண்முகர் தன்னுடதேவிமாருடன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்
கொஞ்சுங்குமாரனின் இரண்டுபுரத்திலும் வந்துபணிந்த மருமக்களை
மங்களமாகவே ஆசீர்வாதம்பண்ணி மாணிக்கமுத்தாரத்தி எடுத்தாள்
கண்டவுடனே ஆனந்தமாய் நீலகண்டரும் பார்வதியம்மனுமாய் (ருந்தாள்
அந்தப்புரத்தினிற் கூட்டிப்போய் ஆணிப்பொன் ஆஸனந்தன்னில் அமர்ந்தி

இச்சோபனத்தின் வைபவமும் மங்களவாழ்த்தும்

பார்வதிதேவி சாம்பமூர்த்திக்கு மாலையிட்ட வைபோகத்தை
805. பரதேவியுடனே சாம்பமூர்த்தி கூடியிருந்த கதைகளை
ஆறுமுகவர் பூரணமாய்வந்து அவதாரமான புதுமையை
தேவருக்கனுகூலமாகியே துஷ்டாளைத் துண்டித்தவீரத்தை
பூமிதேவியின் பாரமிறக்கி பிரஜையைரக்ஷித்த கிருபைகளை
ஆதிவேத வியாஸமுனியே அப்பாசாஸ்திரிரூபமாய்
பூமியில்வந்து அவதாரமாகி வேதாந்தவடிவாகியே
பாதிச்சோபனம்தன்னைச் சுயங்கட்டி பிரசித்தமாக்கியே ஜகத்தினில்
காலாந்தரத்தை அடைந்து சாம்பமூர்த்தி தன்னுடன் சேர்ந்தபின்பு
குறையானகந்தர்சோபனம் பாதியாயிருக்கலாகாதென்று
நிறைந்துசோபனம் பூரணமாயெங்கும் பரவஅம்மனும் எண்ணிக்கொண்டு
810. ஆதிபராசக்தியம்மனே அலமேலு அம்மாள் ஹிருதயத்தில்
அமிர்தம்போலெங்கும் பெருகவேவைத்து அந்தர்த்தானம் அடைந்தபின்
வேப்பத்தூர் அலமேலுஅம்மாள் வெங்கடேசருட கிருபையினால்
தீர்க்கமாகவே தேவிகலியாணச் சோபனந்தன்னைப்பூரித்தாள்
வாக்கினாலே அமிர்தம்பொழிந்து கூட்டிக்கட்டினமாலையை
சாற்றித்தேவியின் திருக்கழுத்தினில் சம்பூரணமான சோபனத்தை
வாக்கும்மனதும் குளிரவிளங்க வந்துசொல்லிக்கொண்ட பேர்களும்
தீர்க்கமான கருத்துடன்சொல்லிக் கற்றுக்கொடுத்தபேர்களும்
கேட்டுச்செவியும் மனமுங்குளிர்ந்து ஆனந்தமாகியபேர்களும்
815. மோக்ஷமடைந்து விசுவம்பரநாதர் சுவாமிபாதத்தில் சேருவாள்
மோக்ஷம்நெல்லிக் கனிபோல் கைவரும் முக்தியாகும் பலப்பழத்தை (ளுள்
தீர்க்கமாகவேதந்தேன் தந்தேனென்று ஸ்ரீ பார்வதி சத்தியமாகச்சொன்
மோக்ஷம்தந்த சிவராஜயோகிக்கும் முக்திக்கும் பராசக்திக்கும் சோபனப்
நாற்பத்தெண்ணாயிரத்தெட்டு ரிஷிகட்கும் பத்தினிமாருக்கும் சோபனம்
(சோபனப்
ஐம்பத்தாறுதேச ராஜராஜருக்கும் நன்மையுண்டாகவே சோபனம்
(சோபன

அறுபத்தாறுகோடி தீர்த்தமுதலான ஆதிகாவேரி கங்கைக்குஞ் சோபனம்
அண்டத்திலுள்ள ஜனங்களெல்லாரும் ஆனந்தமுக்தியடையவே சோபனம்
பக்ஷிக்குள்ராஜன் கெருடன்முதலாக அச்வத்தவிருக்ஷமனைத்திற்குஞ் சோ
(பனம்
அக்குரூரர்நாரதர்பிருங்கிமுதலானசிஷ்டப்பிரஜாளுக்குஞ்சோபனம்சோபன
820. வசிஷ்டர் அகஸ்தியர் பாரத்வாசர்முதல் மார்க்கண்டேய முனிவர்க் [ம்
[குஞ்சோபனம்
தருமபுத்திராதிகள் தாசரதிராமர் சதுர்முகர் நாராயணருக்குஞ் சோபனம்
ஆவுடையம்பிகை மீனுக்ஷியம்மை அழகிய சொக்கநாதர்க்கும் சோபனம்
அறம்வளர்த்திட்ட ஆனந்தமூர்த்திக்கும் ஐயாறப்பர்க்குஞ் சோபனம் சோ
(பனம்
சிதம்பரேசர் சிவகாமியம்மை தில்லைமூவாயிரத்தாருக்குஞ் சோபனம்
கச்சியில்வாழும் ஏகாம்பரநாதர்க்கும் காமாக்ஷி மகாதேவிக்கும் சோபனம்
விச்வநாதர் விசாலாக்ஷியம்மை மேனை பர்வதராஜர்க்கும் சோபனம்
சக்திக்கணபதி ஷண்முகர்தன்னுட தேவிமார் இருபேர்க்கும் சோபனம்
அஷ்டகஜத்துடன் திக்குப்பாலர்முதல் அக்கினி வாயு வருணர்க்குசோ
(பனம்
சுக்கிரன்சூரியன் சந்திரன்முதலாம் கின்னரகிம்புருடாளுக்கும் சோபனம்
825. மல்லிகைமுல்லை மந்தாரைமுதலாக வில்வந்துளஸிக்கும் சோபனம்
(சோபனம்
ஆதிமூர்த்தி கைலாஸநாதர்க்கும் அன்புள்ள பார்வதியம்மைக்கும்சோபனம்
அகண்டசச்சுதானந்த வடிவான ஆதிபிரமத்துக்கும் சோபனம் சோபனம்

ஓம் சுபம்.

மங்களம்.

ராகம் —— அசாவேரி.

சோமாஸ்கந்த மூர்த்திக்கு ஜெயமங்களம்——எங்கள்
சுந்தரியாள் மைந்தருக்கு சுபமங்களம்

சாமள ரூபிணிக்கும் சக்தி கணேசருக்கும்
காமதகனருக்கும் கந்தசுவாமி நாதருக்கும்

சரணங்கள்.

1. நவவீரர்களுடனே விளையாடும் வேலருக்கு
நான்முகனைச் சிறையில் வைத்திட்டலோலருக்கு

பிரணவமுபதேசித்த பாலசுப்பிரமணியருக்கு
தவமுனி அகஸ்தியர்க்கு சாஸ்திர முறைத்தவர்க்கு (சோம

2. தாருகன் சிங்கமுகன் டானுகோபன் முதலாய்
சூரனையும் வதைத்த சக்தி வேலாயுதர்க்கு
தேவசேனா பதிக்கு தெய்வானை மணாளருக்கு
வள்ளியை மணம்புரிந்த மயிலேறும் ஷண்முகர்க்கு (சோம)

3. அவுணர்கள் பயநீங்கி அரசாளுந் தேவருக்கும்
நவவீரர் லட்சருடன் நான்முகர் விஷ்ணுவுக்கும்
சகல ரிஷிகளுடன் சரஸ்வதி லெட்சுமிக்கும்
அகிலஜனங்களுக்கும் ஆதிபரதேவியர்க்கும் (சோம

ஸோமாஸ்கந்த மூர்த்தித்தியானம்:

"பலவகைய தெனவுரைக்கு முயிர்களுளும்
பாரினிடைக் காண்முளைகள் பயக்கு மாறு
நிலவியதென் றருமறைகள் நிகழ்த்தா நின்ற
நிருமலனைக் கௌரியொடுங் குமரன் றன்னை
இலகவணைத் திருந்தருளும் பெம்மானெம்மை
யிணையில்சிவ லோகத்தே யிருக்கச் செய்யுஞ்
சலசமல ரடியினைகொ டலைவன் றன்னைத்
தண்மலர்தூய்க் கரங்குவித்துத் தாழ்ந்து வாழ்வாம்'

ஓம் சுபம்.

Commercial Press, Madras, S. E.

விளம்பரம்.

R. S. சுப்புலக்ஷ்மி அம்மாளால்,
பிரசுரிக்கப்பட்ட புஸ்தகங்கள்.

1. வால்மீகி ராமாயணப் பாட்டும் ஞானராமாயணக் கப்பலும் (4-ம் பதிப்பு) ...	0	3	6
2. குசலவ வாக்கியம் (4-ம் பதிப்பு) ...	0	3	0
3. அனந்தங்காடு (4-ம் பதிப்பு) ...	0	2	0
4. ஸ்ரீபார்வதிஅம்மன் சோபனம் (3-ம் பதிப்பு) ...	0	4	0
5. வேதாந்தப் பாட்டுகளும், தினஸரி ஸ்தோத்திரங்களும் (2-ம் பதிப்பு) ...	0	2	0
6. ஜீவநாடகம் முதலிய சில அத்வைதப் பாட்டுகளும் பஞ்சீகரண மகா வாக்கியமும் (2-ம் பதிப்பு) ...	0	4	6
7. பஞ்சீகரண கட்டம் ...	0	0	6
8. சாவித்திரி பாடம் (3-ம் பதிப்பு) ...	0	1	3
9. ஸ்ரீ லலிதாம்பாள் சோபனமும் தேவி பாடமும் (3-ம் பதிப்பு)	0	5	0
10. ஐந்து கும்மிகள் (2-ம் பதிப்பு) ...	0	2	0
11. குறவஞ்சி { தர்மாம்பாள் குறம், வேதாந்தக் குறம், அகண்ட வெளிக்குறம் } ...	0	3	0
12. ஸ்ரீமகாபாரத வாக்கியம். விராட—உத்தியோக பர்வங்கள் (குசலவ வாக்கியம் போல் நடை) ...	0	10	0

மேற்கண்ட புஸ்தகங்களை இவ்விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

V. S. வாலாம்பாளம்மாள்,
12, தெற்கு மாடவீதி,
திருவல்லிக்கேணி, சென்னை.